**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு : 26-5-2015 | Issued : 26-5-2015

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, பிப்ரவரி 19, 2015—தொகுதி 76—எண் 2**

**Thursday the 19th February, 2015—Volume 76—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** | **[Price Rs. 3.00**

**19–2–2015**

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 209-268 |
| **2. தகவல் கோரல்—** | |
| உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு | 268 |
| **3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி | 268-280, 284-327, 330-371 |
| திரு. கடம்பூர் ராஜு | 269-270, 272-276 |
| *மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் | 271,279, 298-301,327 |
| திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் | 277-278 |
| *திரு. எஸ்.எஸ். சிவசங்கர் | 285-286, 288-290, 292-296, 314-318, 322-324, 326-327 |
| மாண்புமிகு திரு. அக்ரி எஸ்எஸ். கிருஷ்ணமூர்த்தி | 285, 340-341 |
| மாண்புமிகு திரு. பி. தங்கமணி | 286-287, 296-297,314, 350 |
| *மாண்புமிகு திரு. இரா. காமராஜ் | 289, 337-338 |

பக்கங்கள்

**3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் 290-293, 334-336

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா 293-294

திரு. மு.க. ஸ்டாலின் 297-298, 301-302

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 299-300, 302-313,315, 317, 321-322, 324-326, 347-349

*திரு. துரைமுருகன் 312-313

*மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி 318-323

*திருமதி எஸ். கணிதா சம்பத் 330-333

*திரு. வீ.பி. நாகைமாலி 333-337, 339-343

*மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு 334

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர் 339

*மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 341

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால் 342-343

திரு. கே. உலகநாதன் 343-345, 349-352

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 346-347

முனைவர் செ.கு. தமிழரசன் 352-361

திரு. ஆர்.என். கிட்டுசாமி 361-371



பக்கங்கள்

**4. அரசினர் தீர்மானம்**—

தே.மு.தி.க. உறுப்பினர்களை பேரவைப் பணிகளினின்று கூட்டத்தொடர் முழுவதும் தற்காலிகமாக நீக்கி வைத்தல் 280-282, 327-329

*மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் 280-282, 328, 329

**5. தே.மு.தி.க. உறுப்பினர்கள் பேரவைப் பணிகளினின்று கூட்டத்தொடர் முழுவதும் தற்காலிக நீக்கம்– மறுபரிசீலனை செய்தல்**— 282-284

திரு. மு.க. ஸ்டாலின் 282-284

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் 283-284

**6. திரு. வி.சி. சந்திரகுமார் உள்ளிட்ட தே.மு.தி.க. உறுப்பினர்கள்மீதான உரிமை மீறல் பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பிவைத்தல்**— 329-330

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் 329

**7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 371-372

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஜய, மாசி 7, திருவள்ளுவர் ஆண்டு–2046

## 2015 பிப்ரவரி 19, வியாழக்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*“எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்*
*திண்ணியர் ஆகப் பெறின்.”*

*ஒரு செயலைச் செய்யவேண்டும் என்று எண்ணி, எண்ணியதைச் செயல்படுத்துவதில் உறுதியுடன் இருந்தால், அவர்கள் எண்ணியபடியே அச்செயலில் மிகப் பெரிய வெற்றி அடைவார்கள்.*

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**16—**

### துணை மின் நிலையம்

***29806—திரு. கே.பி. பரமசிவம்:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2015 பிப்ரவரி 19

*(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், உகாயனூர் கிராமத்திற்குப் புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட உகாயனூர் கிராமத்திற்கு, 4 கி.மீ. தொலைவில் உள்ள பொங்கலூர் 110/33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திலிருந்து சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இத்துணை மின் நிலையத்தில் 110/33 கிலோ வோல்ட் 16 எம்.வி.ஏ. திறன்கொண்ட ஒரு மின்மாற்றியும், 10 எம்.வி.ஏ திறன்கொண்ட மற்றொரு மின்மாற்றியும் மற்றும் 110/11 கிலோ வோல்ட் 2x16 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின்மாற்றிகளும் உள்ளன. இவற்றின் உச்ச மின் பளு முறையே, 13 எம்.வி.ஏ. மற்றும் 25.54 எம்.வி.ஏ. ஆகும். மேலும், இத்துணை மின் நிலையத்தில் போதுமான திறன்கொண்ட மின்மாற்றிகள் உள்ளதால், பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், உகாயனூர் கிராமத்தில் புதிய துணை மின் நிலையம் அமைக்கவேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.*

**திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழ் சமுதாயத்தின் விடிவெள்ளியே! புதுயுகம் படைத்திடும் புனிதப் பாதையே! கழகத் தொண்டர்களின் உயிர் மூச்சே! (மேசையைத் தட்டும் ஒலி) துணிவின் மறு பெயரே! பேரறிஞர் அண்ணா, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் காட்டிய பாதையில் வெற்றி கண்டு வீறு நடைபோடும் புரட்சிப் பாதையே! "தமிழக மக்கள் என்றும் அம்மா பக்கம்; அம்மா என்றும் மக்கள் பக்கம்" என்பதற்கிணங்க, (மேசையைத் தட்டும் ஒலி) ஸ்ரீரங்கம் இடைத்தேர்தலில் மாபெரும் வெற்றியைப் பெற்றுத் தந்த தங்கப் பதுமையே! எங்கள் தாயே! மாண்புமிகு மக்களின் முதல்வர் அவர்களே, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர்*



2015 பிப்ரவரி 19]

*அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே, தங்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், உகாயனூர் ஊராட்சியில், பொங்கலூர் துணை மின் நிலையத்திலிருந்து சுமார் 6 கி.மீ. முதல் 7 கி.மீ. தொலைவில் உகாயனூர் கிராமம் அமைந்துள்ளது. இதனைச் சுற்றியுள்ள 10 கிராமங்களும் ஏறத்தாழ 5 கி.மீ. சுற்றளவில் அமைந்துள்ளன. இந்தப் பகுதிக்கு மிகவும் குறைவான மின்னழுத்தம் வருகிறது. பொங்கலூர் துணை மின் நிலையத்திலிருந்து வருகிற மின் பாதை ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்டதாகும். அதன் காரணமாக, விவசாய மின் மோட்டார்களும், தொழிற்சாலைகளில் உள்ள மின் மோட்டார்களும் அடிக்கடி பழுதடைந்து விடுகின்றன. மேலும், இந்தப் பகுதியிலுள்ள வீடுகளிலும், ஊராட்சியில் உள்ள தெருக்களிலும் மாலை ஆறு மணி முதல் இரவு 10 மணி வரை மின் விளக்குகள் சரிவர எரிவதில்லை. மேலும், கரைப்பூர் ஊராட்சியில் உள்ள 5 கிராமங்களிலும் இதே நிலை நீடிக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, உகாயனூர் கிராமத்தில் புதிய துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

*மேலும், அழகுமலை துணை மின் நிலையத்திலிருந்து குப்புச்சிபாளையம் ஃபீடர் பிரிக்கப்பட்டுள்ளது. இது புதியதாக அமைக்கப்பட்ட மின் பாதை. இந்தப் பாதையிலிருந்து 500 அடி தொலைவில் மின் பாதை உள்ளது. துணை மின் நிலையம் அமைக்கும் வரை இதிலிருந்து மின் பாதையை இணைத்தால், இப்போது ஏற்படும் மின் தட்டுப்பாட்டை ஓரளவிற்குப் பூர்த்தி செய்ய முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உகாயனூர் ஊராட்சியில் குறைந்த மின்னழுத்தம் இருப்பதாகச் சொல்கிறார்.*

[2015 பிப்ரவரி 19

அங்கே செய்யப்பட்டிருக்கின்ற மின் வசதியில் அப்படி குறைந்த மின்னழுத்தமோ மின்சாரப் பற்றாக்குறையோ ஏற்படுவதற்கு வாய்ப்பே இல்லை. ஏனென்று சொன்னால், அந்தப் பகுதியில் இன்றைக்கு இருக்கிற மின்சக்தித் திறன், உகாயனூர் கிராமத்திற்கு மின்சாரம் விநியோகம் செய்கிற பொங்கலூர் துணை மின் நிலையத்திலே, 110/33 கிலோ வோல்ட் வசதியும் இருக்கிறது; 110/11 கிலோ வோல்ட் வசதியும் இருக்கிறது. இரண்டு வசதிகளும் அங்கே இருக்கின்றன. அதைப்போல, 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட ஒரு மின்மாற்றியும், 10 எம்.வி.ஏ. திறன் கொண்ட ஒரு மின்மாற்றியும், 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட இரண்டு மின்மாற்றிகளும் என மொத்தம் 58 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகள் அந்தத் துணை மின் நிலையத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியினுடைய உச்சபட்ச மின் தேவை 110/33 கே.வி. 13 எம்.வி.ஏ.–ம், 110/11 கே.வி–ல் 25.54 எம்.வி.ஏ.–ம், ஆக மொத்தம் 38.54 எம்.வி.ஏ. திறன் மட்டும்தான் தேவை இருக்கிறது. இதுவரை அந்த அளவு மின்சாரம்தான் அங்கே பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது 58 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றி வசதிகள் அங்கே இருக்கின்றன. அங்கே இப்பொழுது உச்சபட்ச மின் தேவை 38.54 எம்.வி.ஏ. திறன்தான். ஆகவே, இன்னும் வரும் 8 ஆண்டுகளுக்கு மின்சார தேவை அதிகரித்தாலும்கூட, அதையும் எதிர்கொள்கின்ற அளவுக்கு, இன்றைக்கு அந்தப் பகுதியிலே போதுமான அளவுக்கு மேலாக கூடுதல் வசதி செய்யப்பட்டிருக்கிறது. இதுதான் உண்மை நிலவரம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, அந்தப் பகுதியிலே ஏதாவது தாழ்வழுத்த மின்சாரம் இருக்குமேயானால், அதற்கு இந்தத் துணை மின் நிலையம் காரணம் அல்ல. துணை மின் நிலையத்திலே இருக்கின்ற ‘Power Transformer’ என்று சொல்லப்படுகிற மின்மாற்றிகளினால் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. இதர Transformers, ‘Distribution Transformer’ என்று சொல்வார்கள்; அதாவது துணை மின் நிலையத்தில் இருக்கிற Transformers, Power Transformers ஆகும். அதைப்போல, மின் விநியோகத்திற்குப் பயன்படுத்துகிற டிரான்ஸ்பார்மர்கள், மின் விநியோக டிரான்ஸ்பார்மர்கள் ஆகும். இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கின்றது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, அந்தப் பகுதியிலே ஏதாவது குறைந்தழுத்த, தாழ்வழுத்த மின்சாரம் இருக்குமேயானால், அதற்கு துணை மின் நிலையம் காரணம்



2015 பிப்ரவரி 19]

அல்ல; அங்கே வசதிகள் இருக்கின்றன. மாறாக அந்தப் பகுதியிலே, புதிய டிரான்ஸ்பார்மர் வசதி ஏற்படுத்தவேண்டும் அல்லது பழைய கேபிள்களை மாற்றவேண்டும் என்று ஏதாவது, தொழில்நுட்பரீதியாக குறை இருக்குமானால் அல்லது புதிய மின்மாற்றிகள், அதாவது கூடுதலாக மின் விநியோகத்தில் பயன்படுத்தப்படுகிற மின்மாற்றிகளில் ஏதாவது பற்றாக்குறை இருக்குமானால், அதைக் கண்டறிந்து, அவற்றை நிறுவினாலே போதும். அதை ஆய்வு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன மின் தாழ்வழுத்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

**திரு. கே.பி. பரமசிவம்:** ஆய்வு செய்து மறுபரிசீலனை செய்கிறோம் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை நன்றிகூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள முக்கிய பகுதிகளான கருங்கல், கப்பியறை, மார்த்தாண்டம், குறும்பனை, வெள்ளிச்சந்தை போன்ற பகுதிகளில் மின் அழுத்தம் மிகவும் குறைவாக உள்ளது. சில நேரங்களில் மின் தடையும் ஏற்படுகிறது. ஆகவே, கப்பியறை, குறும்பனை, வெள்ளிச்சந்தை போன்ற பகுதிகளில் துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த ஊரிலே புதிய துணை மின் நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று கோருகிறாரோ, அவற்றை அவர் எழுத்துபூர்வமான

கோரிக்கையாக வைத்தால், அங்கே ஏற்படுகின்ற மின் அழுத்தத் தேவையைக் கருத்தில் கொண்டு, ஆய்வு செய்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறுகின்ற இந்த அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன் அவர்கள்.*

**திரு. து. முருகேசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்குளத்தூர் ஒன்றியத்திலுள்ள வளர்ந்து வரும் பெரிய ஊராட்சிகளில் ஊரப்பாக்கம் ஊராட்சியும் ஒன்றாகும். அந்தப் பகுதியில் சுமார் 30,000 மக்கள் வசிக்கின்றனர். அங்குள்ள மக்கள் குறைந்த மின்னழுத்தத்தின் காரணமாக பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். அங்கே ஒரு துணை மின் நிலையம் அமைக்கவேண்டுமென்று, ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துள்ளேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து அந்தப் பகுதிக்கு துணை மின் நிலையம் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்கள். ஆனால், அதற்கான ஆய்வுப் பணிகள் நடைபெறவில்லை. துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடமும் உள்ளது. அதனால் உடனடியாக அந்தப் பகுதியில் துணை மின் நிலையம் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே ஆய்வே செய்யப்படவில்லை என்று சொல்கிறார். அவர் எந்த அடிப்படையிலே இதைச் சொல்கிறார் என்று தெரியவில்லை. அங்கே இருக்கின்ற மின் ஆய்வு,* load-flow study *செய்வதெல்லாம் உங்களுக்குத் தெரியாது. உங்களுக்குத் தெரிவதற்கு வாய்ப்பில்லை. அதனால் உங்களுக்குத் தெரியாத விஷயத்தில், நீங்கள் அங்கே எதுவும் நடைபெறவே இல்லை என்று சாதிக்கக்கூடாது.*





*அதைப்போல, ஆய்வு நடத்தி இருக்கலாம், ஒருவேளை தேவை இருக்காது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, மீண்டும் ஒரு முறை, அந்தப் பகுதியிலே உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.*

*நான் இப்போதுதான் ஒரு பதிலிலே சொன்னேன்; துணை மின் நிலையம் அமைத்துத்தான் தாழ்வழுத்த மின்சாரப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று அவசியமில்லை. சில நேரங்களில் புதியதாக துணை மின் நிலையங்கள் அமைக்கின்ற சூழ்நிலை இருந்தால், அது அமைக்கப்படும் அல்லது துணை மின் நிலையங்களில் போதிய வசதிகள் அல்லது மின்மாற்றி வசதிகள் செய்யப்படும். அங்கே போதிய மின்மாற்றிகள் இல்லாமல் இருந்தால், விநியோகத்திலே தாழ்வழுத்த மின்சாரப் பிரச்சினைகள் வரக்கூடும். ஆகவே, அங்கு இருக்கிற உண்மை நிலையைக் கண்டறிந்து, அதற்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறுகிற இந்த அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பகுதியையும் நிச்சயமாக ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**17—**

### புறவழிச் சாலை

***3032—திரு. பி.வி. கதிரவன்:**

*மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உசிலம்பட்டி நகருக்குப் புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[2015 பிப்ரவரி 19

உசிலம்பட்டி நகருக்குப் புறவழிச் சாலை அமைப்பதற்கான கருத்துரு மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி வளர்ந்து வருகின்ற நகரம். அதுமட்டுமல்ல; மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களிலிருந்து கேரளாவிற்குச் செல்கின்ற ஒரு முக்கிய சாலை இது. நீண்ட நாட்களாக இந்தப் புறவழிச் சாலை அமைப்பதற்கான கருத்துரு மத்திய அரசிடம் இருந்து வருகிறது என்ற செய்தியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். விரைவிலே அந்தப் புறவழிச் சாலை அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி நகருக்கான புறவழிச் சாலை அமைக்கின்ற பணியின் நேர்பாடு குறித்த கருத்துரு மத்திய தரைவழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய தரைவழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் முதன்மைப் பொறியாளர் கள ஆய்வு மேற்கொண்டு, உசிலம்பட்டி நகரம் வளர்ச்சி அடைந்ததால் மாற்று நேர்பாடு கருத்துருவை ஆய்வு செய்யுமாறு கேட்டுக்கொண்டபடி, மேலும் இரு நேர்பாடு கருத்துருக்கள் தயார் செய்து மண்டல அலுவலர், தரைவழிப் போக்குவரத்து அலுவலகம், சென்னை அலுவலகக் கருத்துருவுடன் மத்திய தரைவழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு, மைய அரசின் பரிசீலனையில் உள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன், உசிலம்பட்டி நகருக்குப் புறவழிச் சாலை அமைப்பது குறித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2015 பிப்ரவரி 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. அதை விரைவிலே முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல; தரமான சாலைகள் வேண்டும் என்பதற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்குட்பட்ட சாலைகள் நெடுஞ்சாலைத் துறைவசம் ஒப்படைக்கப்படுகின்றன. அப்படி ஒப்படைக்கப்படும்பொழுது, அதற்கான நிதியும் ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், உள்ளாட்சித் துறையில் இருக்கின்ற சாலைகளை, நெடுஞ்சாலைத் துறை எடுத்து தரமான சாலைகளாக அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிக அளவில் பேருந்துகள் செல்கின்ற ஊராட்சி ஒன்றியச் சாலைகள் இன்றைக்கு கண்டறியப்பட்டு நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்கப்படவுள்ளன. தேவையான நிதி கிடைக்கப்பெற்றவுடன், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறுகிற இந்த அரசு நிறைவேற்றும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

**திரு. க. தினகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சூலூர் தொகுதிக்குட்பட்ட நாகப்பட்டினம் முதல் கூடலூர் வரை உள்ள திருச்சி சாலை; சூலூர் தொகுதியிலே இருக்கின்ற காங்கேயம்பாளையம் முதல் சிந்தாமணி வரை உள்ள சாலை சுமார் 7½ கிலோ மீட்டர் அளவிற்கு விரிவாக்கப்படாமல், குறுகலாக இருக்கின்றது. இதன்காரணமாக அங்கே அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன; உயிரிழப்புகளும் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதை ஏற்கெனவே நான்

சட்டமன்றத்திலே கூறியிருக்கின்றேன். மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்றும், அவசியத்தைக் கருத்தில் கொண்டும் அந்தச் சாலையை விரிவாக்கிக்கொடுக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோர் ஆண்டும் அரசு குறிப்பிட்ட அளவிற்கு சாலைகளை விரிவுபடுத்தி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சூலூர் பகுதியிலே 7½ கிலோ மீட்டர் அளவுக்குச் சாலையை அகலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அங்கே ஆய்வு செய்து, அங்குள்ள போக்குவரத்து நெரிசலைக் கணக்கிட்டு, வருகின்ற காலங்களில் நிதிநிலைக்கு ஏற்ப அரசு பரிசீலிக்கும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.*

*முற்பகல் 10–15*

**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதியில் குமாரபுரம், பெருஞ்சிலம்பு ஆகிய சாலைகள் மிகவும் குண்டும்குழியுமாக உள்ளதால் சாலை விபத்துகள் தொடர்ந்து ஏற்படுகின்றன. இதனால் பொது மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இந்தச் சாலையை நபார்டு வங்கி நிதியுதவித் திட்டத்தின்மூலம் 2012–2013 ஆம் ஆண்டில் மேம்பாடு செய்வதற்கு உத்தேச மதிப்பீடு ரூபாய் 115 இலட்சம் செலவில் தயாரிக்கப்பட்டு, அரசின் ஒப்புதலுக்கு நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் துறை மூலமாக அனுப்பப்பட்டது. ஆனால், இதுவரையிலும் ஒப்புதல் வழங்கப்படவில்லை. ஆகவே, குமாரபுரம், பெருஞ்சிலம்பு சாலைப் பணிக்கு மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கி, சாலையைச் சீர் செய்து தர முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியில் விபத்துகள் ஏற்படுவதாகச் சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், நெடுஞ்சாலைத் துறைக்கு அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.1,183.52 கோடியும், 2007–2008 இல் ரூபாய் 729.20 கோடியும், 2008–2009 இல் ரூபாய் 1,015.19 கோடியும், 2009–2010 இல் ரூபாய் 1,148.15 கோடியும், 2010–2011 இல் ரூபாய் 1,930.85 கோடியும், ஆக மொத்தம் 6,006 கோடி ரூபாய்தான் கடந்த ஆட்சியின் ஐந்தாண்டுக் காலத்தில் நெடுஞ்சாலைத் துறைப் பணிகளுக்கென நிதி ஒதுக்கப்பட்டது.

ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, தமிழகத்திலுள்ள சாலைகளையெல்லாம் சீர் செய்ய வேண்டுமென்பதற்காகவும், அவை சிறப்பாக அமையவேண்டும் என்பதற்காகவும், 2011–2012 ஆம் ஆண்டில் ரூபாய் 1,900 கோடியும், 2012–2013 ஆம் ஆண்டில் ரூபாய் 2,262 கோடியும், 2013–2014 ஆம் ஆண்டில் ரூபாய் 3,255 கோடியும், 2014–2015 ஆம் ஆண்டில் ரூபாய் 3,300 கோடியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆக, கிட்டத்தட்ட 11,698 கோடி ரூபாய் நெடுஞ்சாலைத் துறைப் பணிகளுக்காக அதிக அளவில், (மேசையைத் தட்டும் ஒலி) நிதியை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நபார்டு வங்கி நிதியுதவி திட்டத்தின்கீழ், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இன்னும் பணிகள் தொடங்கப்படாமல் இருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை ஆய்வு செய்து, அந்தச் சாலையைச் சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

[2015 பிப்ரவரி 19

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரத்திலிருந்து தூத்துக்குடி செல்லக்கூடிய கிழக்குக் கடற்கரை சாலையிலே சர்க்கரைகோட்டை கண்மாய்ப் பகுதியிலே சாலைகள் மிகச் சிறப்பாகச் சீரமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அதைக் கடந்த பிறகு, கீழக்கரை வரை, அதைத் தாண்டிய பிறகும்கூட, கிழக்குக் கடற்கரைச் சாலை மிகவும் பழுதுபட்ட நிலையிலே இருக்கிறது. அதைச் சீரமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, நிதிநிலைமைக்கேற்ப சாலைகள் சீர்செய்யப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தச் சாலை பழுதடைந்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எதிர்காலத்தில் நிதிநிலைமைக்கேற்ப அந்தச் சாலையைப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**18—**

## புதிய கட்டடம்

*46821—**திரு. எம்.கே. செல்வராஜு:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?



2015 பிப்ரவரி 19]

**மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2012–2013 ஆம் ஆண்டில் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் ஐந்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு ரூபாய் 7.5 கோடி செலவில் கட்டடம் கட்டப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பிற்கிணங்க, சேலம் மாவட்டம் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு, சேலம் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்திலேயே இடம் தேர்வு செய்யப்பட்டு, அங்கே கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு அவர்கள்.

முற்பகல் 10–20

**திரு. எம்.கே. செல்வராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். வளம் கொண்ட நாட்டுக்கு வறுமை தந்த அரசியலை, சுத்திகரிப்பு செய்திடவே, சூளுரைக்கும் சுடரொளியே! மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) சாதியும், சதியும் மதப் பகையும் இல்லா சமத்துவ தேசம்காண சங்கத் தமிழ் பூமி தந்த சத்தியமே! தேசம் காத்திட தேன் தமிழ் ஈந்த திராவிடத்துப் பாதையே! திருவரங்கத்து கீதையே! ஈரடியால் உலகளந்த இறைவன், ஈரிலையால் தேசம் ஆள ஈன்றிட்ட பேரறிவே! ஈகையின் இயக்கமாகி, வாகையே இலக்காக்கி, அன்பை அறமாக்கி, ஆற்றலை ஆயுதமாக்கி, அரசாட்சி நடத்தி வரும் அன்னைத் திருமகளே! பெரியாரின் பேரறிவும், அண்ணாவின் கனிவும், மக்கள் திலகத்தின் பரிவும் ஒருங்கே அமையப்பெற்ற மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் சூதுமதியை வென்றிடுவார்; நிச்சயம் வெற்றி பெறுவார்; தமிழ் மண்ணைக் காத்திடுவார், 10 கோடி தமிழ் மக்களையும் காத்திடுவார். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் இந்த அவைக்கும் வந்திடுவார், தலைமையும் ஏற்பார், நிச்சயம் தலைமை ஏற்பார். (மேசையைத்

தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவாற்றலால், தூய்மையான தொண்டு உள்ளத்தால் நேற்று 37 பாராளுமன்ற உறுப்பினர்கள், இன்று ஸ்ரீரங்கம், நாளை 234 சட்டமன்ற உறுப்பினர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது மாண்புமிகு அம்மா அவர்களின் இலட்சியம்; வெல்வது நிச்சயம் என்று கூறி இரு கரம் கும்பிட்டு வணங்குகிறேன். கும்பிட்ட கைகள் விலகும் முன்பே வான்மழை பொய்த்தாலும், வள்ளல் தாய் மனம் பொய்க்காது என்பதை நிரூபிக்கும் வகையில், சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்பட்டு, பணிகள் முடியும் தருவாயில் உள்ளன என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**19—**

### அங்கன்வாடி மையக் கட்டடம்

*__38295—திரு. பொன். ராஜா:__

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், திருப்பாலைவனம் ஊராட்சி, புதுச்சேரிமேடு பகுதியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுச்சேரிமேடு முதன்மை அங்கன்வாடி மையம் 1982–ல் துவக்கப்பட்டு, தனியார் வாடகையில்லா கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்திற்குக் கட்டடம் கட்ட சர்வே எண் 366–ல் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சிட்டா அடங்கலும் பெறப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே புதிய சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும் என்று மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவிப்பின்கீழ் இந்த





மையத்திற்குக் கட்டடம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.

**திரு. பொன். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் மனித தெய்வம், மக்களின் முதல்வர் அம்மா அவர்களை வணங்கி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், புதுச்சேரிமேடு பகுதியில் அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி கூறியதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொன்னேரி பேரூராட்சி, 15–வது வார்டில் தொழுநோயால் பாதிக்கப்பட்ட சுமார் 60 குடும்பங்களைச் சேர்ந்த, 250 நபர்கள் வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு அந்தப் பகுதியிலே ஒரு சமூக நலக் கூடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலக் கூடம் பேரூராட்சிப் பகுதியில் வேண்டுமென்று கேட்கின்றார். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களுக்குத் தனியாக ஒரு கேள்வி எழுப்பி, பதிலைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். தொழுநோயாளிகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வது சமூக நலத் துறை. ஆனால் அவர்களுக்குச் சமுதாயக் கூடம் கட்டுவது என்றால், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களுடைய பொறுப்பிலுள்ள உரிய துறையின் நிதியிலிருந்து கேட்டுப் பெற்று, சமுதாயக் கூடம் கட்டிக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2015 பிப்ரவரி 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.

**திரு. பொன். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலக் கூடம் கட்டித் தர வாய்ப்பு இல்லை என்றால், சமூக நலத் துறை மூலமாக அங்கே ஒரு முதியோர் இல்லம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் இல்லம் என்பது வேறு; தொழுநோயாளிகளுக்கான இல்லம் என்பது வேறு. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஒருங்கிணைந்த முதியோர் வளாகம் என்ற வகையில் தமிழ்நாடு முழுவதும் முதியோர் இல்லங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. தொழுநோயாளிகளுக்கென்று தனியாக இல்லங்கள் துவங்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற காரணத்தினால், தொண்டு நிறுவனங்களைத் தொடர்புகொண்டு அவர்கள் மூலமாக அந்தப் பகுதியிலே கட்டடம் கட்டுவதற்கு வேண்டிய அடிப்படை வசதிகளை நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

*முற்பகல் 10–25*

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கும் திருவிடைமருதூர் சட்டமன்றப் பேரவைத் தொகுதியில் அங்கன்வாடி மையங்களில் பணிகளை மேற்கொள்ள சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியினை ஒதுக்கிட ஏதுவாக, மாவட்ட அளவிலான அதிகாரிகளிடம் எந்தெந்த மையங்கள் பழுதடைந்துள்ளன என்று பட்டியல் கேட்டபோது, 58 மையங்கள் பழுதடைந்து, பாழடைந்த நிலையில் இருக்கின்றன என்று பட்டியல் தந்தார்கள்.



2015 பிப்ரவரி 19]

அதனடிப்படையில் ஆண்டுக்கு நான்கு புதிய மையங்கள் என்ற வகையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இதுவரை 16 மையங்களுக்கு நிதி வழங்கியிருக்கிறேன். எஞ்சிய ஓராண்டில் இன்னும் 4 மையங்களுக்கு வழங்கவும் இருக்கிறேன். ஆனால், மீதம் இருக்கக்கூடிய மையங்களில் பணிகளை மேற்கொள்ள சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி பற்றாக்குறையாக இருக்கின்றது. என்னுடைய தொகுதி திருபுவனம் பேரூராட்சியில், காங்கேயம்பேட்டை என்கின்ற பகுதியில் இருக்கின்ற அங்கன்வாடி மையம் மிக மிகப் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. எனவே, தொகுதி மேம்பாட்டு நிதியைக் காரணம் காட்டி அங்கன்வாடி மையத்திற்கு நிதியொதுக்குவதைத் தவிர்த்துவிட்டு, பழுதடைந்த மையங்களுக்குப் பதிலாக புதிய அங்கன்வாடி மையங்கள் கட்டித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எங்கெங்கு பழுதடைந்த கட்டடங்கள் இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் சரி செய்வதற்கும், சொந்தக் கட்டடம் இல்லாத அங்கன்வாடி மையங்களுக்குச் அவற்றை கட்டுவதற்கும் உத்தரவிட்டு, அதனடிப்படையிலே கணக்கிடப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கணக்கின்படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மட்டுமல்ல; மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமையின் அடிப்படையிலேயும் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலே மட்டும் அங்கன்வாடி மையங்கள் கட்டப்படுவதில்லை. இதற்கும் மேலாக குழந்தைகளை நேசிக்கக்கூடிய தொண்டு நிறுவனங்கள்கூட அங்கன்வாடி மையங்களைக் கட்டித் தருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எந்தப் பகுதியில் உடனடியாகக் கட்டப்பட வேண்டுமென்று குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவைப் பெற்று நடவடிக்கை

[2015 பிப்ரவரி 19

*மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.*

**திரு. கு. நல்லதம்பி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 61-வது வட்டம் நரியங்காடு, வரதராஜபுரம் பகுதியில் புதிய அங்கன்வாடி மையம் கட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியொதுக்கீடு செய்து நீண்ட நாட்களாகியும், இன்னும் அதற்கான பணிகள் தொடங்கப்படவில்லை. ஏனென்றால், அங்கு ஏற்கெனவே அங்கன்வாடி மையம் இருந்து, பழுதடைந்து இடிக்கப்பட்டுள்ளது. அது விரைவில் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 61-வது வார்டு என்று சொன்னார். தவிர, 61-வது வார்டிலே நிறைய மையங்கள் இருப்பதால், எந்தப் பகுதியிலே அவர் பணம் தந்து அங்கன்வாடி மையம் கட்டப்படாமல் இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். ஒரு வார்டிலே ஒரு மையம் மட்டும் இருக்காது. கிட்டத்தட்ட 50, 60 மையங்களுக்கு மேலாகத்தான் இருக்கும். எங்கு, எந்த வார்டில் அந்தப் பழுதடைந்த கட்டடம் இருக்கிறது என்பதையும், அது குடிசை மாற்று வாரியத்தினுடைய பகுதியா என்பதையும் குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், உடனடியாக அதைக் கவனத்திலே எடுத்துக்கொண்டு, அரசு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*



2015 பிப்ரவரி 19]

**20—**

**பொறியியல் கல்லூரி**

***41084—திரு. சு. மாதேஸ்வரன்:**

*மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆத்தூர் தொகுதியில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் புதிதாக அரசு பொறியியல் கல்லூரி அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

**திரு. சு. மாதேஸ்வரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாட்சிமைதாங்கிய தமிழகத்தினுடைய மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாத மலர்களை வணங்குகிறேன்.*

*தமிழக வரலாற்றிலேயே முதல் முறையாக பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநிலம் தழுவிய மூன்று இடங்களை பெற்ற பள்ளிகளும் ஆத்தூர் தொகுதியைச் சாரும். அத்தகைய தொகுதியிலே திறமையாகப் படிக்கின்ற பள்ளி மாணவ மாணவிகள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் சென்ற 2013–2014 ஆம் ஆண்டிலே பரிசு பெற்றிருக்கிறார்கள். அங்கிருக்கின்ற பள்ளிகளிலேயே* ADW School*–ம் நூறு சதவிகிதம் தேர்ச்சி பெற்றுள்ளது. இது பின்தங்கிய பகுதியாகும். ஆகவே, இதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்வரும் காலங்களிலே பல்துறை சார்ந்த தொழில்நுட்பக்*

கல்லூரியையாவது வழங்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–30

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், 577 பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. அரசு பொறியியல் கல்லூரிகள் 10–ம், அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் 3–ம், சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் 546–ம், அண்ணா பல்கலைக்கழகப் பொறியியல் கல்லூரிகள் 18–ம் என ஆக மொத்தம் 577 கல்லூரிகள் இருக்கின்றன. மாணவர்கள் படிப்பதற்கு வசதியாக, 2,92,042 இடங்கள் இருக்கின்றன. ஆனால், சென்ற ஆண்டு பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று சொன்னால், 1,67,082 ஆகும். இந்த நிலையில் ஏற்கெனவே மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளில் படிக்க வசதியாக 1,24,960 காலியிடங்கள் இருக்கின்றன.

அதோடுமட்டுமல்லாமல், சேலம் மாவட்டத்தில் 22 பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. சேலம், கருப்பூரில் ஓர் அரசு பொறியியல் கல்லூரி இருக்கிறது. அந்த அரசுப் பொறியியல் கல்லூரியில் 52 காலியிடங்கள் இருக்கின்றன. இந்நிலையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போன்று ஒரு பொறியியல் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், சுமார் ரூ.100 கோடி தேவைப்படுகிறது. ஏற்கெனவே மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தில் கிராமப்புறங்களில் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய, பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களின் நலனைக் கருதிதான், தமிழக அரசியல் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு தமிழகத்திலே 53 கல்லூரிகளைத் தந்து, தமிழகத்திற்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றில் 32 கல்லூரிகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் ஆகும். 11 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளைத் தொடங்கியிருக்கிறார்கள்; அதோடுமட்டுமல்லாமல், 4 அரசு பொறியியல் கல்லூரிகளைத் தொடங்கியிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், 10 பொறியியல் கல்லூரிகள்





இருக்கின்றன. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் 6 பொறியியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மேலும் சொல்லவேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் 5 அரசு பொறியியல் கல்லூரிகள் தொடங்கப்பட்ட வரலாறு, மிகப் பெரிய வரலாறு ஆகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பொறியியல் கல்லூரி இல்லையென்று சொன்னாலும்கூட, பலவகை தொழில்நுட்பக் கல்லூரி வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு 11 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளைத் தந்து, அந்தக் கல்லூரிகளுக்கெல்லாம் கட்டடங்கள் வழங்கி, தமிழகத்தில் மாணவர்களின் எண்ணிக்கை விகிதம் உயருவதற்குக் காரணமாக இருந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை, அரசு எதிர்காலத்தில் நிதிநிலைக்கு ஏற்ப பரிசீலித்து முடிவெடுக்கும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.

**திரு. சு. மாதேஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. அதுபோல் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நன்றாகப் பயிற்றுவித்து, தமிழக வரலாற்றில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த அந்தப் பள்ளியின் ஆசிரியர் பெருமக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். துறை சார்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் தொகுதி மக்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதியில் அரசுக்

[2015 பிப்ரவரி 19

கல்லூரி, தனியார் கல்லூரி என்று ஒன்றுகூட இல்லை. தளி தொகுதியில் பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள பழங்குடி மற்றும் மலைவாழ் மக்களுடைய குழந்தைகள் உயர் கல்வி கற்கவேண்டுமென்றால், 100 கிலோ மீட்டர் தூரம் பயணித்து கிருஷ்ணகிரி செல்லவேண்டும் அல்லது அண்டை மாநிலத்திலுள்ள பெங்களூரு சென்று உயர் கல்வி படிக்கவேண்டிய நிலையிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட தொகுதியிலே அரசு விழாக்களில் பங்கேற்கும்போது தொகுதி மக்கள் இதுகுறித்து பலமுறை மாண்புமிகு அமைச்சரிடத்தில் முறையிட்டிருக்கிறார்கள். ஆகவே, பழங்குடி மக்களுடைய குழந்தைகள் உயர் கல்வி கற்கும் வகையிலே, தளியிலே ஒரு பொறியியல் கல்லூரியோ அல்லது ஒரு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியோ துவக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி எப்போதெல்லாம் வருகிறதோ, அந்த நேரத்திலெல்லாம், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குப் பல்வேறுபட்ட கல்வி நிலையங்கள் தந்து பெருமை சேர்த்தவர் மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பர்கூரிலே ஒரு பொறியியல் கல்லூரியைத் தந்ததும் மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். கிருஷ்ணகிரியிலே ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தந்ததும் மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். தளி தொகுதி, ஒசூர் பகுதியிலே, இதுவரை அரசு சார்ந்த கல்லூரிகள் இல்லாத நிலை நீண்டகாலமாக இருந்தது. நீண்டகாலமாக இருந்த மக்களுடைய கோரிக்கையை ஏற்று, ஒசூரில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை சென்ற ஆண்டு தந்த பெருமை மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தளி தொகுதிக்கு ஒரு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். உண்மையிலேயே அந்தப் பகுதி பின்தங்கிய பகுதிதான். இதை எதிர்காலத்தில் மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, நிதிநிலைமைக்கு ஏற்ப அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2015 பிப்ரவரி 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**21—**

## நெல் கொள்முதல் நிலையம்

***1938—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதியில் கூடுதலாக நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது வெற்றியை நாளைய சரித்திரம் சொல்லும் என்கிற வெற்றி வரிசையில் சட்டமன்றத் தேர்தலில் சாதனை வெற்றி; உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி; கூட்டுறவுத் தேர்தலிலும் வெற்றி; நாடாளுமன்றத் தேர்தலில் நாடு போற்றும் வெற்றி; இடையில் வந்த இடைத் தேர்தல்கள் எல்லாவற்றிலும் வெற்றி; ஸ்ரீரங்கம் வெற்றி; வஞ்சகத்தை, சூழ்ச்சியைத் தவிடுபொடியாக்கி, மக்கள் அம்மா அவர்களுக்கு அளித்த மணிமகுட வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) இனி வருங்காலங்களிலெல்லாம் எங்கள் அம்மா அவர்களுக்கு மட்டுமே வெற்றி, வெற்றி, வெற்றி என்கிற (மேசையைத் தட்டும் ஒலி) வரலாறுகளைப் படைத்துக்கொண்டிருக்கக்கூடிய மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

[2015 பிப்ரவரி 19

*முற்பகல் 10–35*

இந்த ஆண்டிற்கான முதல் வினாவிற்கு தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன். மதுரை மாவட்டம், மேலூர் தொகுதியில் நடப்புக் கொள்முதல் பருவத்தில் 7 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. மேலும், நெல் வரத்தினைப் பொறுத்து, கூடுதலாகக் கொள்முதல் நிலையங்கள் தேவைப்படும் இடங்களில் திறக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசையை நோக்கி வணங்குகிறேன்.

மேலூர் தொகுதி முழுவதும் விவசாயத்தையே நம்பி வாழக்கூடிய பகுதியாகும். தமிழ்நாட்டில் இதுவரை எத்தனையோ பேர் ஆட்சியில் இருந்தாலும், அவர்களெல்லாம் செய்ய முடியாத சாதனையாக, எங்களுடைய மேலூர் பகுதி மக்களின் நிரந்தர வாழ்வாதாரத்திற்கு, விவசாய மக்கள் பிழைப்பதற்கு ஏற்ற வகையில், முல்லைப் பெரியாறு பிரச்சினையை உச்ச நீதிமன்றம்வரை எடுத்துச் சென்று, சட்டப் போராட்டத்தை நடத்தி, அணையின் நீர்மட்டத்தை 142 அடியாகப் பெற்றுக் கொடுத்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) மேலூர் தொகுதியினுடைய விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகளின் விடிவெள்ளியாகத் திகழ்கின்ற அம்மா அவர்களுடைய ஆட்சியில், இப்போது அணையில் 142 அடி தண்ணீர் வந்த பிறகு, மேலூர் பகுதியில் இருக்கின்ற விவசாயிகள் இந்த ஆண்டு முழுவதும் விவசாயம் செய்து, நல்ல முறையில் விளைச்சல் அறுவடை ஆகிக்கொண்டிருக்கின்றது. அதற்கு அம்மா அவர்களுடைய அரசுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி விவசாயிகள் அறுவடை செய்துகொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், பல்வேறு விவசாயப் பொது மக்கள் கேட்ட



2015 பிப்ரவரி 19]

கோரிக்கைகளை நிறைவேற்றி, அந்தப் பகுதிகளிலே கொள்முதல் நிலையங்களைத் திறந்திருப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மேலாலபுதூர், சென்னகரம்பட்டி, எட்டிமங்கலம், கொட்டாம்பட்டி, கருங்காலக்குடி, அட்டப்பட்டி, கோட்டநத்தம்பட்டி மற்றும் உறங்கான்பட்டி போன்ற பகுதிகளிலும் விவசாயிகள் கரும்பை அறுவடை செய்து கொண்டிருக்கின்றார்கள். விவசாயிகளின் விடிவெள்ளியாகத் திகழ்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கண்ட பகுதிகளிலுள்ள விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் பகுதியில் 7 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. மதுரை மாவட்டம் முழுவதும் 43 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 5,673 மெட்ரிக் டன் நெல் இதுவரை கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, நடப்பு கொள்முதல் பருவத்தில் தமிழக விவசாயிகளின் நலன் கருதி, தேவைப்படும் இடங்களிலெல்லாம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இன்றைய தேதியில் டெல்டா மாவட்டங்களில் 1,358 கொள்முதல் நிலையங்களும், பிற மாவட்டங்களில் 216 கொள்முதல் நிலையங்களும், ஆக மொத்தம் 1,574 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டம், மேலூர் பகுதியில் இன்னும் எந்தெந்தப் பகுதிகளில் விவசாயிகள் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தேவை என்று கேட்கின்றார்களோ, அந்தப் பகுதிகளில் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு, தேவைக்கேற்ப நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2015 பிப்ரவரி 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் கேட்கின்ற இடங்களிலெல்லாம் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என்று அறிவித்த, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் 1,574 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறினார்கள். அதேபோன்று, மதுரை மாவட்டத்தில் 43 நெல் கொள்முதல் நிலையங்கள் இருப்பதாகவும் தெரிவித்தார்கள். ஆனால், கரும்பையும், நெல்லையும் நம்பியிருக்கிற எங்கள் விழுப்புரம் மாவட்டத்தில், மாவட்ட ஆட்சியருடைய அறிவிப்பின்படி, கடந்த 10 ஆம் தேதி முதல் 7 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மட்டும்தான் செயல்பட்டு வருகின்றன. குறிப்பாக, என்னுடைய திருக்கோவிலூர் தொகுதி, சித்திலிங்கம் என்ற இடத்தில் ஒரேயொரு நெல் கொள்முதல் நிலையம் மட்டும் செயல்படுகிறது. 17 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் விழுப்புரம் மாவட்டத்தில் இருந்தாலும், விவசாயிகள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல, எனது தொகுதியிலுள்ள அரகண்டநல்லூர், கண்டாச்சிபுரம் பகுதிகளில் இன்னும் இரண்டு, மூன்று நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க வேண்டும்.

*முற்பகல் 10–40*

அதுமட்டுமல்லாமல் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு விவசாயிகள் செல்கின்றபோது, ஒரு நாளைக்கு இவ்வளவு தொகைக்குத்தான் நாங்கள் நெல்லைக் கொள்முதல் செய்ய முடியுமென்று அங்கேயிருக்கிற அதிகாரிகள் தெரிவிப்பதாக விவசாயிகள் குறை கூறுகிறார்கள். அதைக் களைவதற்கு அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.



2015 பிப்ரவரி 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்கள் சில பகுதிகளுக்கு நேரடிக் கொள்முதல் நிலையங்கள் தேவை என்று கேட்டார்கள். தேவைப்படும் இடங்களிலெல்லாம் நெல் கொள்முதல் நிலையங்களைத் திறப்பதற்கு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் வழிகாட்டுதலோடு நடைபெறுகின்ற இந்த அரசால் ஆணையிடப்பட்டிருக்கிறதென்று நான் ஏற்கெனவே சொன்னேன். தேவைப்படும்பட்சத்தில், நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். விழுப்புரம் மாவட்டத்தில் இதுவரை 7 கொள்முதல் நிலையங்கள்தான் திறக்கப்பட்டிருக்கிறதென்று தெரிவித்தார்கள். ஆனால், 7 நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்தும் இதுவரை விழுப்புரம் மாவட்டத்தில் 92 மெட்ரிக் டன் நெல்தான் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். நெல் வரத்து அதிகமாக வரும்பட்சத்தில், நிச்சயமாக அந்தப் பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொள்முதல் நிலையங்களைத் திறந்து, நேரடியாக நெல்லைக் கொள்முதல் செய்வதோடு, விவசாயிகள்மீது அக்கறைகொண்டிருக்கிற மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அவர்களுக்கு ஊக்கத்தொகையும் வழங்குகிறது. இதுபோன்று ஊக்கத் தொகை வழங்குகிற மாநிலம் மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) வழிகாட்டுதலோடு நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய தமிழகம்தான் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். குவிண்டால் ஒன்றுக்கு சன்ன ரக நெல்லுக்கு 70 ரூபாய், சாதா ரக நெல்லுக்கு 50 ரூபாய் என ஊக்கத் தொகை கொடுக்கிற அரசு மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு என்பதை மீண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, தேவைப்படுகிற இடத்தில் நிச்சயமாக மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு, நேரடி

[2015 பிப்ரவரி 19

நெல் கொள்முதல் நிலையங்கள் விவசாயிகளின் நலன் கருதி திறக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**22—**

**காகித ஆலை**

***52673—திரு. கே.பி.பி. பாஸ்கர்:**

*மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாமக்கல் தொகுதி, மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி காகித ஆலை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாரும் எல்லாமும் பெற வேண்டுமென்ற குறிக்கோளோடு, "மக்கள் நலனே என் நலன்" என்று செயல்படும் எங்கள் இதய தெய்வம், புரட்சித் தலைவி, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் புதிதாக காகித ஆலை அமைக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். அங்கே போதிய கரும்புச் சக்கை இல்லாத காரணத்தினாலும், அங்கே இணை மின் நிலையம் உற்பத்தி துவங்கவிருக்கின்ற காரணத்தினாலும், அதற்கு கரும்புச் சக்கை தேவையிருக்கின்ற காரணத்தினாலும், காகித ஆலை நிறுவ சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2015 பிப்ரவரி 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.*

**திரு. கே.பி.பி. பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இணை மின் உற்பத்தித் திட்டத்திற்குக் கரும்புச் சக்கை தேவைப்படுவதாகத் தெரிவித்துள்ளார்கள். இந்த ஆலையில் இணை மின் உற்பத்தித் திட்டம் எப்போது பயன்பாட்டிற்கு வரும்? வேறு ஏதேனும் சர்க்கரை ஆலையிலிருந்து மின் உற்பத்தித் திட்டத்திற்கான திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். ஒரு காகித ஆலை நிறுவப்பட வேண்டுமானால், அதற்கு என்னென்ன மூலப் பொருட்கள் தேவைப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கேள்வி நேரம் என்ற காரணத்தினால் குற்றச்சாட்டைச் சொல்லக்கூடாது. இருந்தாலும், கடந்த ஆட்சியாளர்களால், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் இணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு டெண்டர் விடப்பட்டு, இத்திட்டமானது அனைத்து ஆலைகளிலும் செப்டம்பர் 2011–ல் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். அதன்படி, அனைத்து கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும், 183 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டுமென்ற இலக்கோடு, அவர்கள் தகுதியில்லாதவர்களுக்கு டெண்டர் விட்ட காரணத்தினால், ஒப்பந்ததாரர்களிடம் திட்டப் பணிகள் குறித்து தொடர்ந்து நான்காண்டு காலமாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், நானும் ஆய்வு செய்துகொண்டேயிருக்கின்றோம்.*

*இதற்கிடையில், மாண்புமிகு அம்மா அவர்கள், இத்திட்டத்திற்குப் போதிய நிதியில்லாத காரணத்தினால் 352*

[2015 பிப்ரவரி 19

கோடி ரூபாயினைக் கடனாகக் கொடுத்திருக்கின்றார்கள். தகுதியில்லாதவர்கள் இதை டெண்டருக்கு எடுத்த காரணத்தினால், தொடர்ந்து இப்பணி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இன்னும் ஆறு மாத காலம் அல்லது ஒரு வருட காலத்திற்குள் இத்திட்டத்தினைச் செயல்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கான ஏற்பாட்டை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, காகித ஆலை அன்று புதிதாக ஆரம்பிக்கப்படவேண்டுமானால், என்னென்ன வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். ஒரு காகித ஆலையானது, 400 மெட்ரிக் டன் அளவிற்கு தினந்தோறும் உற்பத்தி செய்தால்தான் இலாபகரமாக இயங்கமுடியும். மேலும், வருடத்திற்கு 6 இலட்சம் டன் கரும்புச் சக்கையும், 1,55,000 மெ.டன் அளவு கூழ் மரமும், இது தவிர தினந்தோறும் 5,000 க.மீ. தண்ணீரும் தேவைப்படுகின்ற காரணத்தினால், அங்கு புதிதாக ஒரு காகித ஆலை துவங்குவதற்கு வாய்ப்பில்லை.

முற்பகல் 10–45

ஏற்கெனவே மோகனூரிலிருந்து 33 கிலோ மீட்டரிலுள்ள கரூர், புகளூர் பகுதியிலே T.N.P.L. என்கின்ற காகித நிறுவனம் இலாபகரமாக இயங்கி வருகின்றது. மோகனூரிலிருந்து 86 கிலோ மீட்டர் தொலைவிலே, அட்டை தயாரிக்கின்ற தொழிற்சாலை நிறுவ மாண்புமிகு அம்மா அவர்களால் ஸ்ரீரங்கத்தில் நடந்த விழாவிலே அடிக்கல் நாட்டப்பட்டு, அந்தப் பணிகள் இப்பொழுது நடைபெற்று வருகின்றன. அந்தத் தொழிற்சாலையும் இந்த ஆண்டு கடைசியிலே தொடங்கப்படவிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.

**திரு. கே.பி.பி. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுக்கு நன்றி கூறி அமைகிறேன்.



2015 பிப்ரவரி 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**23—**

## போக்குவரத்துப் பணிமனை

***44393—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி வட்டம், கல்லலில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் அரசுப் போக்குவரத்துக் கழகம் சார்பில் கல்லலிலிருந்து 17 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள காரைக்குடி பணிமனையிலிருந்து 76 பேருந்துகளும், 38 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சிவகங்கை பணிமனையிலிருந்து 80 பேருந்துகளும் இயங்கி வருகின்றன. இரு பணிமனைகளுக்கிடையேயான தூரம் 40 கிலோ மீட்டருக்குக் குறையாமல் இருக்க வேண்டுமென்ற நடைமுறை விதிகளுக்கேற்ப, கல்லலில் தனியாக ஒரு பணிமனை அமைக்கும் நிலை தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லல் என்பது ஓர் ஒன்றியத்தினுடைய தலைநகர் என்ற அடிப்படையில், திருச்சியிலிருந்து காரைக்குடி வழியாக

[2015 பிப்ரவரி 19

பரமக்குடி செல்லக்கூடிய அனைத்துப் பேருந்துகளும் கல்லல் வழியாகச் செல்கின்றன. அதேபோல, சிவகங்கை மாவட்டத்தில், தேவகோட்டை—காளையார்கோவில் மற்றும் திருப்பத்தூர்—காளையார்கோவில் என்று பல நகரங்களை ஒருங்கிணைக்கக்கூடிய மையமான பகுதியில் கல்லல் இருக்கின்ற காரணத்தால், கல்லலில் ஒரு போக்குவரத்துப் பணிமனை அமைப்பதன் மூலமாக சுற்றியிருக்கின்ற கிராமப்புற மக்களுக்கு வசதியாக அதிக அளவில் பேருந்துகளை இயக்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. கல்லலில் போக்குவரத்துப் பணிமனை அமைப்பதன் மூலமாக போக்குவரத்துக் கழகத்திற்கு டீசல் செலவு குறைவதற்கு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால், தூரத்தைக் கணக்கிடாமல் கல்லலில் ஒரு போக்குவரத்துப் பணிமனை அமைத்துத் தரும்படி தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்கள், அடித்தட்டு மக்களுடைய நலன் காக்கின்ற, வாழும் மனித தெய்வம், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் அரசுப் போக்குவரத்துக் கழகம் தொடங்கிய நாள் முதல் இல்லாத சரித்திர சாதனையாக, இந்த மூன்றரை ஆண்டுகளில் 75 புதிய பணிமனைகளை அமைப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பேருந்துகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அந்தப் பணிமனைகள் அமைக்கப்பட்டு, மக்களுக்கு சேவை புரிந்து வருகின்றது.*

*மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற கல்லலில் போக்குவரத்துப் பணிமனை அமைக்கும்பட்சத்தில், 6 நகரப் பேருந்துகள் மற்றும் 4 புறநகரப் பேருந்துகள் மட்டுமே இயங்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். பேருந்துகளுடைய எண்ணிக்கை அதிகரிக்கின்றபோது, மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, அந்தப் பேருந்துகளுடைய எண்ணிக்கைக்கேற்ப ஆய்வு செய்து, துறை சார்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2015 பிப்ரவரி 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை தொகுதி, காளையார்கோவிலில் போக்குவரத்துப் பணிமனை அமைத்துத் தர வேண்டுமென்று ஏற்கெனவே கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஆய்வு செய்யப்படும் என்று கடந்த கூட்டத் தொடரில் கூறியிருந்தார்கள். கடந்த ஆண்டு கல்லல் தனி வட்டமாக பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில், காளையார்கோவிலிலும் தனியாக ஒரு போக்குவரத்துப் பணிமனை அமைத்துத் தரப்படுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளையார்கோவிலில் புதிய பணிமனை அமைப்பதற்கு குறைந்தபட்சம் மூன்று ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. அங்கு அரசு புறம்போக்கு நிலம் இருக்கின்றதா என்று துறை சார்பில் ஆய்வு செய்வதற்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இடம் கிடைக்கப்பெற்றவுடன், மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி திட்ட மதிப்பீடு தயார் செய்யப்படும். மேலும், அங்கு இடம் இல்லாத காரணத்தினால், துறை சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டிருக்கின்றார்கள். அங்கு பணிமனை அமைத்து, பேருந்துகள் இயக்குவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. டீசல் செலவிலும் சிக்கனம் ஏற்படுவதற்கான சூழ்நிலையும் இருக்கின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள இடத்தில், இடம் கிடைக்கப்பெற்றவுடன், துறை சார்பாக திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

[2015 பிப்ரவரி 19

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி 400–க்கும் மேற்பட்ட கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாகும். அங்குள்ள எண்ணற்ற தொழிலாளர்கள் பணி நிமித்தமாக அருகிலிருக்கக்கூடிய தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கோவில்பட்டிக்கு தினமும் சென்று வரவேண்டியிருக்கிறது. அங்கு ஓர் அரசுப் போக்குவரத்துப் பணிமனை அமைக்கப்பட்டால், இன்னும் கூடுதலாக போக்குவரத்து வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், அந்தப் பகுதி வளர்ச்சியடைவதற்கும் ஏதுவாக இருக்கும். பணிமனை அமைப்பதற்கு ஒட்டப்பிடாரம் தாலுகா அலுவலகத்திற்கு அருகிலேயே அரசினுடைய நிலம் தேவையான அளவுக்கு இருக்கிறது. இதுகுறித்து நானும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். எனவே, ஒட்டப்பிடாரத்தில் போக்குவரத்துப் பணிமனை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற ஒட்டப்பிடாரம் பகுதியில், குறைந்தபட்சம் 25 அல்லது 30 பேருந்துகள் இயக்கப்பட்டால் மட்டுமே, அந்த இடத்தில் பணிமனை அமைத்தால், அதற்குண்டான செலவினத்தை, அரசுப் போக்குவரத்துக் கழகம் ஈடுசெய்ய முடியும். 25–க்கும் குறைவான பேருந்துகள்தான் அங்கிருந்து இயக்கப்படுகின்றன. மக்களுக்கு முழுமையாக சேவையாற்ற அருகிலுள்ள பணிமனைகளிலிருந்து பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. வருங்காலத்தில் ஒட்டப்பிடாரம் பகுதியில் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது, அங்கு பணிமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

*முந்தைய ஐந்தாண்டு கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 10 போக்குவரத்து பணிமனைகள்தான் அமைக்கப்பட்டன. இதுவரை இல்லாத அளவிற்கு, புதிய சரித்திர சாதனையாக, இந்த மூன்றரை ஆண்டுகால ஆட்சியில், 75 போக்குவரத்துப் பணிமனைகளை அமைத்து, மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி மாண்புமிகு*



2015 பிப்ரவரி 19]

*அம்மா அவர்கள் புதிய வரலாற்றைப் படைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற, ஒட்டப்பிடாரம் பகுதியில் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றபோது, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, அந்தப் பகுதியில் ஆய்வுகள் செய்யப்பட்டு, அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவக்கொழுந்து, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**24—**

## குளிர்பதனக் கிடங்கு

***1138—திரு. ப. சிவக்கொழுந்து:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பண்ருட்டி தொகுதி, கண்டரக்கோட்டையில் காய்கறிகளைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெருப்பாற்றில் நீந்துகின்ற வீரமே, துணிவில், அறிவில், ஆளுமையில், தன்னைத்தானே செதுக்கி, ஏணிகளின் தயவின்றி, வான் தொட்ட வல்லமையே, உருக்குலையா உள்ளத்தோடு, முறுக்கேறிய வீரத்தோடு, தாயே! உன் விழி அசைவு கட்டளையில் ஸ்ரீரங்கத்தில் வெற்றி வாகை சூடிய (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றியின் வீரத் திருமகளை வணங்கி, 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்ற அண்ணாவின் கோட்பாட்டினைப் பின்பற்றி, பேரவைத் தலைவரின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியின் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கை, ஏற்கெனவே கடலூர் மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு வணிக வரி மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்களும் வலியுறுத்தியதன் அடிப்படையில், மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பண்ருட்டி தொகுதி, கண்டரக்கோட்டையில் காய்கறிகளைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலனை செய்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவக்கொழுந்து அவர்கள்.*

**திரு. ப. சிவக்கொழுந்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி தொகுதி, அண்ணா கிராம ஒன்றியம், கண்டரக்கோட்டையைச் சுற்றியுள்ள பல கிராமங்களில், குறிப்பாக கட்டமுத்துப்பாளையம், மாளிகைமேடு, குச்சிப்பாளையம், பூண்டி, புலவனூர், இராசாபாளையம், தட்டாம்பாளையம், திராசு, கரும்பூர், உறையூர், சின்னப்பட்டு, கள்ளிப்பட்டு போன்ற கிராமங்களில் அதிகமாக முட்டைகோஸ், வெண்டைக்காய், கத்தரிக்காய், மிளகாய், கொத்தவரங்காய், பாகற்காய் ஆகிய காய்கறிகள் விளைகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் காய்கறிகளைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க பரிசீலனை செய்யப்படும் என்று கூறியதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பகுதி விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கை இது. எனவே, அந்தக் கோரிக்கையை ஏற்று இந்த நிதியாண்டிலேயே குளிர்பதனக் கிடங்கு அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் இதய





தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள், 'இரண்டு மடங்கு உற்பத்தி, மூன்று மடங்கு வருமானம்' என்ற உயர்ந்த இலட்சியத்தோடு உழவர்களின் உன்னதமான வாழ்விற்கு, தமிழகத்திலுள்ள பல்வேறு மாவட்டங்களில், 93 இடங்களில் ரூ.5,562.20 இலட்சம் மதிப்பீட்டில் குளிர்பதனக் கிடங்குகள் அமைத்து, விவசாயிகளினுடைய நலனை மிகுந்த கவனத்துடன், பரிவுடன் பாதுகாத்து வருகிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்து, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு மீண்டும் கொண்டு செல்லப்பட்டு, இந்த ஆண்டே குளிர்பதனக் கிடங்கு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவக்கொழுந்து அவர்கள்.*

**திரு. ப. சிவக்கொழுந்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காய்கறிகளின் உற்பத்தியைப் பெருக்கி, விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பெருக்கவேண்டும் என்ற நோக்கத்தில், தமிழக அரசு பெருநகர காய்கறி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வட்டாரத்திலும் விவசாய உற்பத்திக் கிடங்குகள் அமைக்கப்படும் என்றும், அவர்களைப் பாதுகாக்க, உறுப்பினர்களைக் கொண்ட Aggregator மையம் ஒன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்படும் என்றும் அரசு அறிவித்தது. இந்த மையம் அமைக்கப்பட்டால், இதிலேயே இந்தக் குளிர்பதனக் கிடங்கும் வந்துவிடும்; விவசாயிகளும் பயன்பெறுவார்கள். அந்த வகையில், இதுவரை தமிழகத்தில் எத்தனை மாவட்டங்களில் Aggregator மையங்கள் அமைக்கப்பட்டன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களால்

[2015 பிப்ரவரி 19

அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களும் தமிழகத்தில் முழுமையாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**25—**

### குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்

***29588—திரு. ஆர். சீனிவாசன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு நகரில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) ஆற்காடு நகரில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள்.

**திரு. ஆர். சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி மாண்புமிகு



2015 பிப்ரவரி 19]

அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு முதற்கண் என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, ஆற்காடு நகரில் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை அமைத்துத் தர முடியுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், ஆற்காடு நகராட்சியின் தற்போதைய மொத்த மக்கள்தொகை 55,917 ஆகும். தற்போது ஆற்காடு நகரத்திற்கு, நகராட்சிக்குட்பட்ட தலைமை நீரேற்று நிலையம் அருகில் பாலாற்றுப் படுகையில் உள்ள நான்கு நீரூற்றுக் கிணறுகள் மூலம் நாள் ஒன்றுக்கு 5.48 மில்லியன் லிட்டர் குடிநீர் எடுக்கப்பட்டு, நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 98 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இந்த நீர் குடிப்பதற்கு உகந்ததாகவும், பாதுகாக்கப்பட்ட குடிநீராகவும் உள்ளதால், நேரடியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் ஏற்றப்பட்டு, விநியோகிக்கப்படுகிறது. இந்தக் குடிநீர் முறையாக குளோரினேஷன் செய்யப்பட்டு, இரண்டு நாட்களுக்கு ஒருமுறை சுழற்சி முறையில் பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. மேலும், பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப, பாலாற்றுப் படுகையிலிருந்து கூடுதலாக நீர் பெற இயலாததால், குடிநீர் மேம்பாடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் ஆற்காடு நகராட்சியும் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், இக்கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.1,295 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில், ஆற்காடு நகராட்சிக்குட்பட்ட விகிதாச்சார மதிப்பீட்டுத் தொகை 4.71 கோடி ரூபாய் ஆகும். வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் ஆற்காடு நகராட்சிக்கு நாள் ஒன்றுக்கு 6.59 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள்.

**திரு. ஆர். சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல பதிலைக் கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அங்கு குடிநீருக்காக தினமும் நான்கு போராட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமலுக்கு வரும்போது, ஊராட்சிகளுக்கும் அக்கூட்டுக் குடிநீர்த் திட்டம் விரிவாக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நடைபெறும் அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக, ஊரகக் குடியிருப்புகளுக்குக் குழாய்கள் மூலமாக குடிநீர் வழங்குவதில், தமிழகம் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

இந்தியாவில் மற்ற அனைத்து மாநிலங்களிலும் உள்ள ஊரகக் குடியிருப்புகளுக்கு குழாய்கள்மூலம் 39.95 விழுக்காடு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இது மற்ற மாநிலங்களின் மொத்த விழுக்காடு ஆகும். ஆனால், மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக, தமிழகத்தில் 98.95 விழுக்காடு ஊரகக் குடியிருப்புகளுக்கு குழாய்கள் மூலமாக குடிநீர் வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையை, அவசியம் ஏற்படின், மாண்புமிகு அம்மா





அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நடைபெறும் அரசு கண்டிப்பாக பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.க. அரங்கநாதன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**26—**

### கால்நடைக் கிளை நிலையம்

***52416—திரு. ஆ.க. அரங்கநாதன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், விருதுவிலங்கினான் ஊராட்சியில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படுத்துக்கொண்டே ஜெயிப்பேன் என்று படுதோல்வி அடைந்த தலைவர்கள் எல்லாம் உண்டு. ஆனால், ஒரு கடிதத்திலேயே 96,500 வாக்குகளுக்கு மேலாக பெற்று, கழகத்தை வெற்றி பெறச் செய்த, (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் வானின் ஒரே தலைவர் மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், விருதுவிலங்கினான் ஊராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடை அலகுகள் 3,000–க்கும் அதிகமாக உள்ளதால், மேற்படி கிராமத்தில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2015 பிப்ரவரி 19

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடக்கின்ற இந்த அரசு, நிச்சயமாக வருகின்ற நிதியாண்டிலேயே அங்கே ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.க. அரங்கநாதன் அவர்கள்.

**திரு. ஆ.க. அரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், கழகத்தின் காவல் தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட விருதுவிலங்கினான் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடக்கும் இந்த அரசு, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையினை பரிசீலனை செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.க. அரங்கநாதன் அவர்கள்.



2015 பிப்ரவரி 19]

**திரு. ஆ.க. அரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவண்ணாமலை ஒன்றியம், விருதுவிலங்கினான் ஊராட்சியில் 5,000-க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. மேலும் அப்பகுதி மக்கள் கால்நடைகள் நோய்வாய்ப்படும்போது 17 கி.மீ. தொலைவில் உள்ள நவம்பட்டு ஊராட்சியிலுள்ள கால்நடை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்வது மிகவும் சிரமமாக உள்ளது. மக்களின் நீண்டநாள் கோரிக்கையினை ஏற்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலேயே கால்நடைக் கிளை நிலையம் அமைத்திட ஆவன செய்யவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று, அந்தக் கிராமத்தைத் துறைவாயிலாக ஆய்வு செய்து, அங்கு 5,000–க்கும் மேற்பட்ட கால்நடை அலகுகள் இருந்தால், மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடக்கின்ற இந்த அரசு, இந்த நிதியாண்டிலேயே கால்நடைக் கிளை நிலையம் அமைக்க ஆவன செய்யும் (குறுக்கீடு) என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, உட்கார்ந்துகொண்டு இப்படி சத்தமாக பேசிக்கொண்டிருக்கக் கூடாது. இது நன்றாக இல்லை, நீங்கள் செய்வது சரியல்ல. உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் அமைதியாக உட்காருங்கள். சூழ்நிலைக்கேற்றவாறுதான் வாய்ப்பு கொடுக்கப்படும். கேட்கின்றபோதெல்லாம் பேச அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) அப்படியெல்லாம் வாய்ப்பு தர முடியாது. உட்காருங்கள்.

வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2015 பிப்ரவரி 19

**27—**

## விளையாட்டுத் திடல்

*36057—**திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, துறையூர் நகராட்சியில் விளையாட்டுத் திடல் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) துறையூர் தொகுதி, துறையூர் நகராட்சியில் விளையாட்டுத் திடல் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

**திருமதி த. இந்திராகாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூலோக சொர்க்கம், புரட்சித் தாயின் பக்கம் என தீர்க்கமாய் தீர்ப்பெழுதிய திருவரங்கம் என்றைக்குமே புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கோட்டையென உலகிற்கு உணர்த்திய உன்னதத் தாயே! விழி அசைவில் வெற்றிகளை வென்றிட்ட வெற்றித் திருமகளே! (மேசையைத் தட்டும் ஒலி) சோதனைகளையெல்லாம் சாதனைகளாக்கி, சாதனைகளையெல்லாம் சரித்திரங்களாக மாற்றிய சாதனைத் தலைவியே! இதய தெய்வம் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

துறையூர் நகராட்சி மிகவும் கூடுதலாக 35,000 மக்கள்தொகை உள்ள பகுதி. அந்தப் பகுதியிலே உள்ள சாலைகள் மிகவும் குறுகலாக இருக்கின்றன. நடைப்பயிற்சி செய்யவேண்டும் என்றால்கூட, அங்கே போதிய வசதி இல்லை; பாதுகாப்பான சூழ்நிலை இல்லை. எனவே 9–வது வார்டில் சுவாமிநாதன் நகரில்



2015 பிப்ரவரி 19]

அரசுக்குச் சொந்தமான நிலம் உள்ளது. இப்போது வாய்ப்பில்லையென்றாலும்கூட, வருங்காலத்தில் அந்தப் பகுதியிலுள்ள மக்களின் நிலையை உணர்ந்து, 9–வது வார்டில் ஒரு விளையாட்டுத் திடல் அமைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக நலனே தன் நலன், தமிழக மக்களே தன் மக்கள் என தமிழக முன்னேற்றத்திற்காக தினம் தினம் திட்டங்கள் தந்து, இந்தியாவில் தமிழகத்தை எல்லாத் துறைகளிலும் முன்னோடி மாநிலமாக உருவாக்குவதோடு, விளையாட்டுத் துறையிலும் முன்னோடி மாநிலமாக மாற்றிவரும் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு தமிழக விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் சார்பாகவும், துறையின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முற்பகல் 11–05

இந்த ஆண்டு நடந்த 20–வது காமன்வெல்த் போட்டியில் தமிழகம் 3 தங்கப் பதக்கங்களும், 4 வெள்ளிப் பதக்கங்களும், 17–வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் தமிழகம் 5 தங்கப் பதக்கங்களும், 5 வெள்ளிப் பதக்கங்களும், 4 வெண்கலப் பதக்கங்களும், 35–வது தேசியப் போட்டியில் தமிழகம் 16 தங்கப் பதக்கங்களும், 16 வெள்ளிப் பதக்கங்களும், 20 வெண்கலப் பதக்கங்களும் பெற்று விளையாட்டுத் துறையில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் செயல்படுத்தி வரும் திட்டங்களினால் தமிழகம் விளையாட்டுத் துறையில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது என்பதில் பெருமைப்படுகின்றோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருச்சி மாவட்டம், துறையூர் தொகுதியில் விளையாட்டுத் திடல் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு விளையாட்டு அரங்கம், ஒரு உள்விளையாட்டு அரங்கம், ஒரு நீச்சல் குளம் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து

[2015 பிப்ரவரி 19

வருகின்றது. ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப்படும். பின்னர், அந்தந்த மாவட்டத்தில் உள்ள முக்கிய நகரங்களில் விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும், அதன் பின்னர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் மற்றும் நகராட்சிக்கும் விளையாட்டு கட்டமைப்புகளை ஏற்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

துறையூரில் 35,000 மக்கள் வசித்து வருகிறார்கள். துறையூர், 9–வது வார்டில் அரசுக்குச் சொந்தமான இடம் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஒவ்வொரு தொகுதியிலும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு என்று சொந்தமான நிலம் வேண்டும். தகுந்த இடத்தை உள்ளாட்சி அமைப்புகள் அல்லது வருவாய்த் துறை மூலமாகத் தேர்வு செய்து, அதனை விளையாட்டு ஆணையத்திற்கு மாற்றம் செய்யும்பட்சத்தில், அல்லது விளையாட்டு ஆணையத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யும்பட்சத்தில், விளையாட்டுத் திடல் அமைப்பதற்கான கருத்துரு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகப் பெறப்பட்டு அரசின் நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு விளையாட்டுத் திடல் அமைக்க துறை நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

**திருமதி த. இந்திராகாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். துறையூர் தொகுதிக்குட்பட்ட முசிறி ஒன்றியம், புத்தனாம்பட்டி கிராமப் பகுதியில் ஒரு கலைக் கல்லூரியும், ஒரு மேல்நிலைப் பள்ளியும் உள்ளன. அந்தப் பகுதியில் உள்ள மாணவ, மாணவிகள் அதிக அளவில் படித்து வருகிறார்கள். அந்தப் பகுதி மக்களுடைய தேவையைக் கருத்தில்கொண்டு, அந்த ஊராட்சியில் ஒரு விளையாட்டுத் திடல் அமைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.



2015 பிப்ரவரி 19]

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரகப் பகுதிகளில் விளையாட்டுத் திடல் அமைப்பதற்கு 6 முதல் 7 ஏக்கர் இடம் வேண்டும். அந்த இடம் பொது மக்கள் பயன்படுத்தக்கூடிய இடமாக இருக்கவேண்டும். அதோடு அங்கு போக்குவரத்து வசதி உள்ள இடமாகவும் இருக்கவேண்டும். திருச்சி மாவட்டத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் உதவியுடன் பைகா என்ற திட்டத்தின்மூலம் 20 கிராமங்கள் Phase-I–லும், 20 கிராமங்கள் Phase-II-லும் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பான முறையில் விளையாட்டு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. பைகா திட்டத்தின்மூலம் ஒரு கிராமத்திற்கு தளம் அமைக்க ரூ.75,000/–மும், உபகரணங்கள் வாங்க ரூ.25,000/–மும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு 'பைகா திட்டம்' 'Rajiv Gandhi Khel Abhiyan' என்ற திட்டமாக மாற்றப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்மூலம் ஒரு மாவட்டத்தில் இரண்டு ஊரகப் பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு, ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய் வழங்கப்படவுள்ளது. ஆகவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த இடத்தில் விளையாட்டுத் திடல் அமைக்கும் கருத்துரு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக துறைக்குப் பரிந்துரைக்கப்பட்டால், துறை ரீதியாக Rajiv Gandhi Khel Abhiyan என்ற திட்டத்தின் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ள உதவியாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**28—**

## நூலகம்

***22762—திரு. அ. பாஸ்கர்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பாப்பம்பட்டியில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2015 பிப்ரவரி 19

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், தருமபுரி தொகுதிக்குட்பட்ட நல்லம்பள்ளி ஒன்றியம், பாப்பம்பட்டியில் முதற்கட்டமாக பகுதிநேர நூலகம் திறப்பதற்கு இலவசமாக இடவசதி மற்றும் உரிய நிபந்தனைகளை நிறைவேற்றித் தருமாறு அவ்வூராட்சி மன்றத் தலைவருக்கு தருமபுரி மாவட்ட நூலக அலுவலரால் 24–1–2014 அன்று கடிதம் எழுதப்பட்டது. அவ்வூராட்சி மன்றத் தலைவரிடமிருந்து இதுநாள்வரை பதில் பெறப்படவில்லை. நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன், மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, பாப்பம்பட்டியில் பகுதிநேர நூலகம் அமைப்பது தொடர்பாக பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லம்பள்ளி ஒன்றியம், பாப்பம்பட்டி பகுதியில் சுமார் 1,500–க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு நூலக வசதியை ஏற்படுத்திக் கொடுத்தால், அவர்கள் படித்துப் பயன்பெற ஏதுவாக இருக்கும். நூலகம் அமைப்பது தொடர்பாக பஞ்சாயத்துத் தலைவரிடம் கருத்துரு கேட்டிருப்பதால், இதனை அரசுக்குப் பரிந்துரை செய்ய வலியுறுத்த வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–10

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் தொகுதியில், தருமபுரி மாவட்ட மைய நூலகமும், இலளிகம், அதியமான்கோட்டை, பாளையம்புதூர் மற்றும் இலக்கியம்பட்டி ஆகிய ஊர்களில் கிளை



2015 பிப்ரவரி 19]

நூலகங்களும், சாமிசெட்டிப்பட்டி, ஏலகிரி, கடகத்தூர், நல்லம்பள்ளி, வெங்கட்டம்பட்டி, ஏ.ஜெட்டிஅள்ளி, வீ.குட்டூர், பாளையத்தானூர், கிருஷ்ணாபுரம் மற்றும் நாயக்கன்கொட்டாய் ஆகிய ஊர்களில் ஊர்ப்புற நூலகங்களும், ஈச்சம்பட்டி, முக்கல்நாயக்கன்பட்டி, பரிகம் மற்றும் பாளையம் ஆகிய ஊர்களில் பகுதிநேர நூலகங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன.

நூலகம் செயல்பட வாடகையில்லா கட்டடம் நூலக ஆணைக் குழுவிற்கு வழங்கப்படவேண்டும். சொந்தக் கட்டடம் கட்டிட, 5 சென்ட் காலி மனை நூலக ஆணைக் குழுவிற்கு இலவசமாகப் பத்திரப் பதிவு செய்து தரப்படவேண்டும். ரூபாய் ஆயிரம் வீதம் நன்கொடையாகச் செலுத்தி, இரண்டு பேர் புரவலர்களாகச் சேரவேண்டும். நூலக உறுப்பினர் சந்தா மற்றும் காப்புத் தொகையாக ரூ.30/– செலுத்தி, 200 பேர்கள் நூலக உறுப்பினர்களாகச் சேரவேண்டும். சுமார் 2 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள தளவாடச் சாமான்கள் இலவசமாக வழங்கப்படவேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாப்பம்பட்டியில் நூலகம் அமைத்திட மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்ற காரணத்தினால், மேற்படி நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும்பட்சத்தில், அங்கு பகுதிநேர நூலகம் அமைப்பது தொடர்பாக பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினருக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக இங்கே பதிலை அளித்தார்கள். தமிழகத்திலுள்ள மலைவாழ் மக்கள் பயன்பெறும் வகையில், மாவட்டந்தோறும் ஒரு நடமாடும் நூலகம் ஏற்படுத்தவேண்டும். அரசுப் பள்ளிகளில் உள்ள நூலகங்கள் செயல்படாமல் உள்ளன. குறிப்பாக, தருமபுரி அதியமான் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, தருமபுரி ஔவையார் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, அதியமான்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளில் இருக்கின்ற நூலகங்கள் செயல்படாமல் இருக்கின்றன. இதுபோன்ற நூலகங்களை உடனடியாகச் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

நடவடிக்கை எடுக்கவேண்டும். தமிழகத்தில் அனைத்து நூலகங்களையும் மின்னணு நூலகங்களாக அமைத்து, கம்ப்யூட்டர் வசதி செய்து, இன்டர்நெட் இணைப்பு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலுள்ள நகர்ப்புற, கிராமப்புற மற்றும் ஊர்ப்புற அரசு மற்றும் தனியார் பள்ளிகளில், கல்லூரிகளில் உள்ள நூலகங்களின் விவரங்களையும், அங்குள்ள நூல்களின் விவரங்களையும் இணையதளத்தில் வெளியிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அனைத்து மாவட்டங்களிலும் ஆண்டுதோறும் அரசின் சார்பில் புத்தகக் கண்காட்சி நடத்திட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். இவற்றையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு அப்பாற்பட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு கேள்விகளை இங்கே தொடுத்திருக்கிறார். அனைத்து கேள்விகளையும் அவர் எழுத்துமூலம் தெரிவித்தால், அவற்றை உரிய முறையில் ஆய்வு செய்து, அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**29—**

## மரம் நடும் திட்டம்

*__8707—திரு. அர. சக்கரபாணி:__

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) ஊராட்சி ஒன்றியச் சாலைகளில் மரம் நடும் திட்டத்தினைச் செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம், மக்களின் முதல்வர், புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தின் பசுமைப் போர்வையினை அதிகரிக்கும் நோக்குடன், மாண்புமிகு மக்களின் முதல்வர், இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு தமிழக அரசின் சார்பில் செயல்படுத்தப்பட்டுவரும் மாபெரும் மரம் நடும் திட்டத்தின்கீழ், ஊராட்சி சாலைகள் உள்ளிட்ட இடங்களில் மரங்கள் நடப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய அளவுக் குறியீட்டின்படி, ஒவ்வொரு மாநிலத்திலும் 33 சதவிகிதம் அளவிற்கு வனப் பரப்பு இருக்க வேண்டுமென்று அளவீடு உள்ளது. ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தளவிலே, 17.59 விழுக்காடு பரப்பளவுதான் வனப் பரப்பு உள்ளது. சமீப காலங்களில் புவி வெப்பமாதல் அதிகரித்து வருவதால், சுற்றுச்சூழல் அதிகமாக பாதிக்கப்பட்டு வருகிறது. அதேபோன்று, மழையின் அளவு ஆண்டுக்காண்டு குறைந்து கொண்டே வருகிறது. இப்படிப்பட்ட நிலைமை தொடர்ந்து கொண்டிருந்தால், குடிதண்ணீருக்கே பஞ்சம் வரும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். 1,200 அடி, 1,300 அடி அளவிற்கு ஆழ்துளைக் கிணறு அமைத்தாலும் இப்போது குடிதண்ணீர் கிடைப்பது அரிதாக உள்ளது.

*முற்பகல் 11–15*

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பசுமையான தமிழகத்தை உருவாக்க மரம் நடுவதாக இங்கே கூறினார்கள். கடந்த நான்கு

ஆண்டுகளில் எத்தனை இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டன? அந்த மரங்களுடைய தற்போதைய நிலை என்ன? அவை யாரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன? அவை போதுமான அளவில் நடவு செய்யப்பட்டுள்ளனவா என்று அறிய விரும்புகிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, ஊராட்சிச் சாலைகள், ஊராட்சி ஒன்றியச் சாலைகள், 1,37,399 கிலோ மீட்டர் அளவிற்கு உள்ளன. கடந்த 4 ஆண்டுகளில் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் தனது துறைமூலம் எத்தனை கிலோ மீட்டர் சாலைகளில் மரங்களை நட்டுள்ளார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். பிற்கால சமுதாயத்தைப் பாதுகாக்க மரங்களை நாம் அதிகமாக வளர்த்தால்தான் மழையை அதிகமாகப் பெற முடியும்; சுற்றுச்சூழலைப் பாதுகாக்க முடியும், குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். இத்தனை கேள்விகள் கேட்டால் எப்படி? (குறுக்கீடு) கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். (குறுக்கீடு)

**திரு. அர. சக்கரபாணி:** முதலமைச்சரைப் புகழ்ந்து பேசுகிறார்கள். நான் ஏதாவது குறை சொல்கிறேனா? ஏதாவது எங்கள் தலைவரைப் புகழ்ந்து பேசினேனா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகக் கேள்வி கேளுங்கள். உங்களுக்கு இன்னொரு கேள்வி கேட்க வாய்ப்பு இருக்கிறது. சுருக்கமாகக் கேளுங்கள். (குறுக்கீடு) கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** அதனால், மரம் வளர்க்கின்ற மாபெரும் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு தமிழ்நாட்டை பசுமை மாநிலமாக மாற்றவும், மாநிலத்தில் வனங்களின் பரப்பளவை அதிகப்படுத்தவும், சுற்றுச்சூழலை மேம்படுத்தவும் மாபெரும் மரம் நடும் திட்டத்தை





தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்த ஆணையிட்டார்கள். அதன்படி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பிறந்த நாளன்று ஒவ்வொரு வருடமும் பொது மக்களிடையே மரம் நடுவது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இத்திட்டம் வனத் துறையின் மூலமாக தமிழகத்திலுள்ள 32 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, 2011–2012 ஆம் ஆண்டில் 64 இலட்சம் மரக்கன்றுகளும், 2012–2013 ஆம் ஆண்டில் 65 இலட்சம் மரக்கன்றுகளும், 2013–2014 மற்றும் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை 66 இலட்சம் மரக்கன்றுகளும், ஆக மொத்தம் 1.95 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

இத்திட்டத்தின்கீழ் நிழல் தரும் மர இனங்களான வேம்பு, புங்கன், இலுப்பை, வாகை, செண்பகம், மயிலம், நாகலிங்கம், ஆல், குமிழ், கடம்பம் போன்ற மரங்கள் சாலையோரங்களிலும், நிறுவனங்கள் மற்றும் அரசு நிலங்களிலும், காலியாக உள்ள இடங்களிலும் நடவு செய்யப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சி சாலைகளில் 2011–2012 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை 5.82 இலட்சம் மரக்கன்றுகள் இதுவரை நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இது தவிர, தமிழ்நாடு உயிர்ப்பன்மை மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தின்கீழ், பட்டா நிலங்களில் 2012–2013 ஆம் ஆண்டு முதல் 31–1–2015 வரை 3.83 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவான பதிலைச் சொல்லவில்லை. இருந்தபோதிலும், இந்தியாவைப் பொறுத்தவரையில் கேரளா, மத்தியப் பிரதேசம், ஜார்கண்ட், உத்தரகண்ட், சட்டீஸ்கர் போன்ற வடகிழக்கு

[2015 பிப்ரவரி 19

*மாநிலங்களில் வனப் பரப்பு அதிகமாக உள்ளதால், அங்கு ஆண்டுதோறும் பெய்கின்ற மழையின் அளவு அதிகமாக இருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், வனப் பரப்பு குறைவாக இருப்பதால், மழையின் அளவு ஆண்டுக்கு ஆண்டு குறைந்துகொண்டே வருகிறது. பொதுப் பணித் துறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கவனித்துக்கொள்ளப்பட்டு வருகிறது. அதேபோல், நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில், 63,000 கி.மீ. சாலைகள் உள்ளன. அதேபோன்று, ஊரக வளர்ச்சித் துறையைப் பொறுத்தவரையில் சுமார் 1,37,399 கி.மீ. சாலைகள் உள்ளன.*

*வருவாய்த் துறையைப் பொறுத்த அளவில் தரிசு நிலங்கள் மற்றும் இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் அதிகமான தரிசு நிலங்கள் உள்ளன. அதனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையின்கீழ் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், வேளாண்மைத் துறை அமைச்சர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர், வனத் துறை அமைச்சர், வருவாய்த் துறை அமைச்சர் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றை அமைத்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வைத்து மாவட்டந்தோறும் எங்கெங்கெல்லாம் மரங்களை நடலாம் என்பதை ஆராய்ந்து, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையின்கீழ் ஒரு குழு அமைத்து . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களைக் கேள்வி கேட்க அனுமதித்தால், நீங்கள் மானியக் கோரிக்கையின்மீது பேசுவதுபோல் பேசினால் எப்படி? (குறுக்கீடு) உங்களை துணைக் கேள்வி கேட்கத்தான் அனுமதித்தேன். (குறுக்கீடு) இது முறையல்ல. (குறுக்கீடு) ஒரு யோசனையை நீங்கள் எப்படி வேண்டுமானாலும் கொடுக்க முடியும். (குறுக்கீடு) ஏற்கெனவே நீங்கள் இந்த அவையில் பணியாற்றி அனுபவம் பெற்றிருக்கிறீர்கள். இப்படியெல்லாம் வேண்டுமென்றே கேள்வி கேட்டால் எப்படி? இது கேள்வி நேரத்தை நீட்டிப்பதாக இருக்கிறது. (குறுக்கீடு) இது முறையல்ல. (குறுக்கீடு) மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11–20*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டில் 33.3% காடுகள் இருக்கவேண்டும்.*



2015 பிப்ரவரி 19]

*தமிழ்நாட்டில் 17.5% காடுகள் இருந்தது. 1991–ல் இதய தெய்வம் புரட்சித் தலைவி மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், "காடு வளர்ப்புத் திட்டம்" என்ற ஒரு திட்டத்தை கொண்டு வந்த பிறகு, 2001–லிருந்து 2006 வரைக்கும் 23.5% அளவிற்கு காடுகளின் வளர்ச்சி உயர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு மாதத்திற்கு முன்பு கின்னஸ் சாதனையாக 34 இலட்சம் மரக் கன்றுகளை நட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காடு வளர்ப்புத் திட்டம் என்ற ஒரு அபூர்வ திட்டத்தையே கொண்டு வந்தவர் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களின் ஆட்சிக் காலத்தில் சில நேரங்களில் காடுகள் அழிக்கப்படும்; பிறகு நாங்கள் வந்து அங்கு மரங்களையெல்லாம் நட்டு, காடுகளின் சதவிகிதத்தை உயர்த்துவோம். அதுதான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 30. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி உங்களுக்கு இரண்டு துணைக் கேள்விகள் கேட்க நான் அனுமதி வழங்கிவிட்டேன். உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் இரண்டு துணைக் கேள்விகள் கேட்க அனுமதி வழங்கிவிட்டேன். உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்பில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) இரண்டு துணைக் கேள்விகள் கேட்க உங்களுக்கு அனுமதி வழங்கி விட்டேன். (குறுக்கீடு) இரண்டு கேள்விகளை துணைக் கேள்விகளாகக் கேட்க அனுமதி வழங்கிவிட்டேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இதற்கு மேல் உங்களுக்கு வாய்ப்பு அளிக்க இயலாது, நீங்கள் உட்காருங்கள்.

வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**30—**

### செவிலியர் கல்லூரி

***30065—திரு. ஏ. லாசர்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2015 பிப்ரவரி 19

*(அ) பெரியகுளம் தொகுதியில் செவிலியர் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்று மணியோசை கேட்டு, குறை தீர்த்த மனு நீதிச் சோழனையும் தாண்டி, இன்று மக்களின் மன ஓசையைக் கேட்டு, குறை தீர்ப்பவர் மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு வினாவை எழுப்பி, அந்த வினா அவைக்கு வரும் முன்னரே, விரைந்து செயல்படக்கூடிய ஆற்றல் படைத்த அரசு, வேகமான அரசு, நம்முடைய மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிநடத்தக்கூடிய அரசாகும்.

(அ) மற்றும் (ஆ) பெரியகுளம் தொகுதியில் செவிலியர் கல்லூரி 2014–2015 ஆம் கல்வியாண்டில் துவங்கப்பட்டு, தற்போது 50 மாணவர்கள் சேர்க்கையுடன், கல்லூரி மிகச் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் பெரியகுளத்தில் செவிலியர் கல்லூரி தொடங்கப்பட்டு, இந்த ஆண்டு 50 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருப்பது உண்மை. ஆனால், நான் இந்தக் கேள்வியை நீண்ட நாட்களுக்கு முன்பு எழுப்பியிருந்தேன். கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் இதற்காக நிதியை ஒதுக்கி தந்ததற்கு முன்னாள் முதல்வர் அவர்களுக்கும், இந்நாள் முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய தாழ்மையான வேண்டுகோள் என்னவென்றால், கேள்விகளை



2015 பிப்ரவரி 19]

மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய பிறகு, ஒரு குறிப்பிட்ட காலத்தில் பதில் சொன்னால், அது உதவியாக இருக்கும். கேள்வி கேட்டு, நீண்ட நாட்களுக்குப் பிறகு அவற்றிற்குப் பதில் தரப்படுகிறது. திட்டத்தைத் துவக்கி அது நடப்பது என்பது வரவேற்கத்தக்கது, அரசினுடைய நடவடிக்கை பாராட்டத்தக்கது. ஆனால், ஓர் ஆண்டு, இரண்டு ஆண்டுகளுக்கு பின்பு அதற்கு பதில் தருவது என்பது, இந்தச் சட்டமன்றத்தில் கேள்வி எழுப்பிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நியாயம் வழங்கியதாக இருக்குமா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஆலோசிக்க வேண்டும். கல்லூரி துவக்கியதற்கு என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், இந்தக் கேள்விக்கு காலத்திற்குள் பதில் சொல்லியிருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோளாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசிடமிருந்து பதில் வந்தவுடன்தான், இந்தக் கூட்டத் தொடரில் இந்தக் கேள்வியை வைத்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) துணைக் கேள்விக்கு அனுமதியில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) சரி துணைக் கேள்வியைக் கேளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி இருக்கின்றது. மற்ற பல அரசுக் கல்லூரிகளும் இருக்கின்றன. ஆனால், அந்த மருத்துவக் கல்லூரியில் தனியாக தலைக்காயம் மற்றும் தீக்காய சிகிச்சைப் பிரிவுகள் இல்லை, அதற்கான சிறப்பு மருத்துவர்களும் இல்லை. நீண்ட நாட்களாக நான் இந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறேன். எனவே, தேனி மாவட்டத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிக்கு தலைக்காயம் மற்றும் தீக்காய சிகிச்சைப் பிரிவுகள் துவங்க ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும். ஏனென்றால், நோயாளிகளை மதுரைக்கு அழைத்துச் செல்வதற்கு பலர் சிரமப்படுகிறார்கள். சில சமயங்களில் நோயாளிகள் மரணமடைகிற நிலைமைகூட இருக்கிறது. அரசும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இதனைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, தேனி மாவட்ட மருத்துவக் கல்லூரியில் தலைக்காயம் மற்றும் தீக்காயத்திற்கு என தனியாக சிறப்பு பிரிவுகள் துவங்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத்

[2015 பிப்ரவரி 19

தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி வழங்கப்பட்டது மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு மருத்துவக் கல்லூரி துவங்கப்பட்டால், மாணவர்களின் சேர்க்கை நடந்து, படிப்படியாக ஒவ்வொரு சிறப்பு சிகிச்சைப் பிரிவுகளும் மருத்துவக் கல்லூரியில் துவங்கப்படுவது வழக்கம். அந்த வகையில், தேனி மாவட்டத்தில் புதிதாகத் துவங்கப்பட்ட மருத்துவக் கல்லூரிக்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கைக்கேற்ப, படிப்படியாக அனைத்து வசதிகளும் கொண்ட அனைத்துப் பிரிவுகளும் துவக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. துரையப்பா அவர்கள்.

**டாக்டர் ச. துரையப்பா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி, இதய தெய்வம் புரட்சித் தலைவி பொன்னியின் செல்வி மக்கள் தலைவர் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். பொதுவாக நோயாளிகள் மருத்துவர்களைப் பார்க்கும்போது பெயர் பலகையைத்தான் கவனிக்கிறார்கள். என்ன Designation இருக்கிறது, என்ன மேற்படிப்பு இருக்கிறது என்று பார்த்து மருத்துவரை நாடிச் செல்கிறார்கள். ஆகவே, மேற்படிப்பு, பட்டப் படிப்பு மாணவர்களுடைய எண்ணிக்கையை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் உயர்த்துவார்களா? இதனை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2015 பிப்ரவரி 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே அவர்களுடைய பொற்கால ஆட்சியில் எம்.பி.பி.எஸ். மருத்துவ இடங்கள் 1,945 என்று இருந்ததை 2,555 ஆக உயர்த்தி, 610 கூடுதல் இடங்களை அரசுக்குப் பெற்றுக் கொடுத்தது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அது எம்.பி.பி.எஸ். இடங்கள். அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பட்ட மேற்படிப்பு இடங்களிலும் 60 புதிய இடங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே ஓர் ஆசிரியருக்கு ஒரு மாணவர் என்று இருந்த விகிதத்தை MCI-இந்திய மருத்துவக் கழகம், ஓர் ஆசிரியருக்கு இரண்டு மாணவர்கள் என்று விதியைத் தளர்த்தியிருக்கின்ற அந்த நிலையிலே, அந்த விதி தளர்வைப் பயன்படுத்திக்கொண்டு 60 பட்ட மேற்படிப்பு இடங்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உயர்த்தியிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சமீபத்திலே ஆய்வு செய்தார். செவிலியர் கல்லூரி துவங்குவதற்கான அனைத்து வசதி வாய்ப்புகளும் அதற்குத் தேவையான இட வசதிகளும் அங்கு இருக்கின்றன. அதே மருத்துவமனையிலே 8 தனியார் செவிலியர் கல்லூரிகளுடைய மாணவ, மாணவியர் பயிற்சி பெறவும் அரசு அனுமதி அளித்து, அங்கே அவர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். எனவே, ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் செவிலியர் மருத்துவக் கல்லூரி துவங்க இந்த அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2015 பிப்ரவரி 19

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பிலே 5 செவிலியர் கல்லூரிகளும், அதைப்போல, 2,000 இருக்கைகள் கொண்ட செவிலியர் பட்டப் படிப்பு இருக்கைகளும் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. நிதிநிலைமைக்கேற்ப ஈரோட்டிலே இதனை மாற்றிட அரசு யோசிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

**[குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, நேற்றே உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். ஆளுநர் உரையின்மீது விவாதம் நடக்கும்போது* Zero Hour*–ல் பிரச்சினை எழுப்புவது சரியல்ல. (குறுக்கீடு) நீங்கள் இன்றைக்கு பேசப் போகிறீர்கள். என்ன பேச வேண்டுமோ அப்போது நீங்கள் பேசுங்கள். பேசுபவர் பட்டியலில் உங்கள் பெயர் இருக்கிறது. நீங்கள் விவாதத்தில் பேசும்போது பேசலாம். (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் பேசும்போது பேசலாம். உட்காருங்கள்.*

*(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)*

## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.*



2015 பிப்ரவரி 19]

**திரு. கடம்பூர் ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, களத்திற்குப் போகாமலேயே களமிறக்கிய வேட்பாளருக்கு கம்பீரமான வெற்றியைப் பெற்றுத் தந்து ஒன்றரை கோடி சிப்பாய்களை ஒரே சொல்லால் இயக்கவல்ல இரும்புத் தலைவி! மனித சக்திகளைக் கடந்த மகா சக்தி! ஈகையின் இலக்கணம்! கடமையின் காவலர்! சாதனைகள் பல படைத்த தங்கத் தாரகை! 40 ஆம் வயதில் அரசாள வந்த அரங்கனின் பேரொளி! (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து வாகை சூடி வரும் வளர் தமிழ், மனித நேயத்தின் மறு உருவாய், வெண்தாடி வேந்தரின் துணிவும், பேரறிஞர் அண்ணாவின் கனிவும், புரட்சித் தலைவரின் பண்பும் ஒருசேர இணைந்த திராவிடப் பேரொளி! மக்களின் அன்பையும் மகேசனின் அருளையும் ஒருங்கே பெற்ற ஒப்பற்ற தலைவி! இன்னல்களைக் கண்டு கலங்காத இமயம், இடர்களையும், தடைகளையும் சுக்குநூறாக்கி வெற்றிகளைக் குவித்திடும் வெற்றித் தாய்! அன்பு, அறிவு, ஆற்றல், துணிவு என எல்லாம் ஒருங்கிணைந்த பல்கலைக் களஞ்சியம்! கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்கள் பணிந்து (மேசையைத் தட்டும் ஒலி) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது எனது உரையைத் துவக்குகிறேன்.

*முற்பகல் 11–30*

தூத்துக்குடி மாவட்டம், கடம்பூர், சிதம்பராபுரம் என்னும் குக்கிராமத்தில் பிறந்த எனக்கு இந்த 14–வது சட்டமன்றத்தில் முகவரி அளித்து, 4–வது முறையாக பேரவையில் பேச அனுமதி அளித்த இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். தொகுதிக்கே செல்லாமல் வெற்றி பெற்ற பெருமகன் தேவர் திருமகன் என்பதைக் கேள்விப்பட்டிருக்கின்றேன். அலை கடலுக்கு அப்பால், அமெரிக்க நாட்டின் புரூக்ளின் மருத்துவமனையில் இருந்து, இங்கே வர முடியாத சூழ்நிலையில் புகைப்படத்தை மட்டும் காட்டி வெற்றி பெற்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் திறமையைக் கண்டு நாடு வியந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இன்று களத்திற்கே செல்லாமல், அடக்கத்தின் திருவுருவாய், அமைதியின் மறு உருவாய், திருவரங்க திருத்தலத்திற்கு தான் செய்த சாதனைகளை மட்டும் பட்டியலிட்டு, ஒரே ஒரு கடிதம்மூலம் (மேசையைத் தட்டும் ஒலி) வாக்காளர்களின் மனதைத் தொட்டு,

[திரு. கடம்பூர் ராஜு] [2015 பிப்ரவரி 19

*1,51,561 வாக்காளர்களை மின்னணு வாக்கு இயந்திரத்தில் இரட்டை இலை சின்னத்தில் வாக்களிக்க வைத்து, வெற்றி வாகை சூடிய ஒரே தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை இன்று நாடே பார்த்து மகிழ்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு அடிப்படைக் காரணம், கடந்த 3½ ஆண்டுக் காலத்தில் அறிவித்த திட்டங்கள் அனைத்தையும் அறிவிப்போடு விட்டுவிடாமல் நிறைவேற்றி, நிமிர்ந்து நிற்கும் அம்மாவின் செயல் திறன் என்பதை தமிழ்கூறும் நல்லுலகம் நன்கு அறியும். கடந்த 3½ ஆண்டுக் காலம் மக்களின் முதல்வர் அம்மாவினுடைய வழிகாட்டுதலின்படி நடைபெற்று வரும் தமிழக அரசின் கொள்கைகள் மற்றும் முன்னோடி முயற்சிகளை ஆளுநர் உரை விரிவாக எடுத்துரைக்கிறது. மாண்புமிகு அம்மா அரசின் வெற்றிகளைக் கண்டு பொறுக்காத சில எத்தர்கள் கூட்டம் குறை கூறுவதையே குலத் தொழிலாகக் கொண்டு, ஊளையிட்டுக்கொண்டிருக்கின்றன. தொகுதி மக்களை ஏமாற்றி, சட்டமன்றம் வருவதற்கு அனுமதிச் சீட்டை வாங்கி, அவைக்கு வர திராணியின்றி அவதூறு பேசுகின்றனர். இவர்களில் ஒரு முதியவரும் இருக்கின்றார். ஒரு Citizen-ம் இருக்கின்றார்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Citizen என்றால் குடிமகன். (குறுக்கீடுகள்) தமிழினத்தின் உதிரத்தை உறிஞ்சிக் குடித்த குடும்பத்தில் (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 'குடிமகன்' என்று சொன்னேன். ஏன் அவர்கள் எழுந்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், உட்காருங்கள்.*

**திரு. கடம்பூர் ராஜு:** *தமிழினத்தின் உதிரத்தை உறிஞ்சிக் குடித்த குடும்பத்தில், குடும்பப் பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை. (குறுக்கீடுகள்) அந்த முதியவர் சொல்கிறார், ஆளுநர் உரையில் புதிய திட்டங்கள் இல்லை. (குறுக்கீடுகள்) குடிமகன் என்றால் உங்களுக்கு என்ன? குடிமகன் என்று யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. நீங்கள் ஏன் எழுந்திருக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) ஆனால், ஒரு தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் கடந்த ஆண்டில் கருத்து தெரிவித்துள்ளார். (குறுக்கீடுகள்) Citizen-க்கு அர்த்தம் குடிமகன். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) Citizen என்றால் குடிமகன். (குறுக்கீடுகள்)*



2015 பிப்ரவரி 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உறுப்பினர்கள் அவரவர் இடத்திற்குச் சென்று அமருங்கள். இப்படியெல்லாம் வற்புறுத்த முடியாது. (குறுக்கீடு) அப்படியெல்லாம் நிர்ப்பந்தப்படுத்த முடியாது. (குறுக்கீடுகள்) முதலில் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) எல்லோரும் போய் அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது யாரையும் பெயர் குறிப்பிட்டுச் சொல்லவே இல்லை. யாரையும் பெயரைக் குறிப்பிட்டு, 'இவர் இப்படி, அவர் அப்படி' என்று எந்தவித குறிப்புரையையும் அவர் சொல்லவில்லை. ஆகவே, இதில் எந்தவித ஆட்சேபத்திற்குரிய பகுதியும் இல்லை. ஆகவே, சபை நடவடிக்கை தொடர்வதற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அவர் யாரையாவது குறிப்பிட்டுச் சொன்னாரா? (குறுக்கீடுகள்) குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஒரு வார்த்தைக்கு நீங்களே ஏதாவது கற்பனையாகப் பொருள் கொள்ளக்கூடாது. (குறுக்கீடுகள்) அவர் குறிப்பிட்டுப் பேசுவதற்கு, கற்பனையில் நீங்களே ஏதாவது பொருள் கொண்டிருந்தால் அது தவறு. அது முறையல்ல, தயவுசெய்து ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவது எதுவும் அவைக்குறிப்பில் வராது.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இரண்டாவது Citizen என்பதற்கு தமிழில் விளக்கம் சொன்னார்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. அழகாபுரம் மோகன்ராஜ், நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள், உறுப்பினரைப் பார்த்துப் பேசக்கூடாது. என்னுடைய அனுமதி இல்லாமல் நீங்கள் இப்படி பேசக்கூடாது. முதலில் நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. Citizen என்றால் என்ன பொருள் சொல்வீர்கள்? அதன் தமிழாக்கம் என்ன? (குறுக்கீடுகள்)*

[2015 பிப்ரவரி 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. குறிப்பிட்டுச் சொன்னால்தான் நீங்கள் கேட்கலாம். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) இது முறையல்ல. முதலில் நீங்கள் உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. கடம்பூர் ராஜு, ஆளுநர் உரையின்மீது பேசுங்கள். யாரையும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதில்லை.

**திரு. கடம்பூர் ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார் பெயரையும் குறிப்பிடாமல், நீங்கள் ஆளுநர் உரையின்மீது மட்டும் பேசுங்கள்.

*முற்பகல் 11–35*

**திரு. கடம்பூர் ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. Citizen என்பதற்கு அர்த்தம் குடிமகன் என்பதுதான். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெற்று வரும் இந்த அரசு, சட்டம் ஒழுங்கினை நிலைநாட்டுவதிலும், தீவிரவாத சக்திகளை முறியடிப்பதிலும் முன்னிலை வகிக்கின்றது என்பதை இந்த நாடே பாராட்டுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அது என்னவென்று நான் பார்க்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் போய் உட்காருங்கள்.

**திரு. கடம்பூர் ராஜு:** தமிழ் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்துவரும் இந்த அரசு, தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு 42.23 கோடி ரூபாயையும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், மதுரையில் உள்ள தமிழ்ச் சங்கம், தஞ்சையில் உள்ள தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் கட்டமைப்புகளின் மேம்பாட்டிற்கு ரூ.43.9 கோடியும் ஒதுக்கியுள்ளது. இலங்கை அரசால் தூக்கு தண்டனையை எதிர்கொண்டிருந்த 5 தமிழக மீனவர்களை விடுவிக்க இந்த அரசு எடுத்த முயற்சிகளைப் பாராட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தினை வரலாற்று வெற்றியாக 142 அடி



2015 பிப்ரவரி 19] [திரு. கடம்பூர் ராஜு]

அளவிற்கு உயர்த்திய சாதனைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கும் பாராட்டு சிறப்புக்குரியது.

தமிழகத்தின் ஒப்புதலின்றி காவேரியின் குறுக்கே புதிய அணை கட்ட கர்நாடக அரசு திட்டமிட்டுள்ளதை எதிர்த்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி செயல்படுகின்ற இந்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை. தேசிய நதிநீர் இணைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக தீபகற்ப நதிகளை இணைக்கும் திட்டத்தினைச் செயல்படுத்துவது நதிநீர் தொடர்பான பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வாக அமையும் என்று தெரிவித்திருப்பது பெருமைக்குரியது.

பொருட்கள் மற்றும் சேவை வரிகள் குறித்த அரசமைப்புச் சட்டத் திருத்தத்தினை நிறைவேற்றுமுன் ஒருமித்த கருத்தினை மத்திய அரசு உருவாக்கவேண்டும் என்று வலியுறுத்தியிருப்பது மிகவும் பாராட்டுக்குரியது. மத்திய திட்டக் குழுவைக் கலைத்து, அதற்கு மாற்றாக புதிய அமைப்பை ஏற்படுத்தும் மத்திய அரசின் முடிவை இந்த அரசு வரவேற்கிறது என்ற செய்தி சிறப்புக்குரியது. இதன்மூலம் நல்லவற்றை யார் செய்தாலும், அதனை வரவேற்க மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் இந்த அரசு தயங்காது என்பதை அனைத்துக் கட்சியினரும் புரிந்துகொள்ளவேண்டும்.

குறிப்பாக குழம்பிய கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு, ஜாமீன் தொகையையும் தன்மானத்தையும் இழந்து நிற்கும் தமிழிசைக் கட்சிகள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். 2013–2014 ஆம் ஆண்டில் உணவு தானியம் மற்றும் பயறு வகைகள் உற்பத்தியில் தமிழகம் சாதனை படைத்து மத்திய அரசின் விருதினைப் பெற்றிருப்பது பாராட்டுக்குரியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டத்தின்மூலம் கிராமப்புற ஏழையெளியோரின் வாழ்வாதாரம் உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அம்மா மருந்தகங்கள், அம்மா உணவகங்கள், அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா சிமெண்ட் என சலுகை விலையில் மக்களின் தேவை அறிந்து அரசே விநியோகம் செய்யும் பணிகள் பாராட்டுக்குரியவை. உலக வங்கித் தலைவரால் பாராட்டப்பட்ட இந்த அரசின் புது வாழ்வுத் திட்டம் குறித்த பாராட்டுச் செய்தி குறிப்பிடத்தக்கது.

[திரு. கடம்பூர் ராஜு] [2015 பிப்ரவரி 19

சென்னை மாநகரின் தேவைகளை நிறைவு செய்ய ஆண்டுதோறும் ரூ.500 கோடி ஒதுக்கீட்டில் செயல்பட்டுவரும் சென்னைப் பெருநகர மேம்பாட்டுத் திட்டமும், தமிழகத்தின் 12 மாநகராட்சிகளையும், ஸ்மார்ட் நகரங்கள் திட்டத்தின்கீழ் சேர்க்க மத்திய அரசிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதும் பாராட்டுக்குரியது. குடிசைப் பகுதிகள் மேம்பாட்டிற்கு எடுக்கப்பட்டுள்ள முயற்சிகள் பாராட்டுக்குரியவை.

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தில் கண்டுள்ள முன்னேற்றங்களும், எதிர்காலத்தில் அதனை விரிவாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளும் பாராட்டுக்குரியவை. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதி நிறுவனத்திடமிருந்து ரூ.3,572 கோடி நிதியுதவி பெற்று மின் விநியோகத்தின் தரத்தினை மேம்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படுகின்ற இந்த அரசு எடுத்துள்ள முயற்சி மிகவும் பாராட்டுக்குரியது. மண்ணிவாக்கம்-நெமிலிச்சேரி வெளிவட்டச் சாலை நிறைவு பெற்றிருப்பதும், நெமிலிச்சேரி-தச்சூர் சாலைப் பணிகள் விரைவாக நடைபெற்று வருவதும் மகிழ்ச்சிக்குரியது.

முற்பகல் 11–40

உலக அளவில் முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் வகையில் 2015 மே மாதம் 23 மற்றும் 24 ஆம் தேதிகளில் சென்னையில் நடைபெறவுள்ள உலகளாவிய முதலீட்டாளர்கள் மாநாட்டில் ஒரு இலட்சம் கோடி ரூபாய் முதலீட்டை ஈர்ப்பு செய்வோம் என்ற செய்தி மிகவும் சிறப்புக்குரியது. (மேசையைத் தட்டும் ஒலி)

9.68 இலட்சம் பதிவு செய்யப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்மூலம் 63.18 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது என்ற செய்தி மிகவும் பாராட்டுக்குரியது.

182 புதிய தொடக்கப் பள்ளிகளைத் தொடங்கி, 1,317 நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளைத் தரம் உயர்த்தி, இதுவரை 72,597 ஆசிரியர்களைப் பணியமர்த்தி, கல்வி இடைநிற்றலைக் குறைத்து, கடந்த 4 நிதியாண்டுகளில் மொத்தம் 8,748.89 கோடி ரூபாயை இந்த அரசு வாரி வழங்கியிருப்பது ஒரு மாபெரும் சாதனையாகும்.

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களை அரசுப் பள்ளி மாணவர்கள் பெற்றிருப்பது மிகவும்



2015 பிப்ரவரி 19] [திரு. கடம்பூர் ராஜு]

பாராட்டுக்குரியது. இந்த அரசு எடுத்துக்கொண்ட முன்முயற்சிகளின் காரணமாக, உயர் கல்வி சேர்க்கை விகிதம் தேசிய அளவில் 21 சதவீதமாக இருந்தபோதிலும், தமிழ்நாட்டில் 42 சதவீதமாக உயர்ந்துள்ளது என்பது இந்த அரசு உயர் கல்வித் துறையில் தேசிய அளவில் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேநேரத்தில், 35 ஆண்டு கால கோரிக்கையாக இருந்த கோவில்பட்டி சட்டமன்ற தொகுதிக்கு புதிய அரசு கலைக் கல்லூரியைக் கொடுத்து, அதற்கு 7.25 கோடி ரூபாயில் கட்டடமும் கட்டிக் கொடுத்த தமிழகத்தின் பொற்கால முதல்வர், மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

கடந்த 4 ஆண்டுகளில் 172 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளதோடு, பல சுகாதார நிலையங்கள் நவீன கருவிகளோடு மேம்படுத்தப்பட்டிருப்பதும் பாராட்டுக்குரியது.

விளையாட்டுத் துறைக்கு இந்த அரசு எடுத்து வரும் சிறப்புக் கவனத்தால், நம்முடைய வீரர்கள் பெற்றிருக்கும் பதக்கங்களை எனக்கு முன்பாக பேசிய மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பட்டியலிட்டுச் சொன்னார்கள். அந்த வகையில் நமது வீரர்கள் குவித்து வந்திருக்கும் பதக்கப் பட்டியல் ஆளுநர் உரைக்கு அணி சேர்க்கும் வகையில் உள்ளது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வகையிலே, தேசிய விளையாட்டுப் போட்டியான ஹாக்கிக்கு பெயர்பெற்ற ஊர் கோவில்பட்டி என்பதை அறிந்து, உலகத்தரம் வாய்ந்த மைதானத்தை ரூ.7 கோடி செலவில் கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதிக்கு வாரி வழங்கிய வள்ளல் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுக்குத் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சத்துணவுத் திட்டத்தை மேம்படுத்தி ஆண்டுக்கு 103.28 கோடி ரூபாய் கூடுதல் செலவில் பலவகை உணவுகள் வழங்கும் செயல்பாடுகள் சிறப்பிற்குரியவை.

இவ்வாறு சமூகத்தின் ஒவ்வொரு நிலையிலும் உள்ள பொது மக்களின் தேவையை அறிந்து, அவர்களின் மனம் குளிரும்

[திரு. கடம்பூர் ராஜு] [2015 பிப்ரவரி 19

வகையில், அவர்களுக்குரியவற்றை உரிய நேரத்தில் செய்து கொடுத்துவரும் மாண்புமிகு அம்மா அவர்களிடம் சதியும் விதியும் விளையாடுகிறது என்பதை எண்ணும்போது, அந்த சதி எப்படி விளையாடினாலும், இறுதி வெற்றி தர்மத்தின் தலைமகளாய் விளங்கும் தன்னிகரில்லா தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கே என்பதில் மாற்றமில்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)*

கீழமை நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புகள் மேல்முறையீட்டின்போது இல்லாமல் போனதையும் நாம் அறிவோம். ஜனநாயக நாட்டில் மக்களே நீதிபதி. மக்களின் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்ற கருத்திற்கு மாற்றுக் கருத்து இல்லை. இன்று நடைபெறுவதும் அம்மாவின் ஆட்சி. 2016–ல் மீண்டும் தொடரப்போவதும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி. இதற்கு ஸ்ரீரங்கத்து மக்களே முதல் சாட்சி. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைவாக, மாண்புமிகு மக்களின் முதல்வர் அவர்களின் மக்கள் சக்தி மட்டுமல்ல, அம்மா அவர்களிடம் உள்ள இறையருளாலும், நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் சைபர் வாங்கியவர்கள், cyber crime–ஐ நாடி ஓடுகின்ற அவலத்தையும், முட்டை வாங்கியவர்கள் அந்த முட்டையும் கூமுட்டையாகிவிடக்கூடாது என்று தங்கள் காப்புத் தொகையையாவது காப்பாற்ற வேண்டிய காலக் கட்டாயத்தில் போராடுகின்ற அவமானத்திலும் இருக்கின்ற நிலையைப் பார்த்து இந்த நாடே நகைக்கிறது.

இது கடந்த காலம் மட்டுமல்ல. நிகழ்காலத்திலும் இதுதான்; இனிமேல் எதிர்காலத்திலும் இதுதான். இனிமேல் தமிழ் மண்ணில் எந்த நாளும் அம்மா அவர்களின் வெற்றிக்கொடி மட்டும்தான் பறக்கும். அம்மா அவர்களின் இலட்சியம் 234 தொகுதிகளிலும் வெற்றி. *(மேசையைத் தட்டும் ஒலி)* வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் அம்மா அவர்கள் பெறப்போவதும் 234 தொகுதிகளிலும் வெற்றி. அம்மா அவர்களுடைய இலட்சியம் வெற்றி பெறப்போவது நிச்சயம் என்று சொல்லி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி நிறைவு செய்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.



2015 பிப்ரவரி 19]

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2015 ஆம் ஆண்டினுடைய மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெறுகின்ற விவாதத்திலே கலந்துகொண்டு தமிழக மக்களின் தேவைகளை, அடிப்படைப் பிரச்சினைகளை சட்டமன்றத்திலே எடுத்துரைக்கின்ற வகையிலே தேசிய முற்போக்கு திராவிட கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினராகவும், தமிழக சட்டமன்றப் பேரவை எதிர்க்கட்சி துணைத் தலைவராகவும் ஆக்கி அழகு பார்த்து, உரையாற்ற எனக்கு வாய்ப்பு வழங்கிய எங்களுடைய அரசியல் ஆசான், இளைஞர்களின் நம்பிக்கை நாயகன், எதற்கும் அஞ்சாத துணிவும் நேர்மையும் கொடையுள்ளமும் கொண்ட தேசிய முற்போக்கு திராவிட கழகத்தினுடைய நிறுவனத் தலைவரும், தமிழக சட்டமன்றப் பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான மாண்புமிகு புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களை வணங்கி, இந்த அவையிலே என்னுடைய வாதத்தைத் தொடங்குகின்றேன்.

*முற்பகல் 11–45*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் அவை முன்னவர் அவர்களுக்கும் ஒரு விளக்கத்தைத் தெரிவிக்க விரும்புகின்றேன். ஆளுநர் உரைமீது உங்களைக் குற்றம் சொல்லவேண்டுமென்று சொல்லவில்லை. உங்களுக்குத் தெரியாத குறைகளைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். அதன்மூலமாக ஒரு தீர்வு காணவேண்டுமென்றுதான் சொல்கிறோம். *(குறுக்கீடுகள்)* எங்களுக்கும் சத்தம் போடத் தெரியும்; உங்களுக்குத்தான் சத்தம் போடத் தெரியும் என்று நினைக்காதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** அவர்கள் உங்களைப் பார்த்துப் பேசுகிறார்களா? 2015 ஆம் ஆண்டு மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில் சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்ட மக்களின் வளர்ச்சித் திட்டங்களைப் பற்றியும், இந்த நிதியாண்டில் செயல்படுத்துகின்ற வளர்ச்சித் திட்டங்கள் பற்றியும் மகிழ்ச்சிகரமான அறிவிப்புகள் வரும் என்று எதிர்பார்த்தோம். ஆனால், அதற்கு மாறாக சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்ட பல திட்டங்கள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்பது மட்டுமல்ல; பல திட்டங்கள் இன்னும் துவங்கப்படவில்லை என்பதை தமிழக

[திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்] [2015 பிப்ரவரி 19

மக்கள் எதிர்பார்க்கவில்லை. நிறைவேற்றப்பெறவில்லை என்பது உண்மை. உதாரணமாக ** *(கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. *(கூச்சல்–குழப்பம்)* உறுப்பினர் குறிப்பிட்டுச் சொல்வது முறையல்ல. அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. *(கூச்சல்–குழப்பம்)* இதெல்லாம் முறையல்ல. அதுபற்றி பேசுவதற்கெல்லாம் உங்களுக்கு அதிகாரம் இல்லை. *(குறுக்கீடுகள்)* அதையெல்லாம் பேசுவதற்கு உங்களுக்கு உரிமை இல்லை. *(கூச்சல்–குழப்பம்)* நீங்கள் இந்த மாதிரி அவைக்கு ஒவ்வாதவற்றைப் பேசினால் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். *(குறுக்கீடுகள்)* நான் நிற்கிறேன் அல்லவா? நீங்கள் உட்காருங்கள். *(கூச்சல்–குழப்பம்)* தொடர்ந்து இந்த அவைக்குக் குந்தகம் ஏற்படுத்துகிற வகையில், அவை நடவடிக்கைகளை மேலும் நடத்தவிடாமல் செய்கிற திரு. அழகாபுரம் மோகன்ராஜ் அவர்கள், *(குறுக்கீடு)* அமைதியாகப் பேசுவதாக இருந்தால் பேசலாம். இல்லையென்றால், பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. *(கூச்சல்–குழப்பம்)* விரும்பத்தகாதவாறு பேசுவதால் *(கூச்சல்–குழப்பம்)* திரு. அழகாபுரம் மோகன்ராஜ் அவர்கள் கூறிய வார்த்தைகள் எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. திரு. அழகாபுரம் மோகன்ராஜ் அவர்கள் தொடர்ந்து அவையை நடத்த விடாமல் செய்வதால், அவரை அவையிலிருந்து வெளியேற்றும்படி அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். *(கூச்சல்–குழப்பம்)*

*[தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் (திரு. அருண் சுப்பிரமணியன், திரு. ஆர். சுந்தர்ராஜன், திரு. டி. சுரேஷ்குமார், திரு. க. பாண்டியராஜன், திருமதி ஆர். சாந்தி ஆகியோர் தவிர) பேரவைத் தலைவர் இருக்கைக்கு அருகில் வந்து கூச்சலிட்டனர்.]*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கைக்கு அருகில் வந்து அனைவரும் கூச்சலிடுவதால் அவைக் காவலர்கள் அவர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். *(கூச்சல்-குழப்பம்)* அவையை நடத்த விடாமல் பேரவைத் தலைவருடைய மேசையையும் இடித்துத் தள்ளி, அவையை நடத்தவிடாமல் செய்கிற தே.மு.தி.க. உறுப்பினர்களை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2015 பிப்ரவரி 19] [பேரவைத் தலைவர்]

வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)* வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். *(கூச்சல்-குழப்பம்)*

*[தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் (திரு. அருண் சுப்பிரமணியன், திரு. ஆர். சுந்தர்ராஜன், திரு. டி. சுரேஷ்குமார், திரு. க. பாண்டியராஜன், திருமதி ஆர். சாந்தி ஆகியோர் தவிர) பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.]*

*முற்பகல் 11–50*

தே.மு.தி.க. உறுப்பினர்கள் இன்றைக்கு இந்த அவையை நடத்த விடாமல் அராஜகத்தின் மூலமாகத் தடுக்கலாம் என்று முடிவு செய்து வந்து, திட்டமிட்டு அவையை நடத்தவிடாமல் செய்கிற முயற்சியை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இதுபோன்று நடப்பதை உரிமைக் குழுவிற்குகூட அனுப்ப வேண்டிய சூழ்நிலை இருக்கிறதா என்பதை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் உட்பட, இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சியினர் உட்பட அனைவரும், இங்கே அவர்கள் நடத்திய அராஜகத்தைக் கண்கூடாகப் பார்த்தோம். இந்த அளவிற்கு வன்முறை செய்து, சபை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற வகையில், சட்டமன்றப் பேரவைத் தலைவருடைய இருக்கையையே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு என்னுடைய மேசையையே தள்ளி, நாசப்படுத்தி, அவையை நடத்தவிடாமல் தரக் குறைவாக, அவையினுடைய தரத்திற்கு ஒவ்வாமல் நடந்து கொண்ட அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*(வெளியேற்றப்பட்ட தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் லாபியில் அமர்ந்து தர்ணா செய்தனர்.)*

லாபியில் இருக்கிற தே.மு.தி.க. உறுப்பினர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். உட்கார்ந்து தர்ணா செய்கிறவர்களையும் வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு இவர்கள்

[பேரவைத் தலைவர்] [2015 பிப்ரவரி 19

செய்த செய்கை, இந்த அவைக்கே மிகத் தலைக்குனிவாகும். பேரவைத் தலைவருடைய மேசையை இடித்து, நாசப்படுத்தியது மட்டுமல்லாமல், பல தஸ்தாவேஜுகளையும் மிதித்து, இன்றைக்கு சேதப்படுத்தியிருக்கின்றார்கள். ஆகவே, தரமற்ற இந்தச் செயலை செய்த தே.மு.தி.க. உறுப்பினர்களை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். மேற்கொண்டு, என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதை அவை முன்னவர் அவர்கள் தீர்மானித்து தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

## 4. அரசினர் தீர்மானம்

### தே.மு.தி.க. உறுப்பினர்களை பேரவைப் பணிகளினின்று கூட்டத்தொடர் முழுவதும் தற்காலிகமாக நீக்கி வைத்தல்

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நடைபெற்ற அக்கிரமத்தை, அராஜகத்தை அனைவரும் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருந்தோம். அதுவும், குறிப்பாக அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இங்கே இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். திரு. வி.சி. சந்திரகுமார் அவர்களும், மற்ற தே.மு.தி.க. உறுப்பினர்களும் இணைந்து, நேரடியாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையே தாக்குகின்ற வகையிலே, அவர்களுடைய இருக்கையை நோக்கி வந்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னைத் தாக்குவதுபோல வந்தார்கள். பேரவைத் தலைவரையே தாக்குவது மாதிரி வந்தார்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** அதுவும் கொலை வெறித் தாக்குதல் நடத்துவதைப்போல, இங்கே அவருடைய மேசையைத் தள்ளிவிட்டு, காவலர்களையும் தாக்கி, அவர்கள் தலையிலே அணிந்திருக்கின்ற தொப்பியைப் பிடுங்கி எறிந்து, இங்கே இருக்கின்ற ஆவணங்கள், புத்தகங்கள், அவர்கள் கொண்டு வந்த பேப்பர்கள் மற்றும் ஆவணங்கள் அனைத்தையும் வீசியெறிந்து இருப்பதை இங்கே கண்கூடாக பார்த்துக் கொண்டிருந்தோம். இவ்வளவு அராஜகம் செய்து, சபைக்குக் குந்தகம் விளைவிக்கின்ற வகையிலே, சபை மரபுகளுக்கு மாறான அவர்களுடைய நடவடிக்கை இந்தச் சபையினுடைய மொத்த வரலாற்றிலே இல்லாத ஒன்றாக அமைந்துவிட்டது. பெருமைக்குரிய இந்தச்



2015 பிப்ரவரி 19] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

சபைக்கு மிகப் பெரிய களங்கத்தை ஏற்படுத்திவிட்டார்கள். அப்படிப்பட்ட பெருங்குற்றத்தைப் புரிந்திருக்கின்ற தே.மு.தி.க. உறுப்பினர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கான தீர்மானத்தை நான் இங்கே அனைவருடைய அனுமதியோடு முன்மொழிகின்றேன்.

*முற்பகல் 11–55*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“பேரவையின் அலுவல்கள் நடைபெறவிடாமல் இடைமறித்தும் பேரவையின் விதிகளுக்கு மாறாக அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் செய்து வருவதாலும், சட்டமன்றப் பேரவை விதி *121*, உள்விதி *(2)*—ன்கீழ் இன்று அவைக்கு வருகை தந்து அமளியில் ஈடுபட்ட தே.மு.தி.க. உறுப்பினர்களை இந்தக் கூட்டத் தொடர் முடிய பேரவைப் பணிகளினின்று தற்காலிக நீக்கம் செய்யவேண்டும்”

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

“அவர்கள் அனைவரையும் இந்தக் கூட்டத்தொடர் முடியும் வரை தற்காலிக நீக்கம் செய்வதோடு மட்டுமல்லாமல், அடுத்ததாக வரம்புமீறி பேரவைத் தலைவரையே தாக்குகின்ற அளவுக்கு நடந்து கொண்ட, காவலர்களையும் தாக்கிய, தே.மு.தி.க.வினுடைய சட்டமன்ற எதிர்க்கட்சிக் கொறடா திரு. வி.சி. சந்திரகுமார் மற்றும் அவரோடு சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும், திரு. சந்திரகுமார் அவர்களோடு சம்பந்தப்பட்ட அனைவரையும், மற்றவர்களையும் அடுத்த கூட்டத்தொடர் முழுவதும் தற்காலிகமாக நீக்கி வைக்க வேண்டும்”

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்மானத்தை வாக்கெடுப்பிற்கு விடப்போகிறேன். இந்தத் தீர்மானத்தை முடித்துவிட்டு நீங்கள் சொல்வதைக் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்துடன் இந்த உறுப்பினர்களின் நடவடிக்கை குறித்து அவை உரிமைக் குழுவிற்கும் அனுப்பி வைத்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** (குறுக்கீடு) இதை நியாயப்படுத்துகிறீர்களா? தலைவரை அடிக்க வந்ததை நியாயப்படுத்திப் பேசப்போகிறீர்களா? (குறுக்கீடு) இருங்கள் பிறகு நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தை அவையின் முடிவிற்கு விட்டுவிட்டு கேட்கிறேன். அவையினுடைய முடிவிற்கு தீர்மானத்தை விட்டுவிட்டுப் பேசலாம்.

பேரவைத் தலைவரைத் தாக்க ஓடிவந்து என்னுடைய மேசையை விலக்கி, மிக மோசமாக வேண்டுமென்றே திட்டமிட்டு என்னைத் தாக்கும்விதமாக வந்து இவர்கள் செய்த நடவடிக்கை மிகவும் கண்டிக்கத்தக்கது. அவைக் காவலர்களைத் தாக்கியது, மிகவும் கண்டிக்கத்தக்கது. அவையே இதற்கு சாட்சியாக இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு அவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை அவையினுடைய முடிவிற்கு விடுகிறேன்.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

## 5. தே.மு.தி.க. உறுப்பினர்கள் பேரவைப் பணிகளினின்று கூட்டத்தொடர் முழுவதும் தற்காலிக நீக்கம்–மறுபரிசீலனை செய்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின், சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சபையில் நடந்த சம்பவங்களைக் குறித்து அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய அந்தத் தீர்மானத்தை நீங்கள் ஏற்றுக் கொண்டு, உங்களுடைய தீர்ப்பை



இங்கு வழங்கியிருக்கிறீர்கள். அதற்காக அவையினுடைய ஒப்புதலையும் நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். எனவே நான் அதிலே குறுக்கிடுவதாக தயவுகூர்ந்து நீங்கள் கருதக்கூடாது. இருந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்தைத் தெரிவிக்க விரும்புவது, தொடக்கத்தில் ஆளுங்கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் இங்கே பேசுகின்ற நேரத்தில் தேவையில்லாமல் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது முடிந்து போய்விட்டது. (குறுக்கீடு)

**திரு. மு.க. ஸ்டாலின்:** தேவையில்லாமல் ஒரு வார்த்தையைச் சொன்ன காரணத்தால்தான், தே.மு.தி.க.–வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் அதற்கு பதில் சொல்லக்கூடிய வகையிலே அந்த வார்த்தை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) இல்லை. அவை முன்னவர் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வந்து, அது பேரவையிலே நிறைவேற்றப்பட்டுவிட்டது. நிறைவேற்றப்பட்டுவிட்டதை நீங்கள் பேசவேண்டாம் (குறுக்கீடு) நான் முடிவை அறிவித்துவிட்டேன். அதன்பிறகு நீங்கள் மேற்கொண்டு பேசுவது முறையல்ல. (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள் பேசும்போது யார் பெயரையும் குறிப்பிட்டு, எந்தவித ஆட்சேபகரமான வார்த்தைகளையும் பயன்படுத்தவில்லை. ஆனால், மாறாக தே.மு.தி.க. துணைத் தலைவர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள் பேசுகின்றபோது, குறிப்பிட்டே பேசினார். ** என்று குறிப்பிட்டுப் பேசினார். முதலில் பேசிய உறுப்பினர் யார் பெயரையும் குறிப்பிடாமல், மேலெழுந்தவாரியாக, ஆட்சேபகரமான கருத்துகள் இல்லாமல் வார்த்தைகளைப் பயன்படுத்தினார். அதில் ஆட்சேபத்திற்குரிய பகுதிகள் எதுவுமே இல்லை. ஆனால், இவர் நாங்கள் தெய்வமாக மதிக்கின்ற எங்களுடைய தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம், மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2015 பிப்ரவரி 19

நேரடியாகக் குறிப்பிட்டு விமர்சிப்பதை இங்கே இருக்கிற எந்தத் தொண்டனாலும், யாராலும் தாங்கிக்கொள்ள முடியாது. ஆகவே, பெயரைக் குறிப்பிட்டுப் பேசியதற்கும், குறிப்பிடாமல் பேசியதற்கும் உள்ள வித்தியாசத்தை மாண்புமிகு தி.மு.க. சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்கள் உணரவேண்டும். அவர் மூத்த உறுப்பினர், அனுபவம் பெற்றவர். அவர்கள் இந்த நியாயமான நடவடிக்கையை ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அவர்கள்மீது எடுத்த நடவடிக்கைக்கு இவர்கள் ஆட்சேபணை தெரிவித்தால், அவர்கள் நடந்து கொண்ட முறை சரி என்று இவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா? *(குறுக்கீடு)*

*நண்பகல் 12–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.க. ஸ்டாலின், நீங்கள் அவையில் நடந்தவை அனைத்தையும் பார்த்துக்கொண்டுதான் இருந்தீர்கள். *(குறுக்கீடு)* தீர்மானம் நிறைவேறியதற்குப் பிறகு, அவைத் தலைவர் தீர்ப்பு சொன்னதற்குப் பிறகு, அதன்மீது நீங்கள் விமர்சனம் செய்யவேண்டாம். *(குறுக்கீடு)* நீங்கள் தீர்மானத்தின்மீது விமர்சனம் செய்யவேண்டாம், உட்காருங்கள். *(குறுக்கீடு)* அவையே நடந்தவற்றிற்கு சாட்சியாக இருக்கிறது. *(குறுக்கீடு)* அவை முன்னவர், விளக்கம் அளித்துவிட்டார், இதில் மேற்கொண்டு எதுவும் பேசவேண்டாம். *(குறுக்கீடு)* உங்கள் கட்சி உறுப்பினரைத்தான் பேச அழைக்கப்போகிறேன், நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின், அவர்கள். என்ன சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் காரணத்தைக் கொண்டும் நான் உங்கள் தீர்ப்பில் குறுக்கிட விரும்பவில்லை. நீங்கள் அவர்களுக்கு அடுத்த கூட்டத்தொடர் வரை தந்திருக்கக்கூடிய தண்டனையைக் குறைத்து, அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள்.

## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் தொடர்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள்.



2015 பிப்ரவரி 19]

***திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீதான விவாதத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்திருக்கின்ற எங்களது கழகத் தலைவரும், *(மேசையைத் தட்டும் ஒலி)* திராவிட இயக்கத்தின் பெருந்தலைவருமான, தலைவர் கலைஞர் அவர்களுக்கும், எங்களுடைய கழகத்தின் சட்டமன்றக் கட்சித் தலைவரும், இளைஞர்களின் எழுஞாயிறு, தமிழகத்தின் எதிர்காலம் தளபதி அவர்களுக்கும் எனது வணக்கத்தையும் நன்றியையும் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

'ஏர்ப் பின்னது உலகம்' இது உலகம் அறிந்தது. விவசாயிகளுக்கு நாம் எதைச் செய்கிறோமோ, அதையே கைம்மாறாக உலகிற்கு பெறுகிறோம். எனவே, விவசாயிகளின் நலனிலே அக்கறை கொண்டு எந்த அரசாங்கமும் செயல்பட வேண்டுமென்பது எழுதப்படாத விதி. இன்றைக்கு தமிழகத்திலுள்ள விவசாயிகள் கடந்த காலங்களில் சரிவர மழை பொழியாத காரணத்தினால் பெருத்த பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். தொடர்ந்து வறட்சிக்கு ஆளாகி, அவதியிலே இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்குவதற்கு இந்த அரசாங்கம் ஆளுநர் உரையிலே ஏதாவது கருத்தை வெளியிடும் என்று எதிர்பார்த்தோம். எனவே, அரசாங்கம் இனி வருங்காலத்திலாவது இதைக் கருத்திலே கொள்ளவேண்டுமென்று வேண்டுகிறேன். வறட்சியின் காரணமாக, தமிழகம் முழுவதும் பல இடங்களில் தென்னை மரங்கள் காய்ந்துபோய், பட்டுப்போய் இருக்கின்றன. இதைக் கருத்திலேகொண்டு, அதைக் கணக்கெடுத்து, தென்னை மர விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபடி, தென்னை மரங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2015 பிப்ரவரி 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை இன்னும் கணக்கெடுக்காத காரணத்தினால், அந்த தென்னை மரங்களை வெட்டாமல் விவசாயிகள் காத்திருக்கிறார்கள் என்கிற நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணரவேண்டும். அதேபோல், எங்களுடைய அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் முக்கிய பயிராக இருக்கின்ற முந்திரி, மழை இல்லாத காரணத்தினால் பட்டுப்போகின்ற நிலையில் இருக்கின்றது. தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக அரசு நிவாரணம் வழங்கும் என்று விவசாயிகள் காத்திருக்கிறார்கள். ஆனால், இதுவரை நிவாரணம் வழங்கப்படாத ஓர் அவல நிலை நிலவுகிறது. இதையும் கருத்தில்கொண்டு, எங்கள் பகுதியில் உள்ள முந்திரி, பருத்தி, சோளம் பயிரிட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், கரும்பு விவசாயிகள் தனியார் ஆலைக்கு கரும்பை வெட்டிக் கொடுத்துவிட்டு, இதுவரை அதற்கான பணத்தைப் பெறாமல், பாக்கித் தொகை வராமல் அவதியுறுகிறார்கள்; பாக்கித் தொகையை தனியார் ஆலைகள் உடனடியாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். கரும்புக்குக் கூடுதல் விலை வேண்டுமென்று தொடர்ந்து விவசாயிகள் போராட்டங்கள் நடத்துகிறார்கள்; கோரிக்கைகள் வைத்து வருகிறார்கள். எனவே, கரும்புக்கு டன் ஒன்றிற்கு ரூபாய் 4 ஆயிரம் வரை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்திடவேண்டும். அதேபோல், நெல்லுக்கு, டன்னுக்கு 2 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–05

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தனியார் சர்க்கரை ஆலைகளிடமிருந்து கூடிய விரைவிலே கரும்பு விவசாயிகளுக்கு அந்தப் பணத்தை வாங்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மேலும், கரும்புக்கு டன் ஒன்றிற்கு



2015 பிப்ரவரி 19] [திரு. பி. தங்கமணி]

ரூ.4,000 வழங்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கின்றார்கள். ஏற்கெனவே உங்களுடைய ஆட்சிக் காலத்தில் இருந்த நிலைமையைச் சொல்கின்றேன். நீங்கள் விவசாயிகளுக்கு கரும்புக்கு டன் ஒன்றுக்கு 3,500 ரூபாய் கொடுக்க வேண்டும்; 4,000 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று வெளியில் சொல்லிக் கொண்டிருக்கின்றீர்கள். நீங்கள் இங்கே இருப்பதால், அதன் முழு விவரத்தையும் நான் இப்பொழுது தெரிவிக்கின்றேன். விவசாயிகளுக்காக நீங்கள் பரிந்துரை செய்து பேசிக்கொண்டிருக்கின்றீர்கள். அன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது டன் ஒன்றுக்கு கரும்புக்கு ரூ.1,537 என்று இருந்தது; அப்போது சர்க்கரையினுடைய விலை கிலோ 41 ரூபாய் என்று இருந்தது. ஆனால் 150 கோடி ரூபாய் பாக்கித் தொகையை சர்க்கரை ஆலைகளிடமிருந்து கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுக்காலமாக கரும்பு விவசாயிகளுக்கு நீங்கள் வாங்கித் தரவில்லை. ஆனால், இன்றையதினம் கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.2,650/–ஐ மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அறிவித்திருக்கின்றது. இன்று சர்க்கரையினுடைய விலை கிலோ ஒன்றிற்கு ரூ.26, ரூ.27 என்ற அளவிலேதான் இருக்கின்றது. இருந்தாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தனியார் ஆலைகளிடம் பேசி, நெருக்கடி கொடுத்து, கிட்டத்தட்ட 328 கோடி ரூபாய் அளவிலேதான் பாக்கி இருக்கின்றது.

அதுமட்டுமல்லாமல், நீங்கள் கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ.4,000 கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கின்றீர்கள். கடந்த 2006 தேர்தல் காலத்தில், டன் ஒன்றுக்கு ரூ.2,500 தருவோம் என்று நீங்கள் சொன்னீர்கள். சட்டமன்றத்தில் அதுகுறித்து கேள்வி கேட்டபோது, அந்தத் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு 5 ஆண்டுக் காலம் முழுமையாக இருக்கின்றது என்று பதில் சொன்னவர் இங்கே இருக்கின்றார். ஆகவே, ஆட்சியில் இருக்கின்றபோது ஒரு நிலைப்பாடு; ஆட்சியில் இல்லாதபோது ஒரு நிலைப்பாடு என்று உங்களுடைய கொள்கை இருக்கின்றது. ஆனால் எப்போதெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வருகின்றார்களோ, அப்போதெல்லாம் விவசாயிகளுக்கு அதிலும் குறிப்பாக, கரும்பு விவசாயிகளுக்கு அதிகப்படியான விலையைக் கொடுக்கின்றார்கள். அப்படிப்பட்ட ஆட்சி மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2015 பிப்ரவரி 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு எவ்வளவு நேரம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்பதைக் கொஞ்சம் கூறினால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். சிவசங்கர், உங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நேரம் 15 நிமிடங்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பதினைந்து நிமிடங்களுக்கு மேல் நானும் போகமாட்டேன். நீங்களும் உள்ளே வந்துவிடக் கூடாது என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். சிவசங்கர், உங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நேரம் 15 நிமிடங்கள்தான். நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்தினை அளித்திருக்கிறார்கள். காலமாற்றத்திற்கு ஏற்ப விவசாயிகளுடைய நலிவைத் தீர்ப்பதற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைத் தலைவரை நீங்கள் அப்படி எல்லாம் கட்டுப்படுத்த முடியாது. நீங்கள் 15 நிமிடங்களுக்குள் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டிற்கு அந்தப் பக்கம் நானும் வரமாட்டேன்; நீங்களும் வரக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். சிவசங்கர், நீங்கள் 15 நிமிடங்களுக்குள் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லுக்கு டன் ஒன்றிற்கு ரூ.2,000 வழங்கவேண்டும் என்று தொடர்ந்து விவசாயிகள் கோரிக்கை வைக்கின்றார்கள். விவசாயிகளுடைய குரலைத்தான் நான் ஒலிக்கின்றேன். என்னுடைய குரலாக அதை எடுத்துக்கொண்டு, நீங்கள் ஒன்றும் கஷ்டப்படவேண்டாம்.



2015 பிப்ரவரி 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லுக்கு ஆதார விலையை நிர்ணயிப்பது மத்திய அரசாங்கம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலில் அதைத் தெரிந்துகொள்ளவேண்டும். மத்திய அரசாங்கத்தில் ஒன்பது ஆண்டுகள் அங்கம் வகித்த திராவிட முன்னேற்றக் கழகம் அதற்காக ஒரு துரும்பைக்கூட கிள்ளிப்போடவில்லை. அன்றைக்கு நீங்கள் ஆயிரம் ரூபாயும் கேட்கவில்லை; இரண்டாயிரம் ரூபாயும் கேட்கவில்லை; மூன்றாயிரம் ரூபாயும் கேட்கவில்லை. அன்றைக்கு நீங்கள் எதையுமே செய்யவில்லை. மத்திய அரசாங்கத்தில் கூட்டணியில் இருந்தபோது நெல்லினுடைய ஆதார விலையை உயர்த்துவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல், இன்றைக்கு இங்குவந்து நின்றுகொண்டு நெல்லினுடைய விலையை உயர்த்துங்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கின்றீர்கள். இது என்ன நியாயமென்று தெரியவில்லை. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, சாதாரண நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு ஐம்பது ரூபாயும், சன்ன ரக நெல்லுக்கு எழுபது ரூபாயும் வருடாவருடம் கொடுத்துக்கொண்டிருக்கின்ற தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே விவசாயிகளினுடைய நலனில் என்றைக்கும் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெறுகின்ற அரசு கவனமாகவும், அவர்களுக்கு உதவியாகவும் இருக்கின்றது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு எஸ்.எஸ். சிவசங்கர், நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதியிலே கிராமங்களுக்கு நாங்கள் செல்கின்றபோது, தொடர்ந்து வருகின்ற ஒரு முக்கியமான கோரிக்கையை உங்களது கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். எந்த கிராமத்திற்குச் சென்றாலும், அங்கே முதியவர்கள் அதிகமாக வந்து கடிதங்களைக் கொடுக்கின்றார்கள். கடந்த ஆட்சிக் காலத்திலே வழங்கப்பட்ட முதியோர் உதவித் தொகை இப்போது கிட்டத்தட்ட நாற்பதிலிருந்து ஐம்பது சதவிகித

[திரு. எஸ்.எஸ். சிவசங்கர்] [2015 பிப்ரவரி 19

அளவிற்கு நிறுத்தப்பட்டிருக்கின்றது. அதற்கு நிதிநிலை சரியில்லை என்று அதிகாரிகள் கூறுவதாகத் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்கு தொடர்ந்து விளக்கம் அளித்து வருகின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளிக்கின்ற நீண்ட, நீண்ட விளக்கங்களை நாங்கள் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கின்றோம். அதிலே முறைப்படிதான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, சட்டப்படிதான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி வந்தாலும், சில இடங்களில் அதிகாரிகளுக்கு விதிக்கப்பட்ட வரம்பிற்காக, உரியவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது. எனவே உரியவர்கள் உதவித் தொகை பெற வேண்டும். அதிலும் முதியவர்கள், ஊனமுற்றவர்களெல்லாம் மிகவும் அவதிப்படுகின்ற நிலையைக் காணுகின்றபோது, நிச்சயமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிராமங்களுக்குச் சென்று பார்த்தால் அவர் மனமும் கசியும், அதற்காக மனம் இரங்குவார் என்று நான் எண்ணுகிறேன்.

பிற்பகல் 12–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித அரசிலே யாருடைய மனமும் கசியத் தேவையில்லை. 'ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றி' வளர்கிற வரலாற்றுத் திட்டங்களைத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கரும்பு கசக்கிறது என்று சொன்னால், அது கரும்பின் குற்றமல்ல. அது வாயின் குற்றம். ஆகவேதான் இங்கு திட்டங்களின் விளக்கத்தைத் தெரிந்துகொண்டும், நாங்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம்–கடந்த ஆட்சியிலே முதியோர் உதவித் தொகைக்காக ஒட்டுமொத்தமாக 1,200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, ஒரு நபருக்கு 500 ரூபாய்வீதம், ஒட்டுமொத்தமாக 21 இலட்சம் பேர்களுக்கு அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். இந்த நான்கு ஆண்டுகளிலே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னாலே, 2011–2012 ஆம்



2015 பிப்ரவரி 19] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

ஆண்டிலே, 21 இலட்சம் என்றிருந்த பயனாளிகளின் எண்ணிக்கை 26 இலட்சமாகவும், அதைத் தொடர்ந்து 32 இலட்சமாகவும், 36 இலட்சமாகவும் அதிகரித்திருக்கிறது. முதியோர் உதவித் தொகையை 500 ரூபாயாக அவர்கள் கொடுத்தபோது இல்லாத வரவேற்பு, இன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்குகின்றபோது, (மேசையைத் தட்டும் ஒலி) அனைவரும் இதிலே பயனாளிகளாகச் சேர வேண்டுமென்று விருப்பம் தெரிவிக்கின்றார்கள்.

இதிலே மத்திய அரசு என்ன செய்கிறது? 200 ரூபாய், 300 ரூபாய், 500 ரூபாய் என்று கொடுக்கின்றது. அதற்கு உச்ச வரம்பு வைத்திருக்கின்றார்கள். அந்த உச்ச வரம்பிற்குள்ளேதான் அவர்கள் வழங்கமுடியும். அவர்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்குத்தான் தேசிய முதியோர் உதவித் தொகை வழங்கமுடியும் என்கின்ற வரையறையை வைத்திருக்கின்றார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் அந்த வரையறையையும் தாண்டி, தகுதியுள்ள அனைவருக்குமே உதவித் தொகையை வழங்க வேண்டுமென்று அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எவ்வளவு கொடுக்கின்றார்கள்? நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். 4,200 கோடி ரூபாயை முதியோர் உதவித் தொகைக்காக வழங்குகின்ற ஒரே அரசாக இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவு வித்தியாசம்? அவர்கள் ஆட்சிக் காலத்திலே 1,200 கோடி ரூபாய். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறுகின்ற இந்தப் புனித அரசிலே 4,200 கோடி ரூபாய் என்று சொன்னால், 3,000 கோடி ரூபாயைக் கூடுதலாக தாய் உள்ளத்தோடு வழங்கியிருக்கின்ற தலைவி புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆக அனைவருக்குமே வழங்க வேண்டுமென்று இன்றைக்கு ஆய்வை முழுமையாக எடுத்திருக்கிறோம். இன்னும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு ஆன் லைனிலே அனைத்தையும் பதிவு செய்கின்றோம். இன்னும் ஒரு படி மேலாக, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தொலைநோக்கு சிந்தனையாக அனைவருக்குமே வங்கிகள் மூலமாக முதியோர் உதவித் தொகையை அவர்களுடைய

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2015 பிப்ரவரி 19

இல்லங்களுக்கே சென்று சேர்க்க வேண்டுமென்ற அந்தத் திட்டத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு 40 சதவிகிதப் பணிகளை அதிலே கடந்திருக்கிறோம். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே செய்த குளறுபடியின் காரணமாக, விலாசம் இல்லாதவர்கள், வயதிலே உரிய தகுதியை அடையாதவர்கள், உரிய மருத்துவச் சான்றுகள் இல்லாதவர்கள், இதுபோன்ற பல்வேறு நிலைகளிலே, அந்த வரையறையை அந்தத் தகுதியை முழுமையாக நிறைவு செய்யாதவர்கள் குறித்துதான் ஆய்வுசெய்து வருகிறோம். ஆய்விலே இருக்கின்றபோது, அவர்களுக்கு வழங்க இயலாது என்ற அடிப்படையிலேதான் நாம் சொல்லியிருக்கிறோமேயொழிய வேறொன்றுமில்லை. 4,200 கோடி ரூபாயையும் தாண்டி, இன்னும் தகுதி உள்ள நபர்கள் எத்தனை பேர்கள் இருந்தாலும், அவர்களுக்கும் வழங்குவதற்கு ஆய்வு தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இதிலே இன்னும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால், இந்தத் திட்டத்திலே உதவித் தொகை பெற ஒருவர் தகுதி நீக்கம் செய்யப்படுகிறார் என்று சொன்னால், வட்டாட்சியர் மட்டுமின்றி, கோட்டாட்சியர் அவர்களும் உரிய விசாரணை செய்து, அவர்களுக்குத் தகுந்த விளக்கம் சொல்லி, அதாவது உங்களுக்கு உரிய வயது எட்டப்படவில்லை, நீங்கள் சொத்து வைத்திருக்கிறீர்கள் என்று உரிய விளக்கத்தோடுதான் அவர்கள் தகுதி நீக்கம் செய்யப்படுகிறார்களேயொழிய, தகுதி உள்ள யாரும் நீக்கப்படுவதில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருவள்ளுவரைப்போல தாடியெல்லாம் வளர்த்திருக்கிறார். எனவே, திருவள்ளுவரின் குறளைப்போல சுருக்கமான பதிலைச் சொன்னால், நான் மகிழ்ச்சியடைவேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.



2015 பிப்ரவரி 19]

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்வதைப் புரிந்துகொள்பவர்களுக்கு நாம் சுருக்கமாகச் சொல்லலாம். தூங்குவதைப்போல நடிப்பவர்களுக்கு நாம் பல முறை சொல்லித்தான் புரிய வைக்க வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து அவர்கள் இதுபோல பதிலைச் சொல்லிச் சொல்லி எனக்கு அது மனதிலே பதிந்துவிட்டது. அதேபோல, நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், தொடர்ந்து மின்சாரம் குறித்து பதில்கள் இங்கிருக்கின்ற எல்லோருக்கும் மனப்பாடம் ஆகிவிட்டது. இருந்தாலும் மின் கட்டண உயர்வைப் பற்றிய பொது மக்களுடைய கருத்தை இங்கு சொல்லாமல் இருக்க முடியாது. அவர் வீட்டிலேயும் மின் கட்டணம் ஏறியிருக்கிறது; எங்கள் வீட்டிலேயும் மின் கட்டணம் ஏறியிருக்கிறது; அதேபோல, ஏழையெளியவர்கள் வீட்டிலேயும் மின் கட்டணம் ஏறியிருக்கிறது. பாதிக்கப்படுகின்ற மக்களுடைய நலனை ஓர் அரசாங்கம் கவனிக்கவேண்டும்.

*பிற்பகல் 12–15*

அதேபோல பால் விலை இன்றைக்குக் கடுமையாக உயர்ந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிருந்தபோது ஒரு லிட்டர் பால் விலை ரூ.17/– ஆக இருந்தது. இன்றைக்கு, ஒரு லிட்டர் பால் விலை ரூ.34/– ஆக இரண்டு மடங்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. ஓர் அரசாங்கம், மக்கள் நலனிலே கவலைகொள்கின்ற அரசாங்கம், ஒரேயடியாக இரண்டு மடங்காக பால் விலையை உயர்த்தியிருப்பது மிகவும் வருத்தத்தைத் தரக்கூடியதாக இருக்கிறது. பால் போன்று இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சற்று பொறுத்துக்கொள்ளவேண்டும். நான் பேசி முடித்துவிடுகிறேன். அதற்குப் பிறகு பதில் சொல்லலாம். (குறுக்கீடு) அதேபோல, போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய பிரச்சினை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பால் விலை உயர்வுக்குப் பின்னரும்,

[திரு. பி.வி. ரமணா] [2015 பிப்ரவரி 19

தனியார் பால் விலையைவிட ஆவின் பால் மிகக் குறைந்த விலையில் விற்கப்படுகிறது என்ற தகவலை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆரோக்யா பால் ரூ.42/—க்கும், ஹெரிட்டேஜ் பால் ரூ.42/—க்கும், திருமலா பால் ரூ.44/—க்கும், டோட்லா பால் ரூ.42/—க்கும், ஜெர்சி பால் ரூ.40/—க்கும் விற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆவின் பால் மிகக் குறைந்த விலையில், ஏழையெளிய மக்கள் பயன்பெறுகின்ற வகையிலே, ரூ.34/—க்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் இன்றைக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குன்னம் தொகுதியில் சன்னாசிநல்லூர் என்ற கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமம் வெள்ளாற்றங்கரையில் அமைந்திருக்கிறது. அந்தக் கிராமத்து மக்கள் தொடர்ந்து இரண்டு மாத காலமாகப் போராடி வருகிறார்கள். அவர்கள் பயன்படுத்துகிற சுடுகாடானது, அந்த ஆற்றின் நடுவிலே இருக்கிறது. அந்த ஆற்றிலே மணல் அள்ளுகின்ற மணல் குவாரியின் உரிமையாளர்கள், அந்தச் சுடுகாட்டில் உள்ள மணலையும் சேர்த்து அள்ளிவிட்டதால், அந்தக் கிராமத்து மக்கள் பாதிக்கப்பட்ட காரணத்தால், அந்த மணல் குவாரியைத் தடுக்கவேண்டுமென்று தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார்கள். ஆனால் அரசின் கவனம் அந்தப் பக்கம் செல்லவில்லை. சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் என்னை அந்தப் போராட்டத்திலே கலந்துகொள்வதற்காக அழைத்தார்கள். அவர்களோடு இணைந்து நானும் அந்தப் போராட்டத்திற்குச் சென்றேன். மணலை அள்ளுகின்ற அந்தப் பகுதிக்கு சென்று பார்த்தபோது, சுடுகாடு அகற்றப்பட்டு, அங்கே மண்டை ஓடுகளும், எலும்புக்கூடுகளும் கிடப்பதை நாங்களும் பார்த்தோம்; பத்திரிகையாளர்களும் பார்த்தார்கள்; அரசு அதிகாரிகளும் பார்த்தார்கள். அப்படிப்பட்ட இடத்திலே தொடர்ந்து மணலை அள்ளவேண்டாம் என்று நாங்கள் முற்றுகைப் போராட்டம் நடத்தினோம். அமைதியான வழியிலே முற்றுகைப் போராட்டம் நடந்தபோது, அந்த மக்களைக் காவலர்கள் தாக்கினார்கள்; என் கண் முன்னாலேயே தாக்கினார்கள். குறுக்கே நாங்கள் சென்று நிற்பதற்கு முன்பாகவே கிட்டத்தட்ட 40, 50 பேர் தாக்கப்பட்டார்கள். 2 பேருக்கு கை உடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். 4, 5 பெண்கள் இடுப்பிலே தாக்கப்பட்டு, இன்னும் ஒருவர் மருத்துவமனையில் இருக்கிறார். ஆனால் இடுப்பிலே தாக்கப்பட்ட பெண்மணிகள்மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது; கை உடைந்தவர்கள்மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது; என்மீதும் வழக்கு போடப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 35 பேர் பெயர் சொல்லிய குற்றவாளிகள் என்றும், 200 பெண்கள், 300 ஆண்கள் என்று மொத்தம் 500 பேர்மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது.



2015 பிப்ரவரி 19] [திரு. எஸ்.எஸ். சிவசங்கர்]

அதே சன்னாசிநல்லூரில் 2009 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிருந்தபோது, ஒரு போராட்டம் நடந்தது. அங்கேயிருக்கின்ற நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தவேண்டும் என்று அந்த ஊர் சார்பாக பணம் கட்டியிருந்தார்கள். அதே ஊராட்சியைச் சேர்ந்த அங்கனூர் என்ற கிராமத்திலும், ஊர் சார்பாக பணம் கட்டியிருந்தார்கள். ஒரே நேரத்தில் ஒரே ஊராட்சியில் 2 பள்ளிகளை தரம் உயர்த்த முடியாது என்ற காரணத்தாலே, முதலிலே அங்கனூர் பள்ளி தரம் உயர்த்தப்பட்டது. ஆனால் சன்னாசிநல்லூருக்கு வழங்கவில்லை என்று கருப்புக் கொடி கட்டி கடுமையான போராட்டம் நடத்தினார்கள். போராட்டம் நடத்திய நேரத்தில் நானே நேரடியாகச் சென்று அவர்களைச் சமாதானம் செய்து, அந்த ஊர்க்காரர்களை அழைத்து வந்து, கல்வித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு அண்ணன் தங்கம் தென்னரசு அவர்களிடத்திலே நேரடியாக மனுவைக் கொடுத்தோம். அதுபோல, தலைவர் கலைஞர் அவர்கள் பத்திரிகை வாயிலாக அந்தச் செய்தியைப் படித்து, அவர், மாண்புமிகு அமைச்சர் அவர்களை அழைத்து அறிவுறுத்தியதன்பேரில், அடுத்த ஆண்டு அந்த ஊர் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரப்பட்டது. எனவே போராடினால் கிடைக்கும் என்ற அந்த நம்பிக்கையோடு, இங்கே ஓர் அமைச்சர் சொன்னதுபோல "அந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி" போல் போராடினால், ஏதாவது பலன் கிடைக்கும் என்ற எண்ணத்தோடு அந்த மக்கள் போராடினார்கள். ஆனால் கிடைத்த பரிசு வழக்குதான். எனவே, அதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

[திரு. எஸ்.எஸ். சிவசங்கர்] [2015 பிப்ரவரி 19

அதுபோல, இன்றைக்கு தமிழகத்தைப் பெரிதும் உலுக்கி வருகின்ற பிரச்சினை, சுற்றுச்சூழல் பிரச்சினை. உலகளவில் சுற்றுச்சூழல் இன்றைக்குப் பாதிக்கப்படுவதால், எவ்வளவு பாதிப்புகள் வருகின்றன என்பதைக் கண்கூடாகக் கண்டு வருகிறோம். கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களில் சுற்றுச்சூழல் மிகவும் பாதிக்கப்பட்டு வருகிறது. பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதி வருகிறார்கள். சமஸ் என்ற ஒரு பத்திரிகையாளர் தொடர்ந்து அதுகுறித்து எழுதி வருகிறார். காரணம், அங்கே இருக்கின்ற கடற்கரை மணல் கணக்கில்லாமல் அள்ளப்படுகிறது. அவ்வாறு கணக்கில்லாமல் மணல் அள்ளப்படுவதால் அந்தப் பகுதியினுடைய நீர்வளம் பாதிக்கப்படுகிறது; கடல் வளம் பாதிக்கப்படுகிறது. அந்த மணலை அள்ளி, அவர்கள் தொழிற்சாலையிலே தயார் செய்து வெளிநாடுகளுக்கு அனுப்புகின்ற முயற்சியில் இறங்குகின்றபோது, அங்கேயிருக்கின்ற மக்களுக்கு நோய் வருகிறது என்ற செய்திகள் தொடர்ந்து வருகின்றன. இதிலே இயற்கை வளம் பாதிக்கப்படுவதோடு, கிட்டத்தட்ட பல இலட்சம் கோடி ரூபாய் அளவிற்குத் தனியாருக்கு இலாபம் கிடைப்பது ஒரு புறம் நடைபெறுகிறது. அதில் இலட்சம் கோடி ரூபாய் ஊழல் நடந்திருக்கிறது என்று பத்திரிகையில் இன்று செய்திகள் வந்திருக்கின்றன என்றால், அதைத் தாண்டி சுற்றுச்சூழலும், மக்களும் பாதிக்கப்பட்டிருப்பது என்பதும் மிகப் பெரிய அளவிலே இருக்கிறது. Economic Times ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–20

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ பத்திரிகைச் செய்தியை வைத்துக்கொண்டு, பத்திரிகையில் வந்தது என்று சொல்கிறார்கள். கொஞ்சம் உங்களுடைய பக்கமும் திரும்பிப் பார்க்கவேண்டும். 2006–லிருந்து 2011 வரை 17 அனுமதிகளை நீங்களும் வழங்கியிருக்கின்றீர்கள். அப்பொழுதும் அந்தத் தாது மணல் அள்ளப்பட்டது. ஆனால், இப்போது என்ன நடந்திருக்கிறது என்று சொன்னால், தாது மணலில் இருக்கின்ற மோனோசைட்டை எடுக்க வேண்டுமென்று சொன்னால், மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற Atomic Minerals Division அனுமதி தரவேண்டும். அன்றையதினம், மத்திய அரசோடு கூட்டணியில் நீங்கள்தான் இருந்தீர்கள். நாங்கள் எதற்காக அதற்கு அனுமதி கொடுத்தோம் என்று சொன்னால், தாது மணலோடு சேர்ந்து மோனோசைட் எடுக்கின்றபோது தவறாக அது சென்றுவிடக்கூடாது என்பதற்காக மத்திய அரசுக்குத் தெரிவித்து, அதை மத்திய அரசின் அனுமதியோடு ஏற்றுமதி செய்யலாம் என்று நாங்கள் அனுமதி வழங்கியிருக்கின்றோம். ஆனால், அதிலே 1 இலட்சம் கோடி ஊழல் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். எதை வைத்துச் சொல்லிக்கொண்டிருக்கின்றீர்கள்? தயவுசெய்து இதற்குண்டான தகவலை நீங்கள் இப்போதே, இந்தச் சட்டமன்றத்தில் தெரிவிக்கவேண்டும்.



2015 பிப்ரவரி 19] [திரு. பி. தங்கமணி]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின், என்ன?

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவசங்கர் பேசுகையில் குறுக்கிட்டு சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைக் கேட்டிருக்கிறார்கள். நான் அவரிடத்திலும் அவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புவது, இதே அவையில் முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள், 17–9–2013 அன்று குழுவின் அறிக்கை தன்னிடம் சமர்ப்பிக்கப்பட்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே செய்தி, மக்கள் தொடர்புத் துறை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய கட்சி உறுப்பினர்தான் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) இல்லை, உங்களுடைய கட்சி உறுப்பினர்தான் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) அதற்குத்தான் அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்) அதைப் பற்றியே நீங்கள் மேற்கொண்டு பேசிக்கொண்டிருந்தால், முடிவில்லாமல் போய்க்கொண்டிருக்கும். (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) அதற்குத்தான் அமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார். திரும்பவும் அதையே ஏன் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) திரு. ஸ்டாலின், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தாது மணல் முறைகேடு குறித்து ஏற்கெனவே இருந்த முதலமைச்சர் அவர்கள் ஒரு குழு அமைத்தார்கள். அந்தக்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2015 பிப்ரவரி 19

*குழுவினுடைய அறிக்கையை, கடந்த 17–9–2013 அன்று தலைமைச் செயலகத்தில் தன்னிடமே சமர்ப்பித்திருக்கிறார்கள் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் விரிவாக உரையாற்றாதீர்கள். விளக்கம் வேண்டுமென்றால் கேளுங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு)*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *எனவே, அந்த அறிக்கை ஏன் இதுவரை வெளியிடப்படவில்லை? இதுவரை சட்டமன்றத்திலும் வைக்கப்படவில்லை. அதை வைக்கவேண்டும். அதை வைத்தால் இதற்கு விளக்கம் தெளிவாகக் கிடைக்கும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *ஆதாரமில்லாமல் ஊழல் குற்றச்சாட்டு சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் சொல்லவில்லை. திரு. சிவசங்கர் அவர்கள்தான் சொன்னார். (குறுக்கீடு) நீங்கள் சொல்லவில்லை. திரு. சிவசங்கர் பேசுகின்றபோது பத்திரிகைச் செய்தியில் வந்திருக்கிறது என்று சொன்னார்கள். பத்திரிகைச் செய்தியை ஆதாரமாக எடுத்துக்கொள்ள முடியாது. அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

*(திரு. மு.க. ஸ்டாலின் பத்திரிகையை உயர்த்திக் காண்பித்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, நீங்கள் என்னிடம் முன்பே ஆதாரத்தோடு பேச இருக்கிறேன் என்று சொல்லியிருக்கவேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் பத்திரிகைச் செய்தியையெல்லாம் காண்பிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் பத்திரிகைச் செய்தியையெல்லாம் காண்பிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் அவையில் பேசுவதற்கு முன்பாகவே ஆதாரத்தை என்னிடம் காண்பித்துவிட்டு பேசியிருக்கவேண்டும். (குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *பத்திரிகைச் செய்தியையெல்லாம் ஆதாரமாக எடுத்துக்கொள்ள முடியாது.*



2015 பிப்ரவரி 19] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

*(குறுக்கீடு) அவை நடவடிக்கைகளில் பத்திரிகைச் செய்தியை ஆதாரமாக எடுத்துக்கொள்ள முடியாது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசங்கர் அவர்கள் பேசுகின்றபோது, சன்னாசிநல்லூர் பகுதியில் அவருடைய சட்டமன்றத் தொகுதியை உள்ளடக்கிய அந்தப் பகுதியில், மணல் குவாரியில் ஏற்பட்ட அந்தப் பிரச்சினையைப்பற்றி இங்கே சொன்னார்கள். அதற்கு சில விளக்கங்களைக் கூறுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

*பிற்பகல் 12–25*

*கடலூர் மாவட்டம், நெய்வாசல் கிராமத்தில் வெள்ளாறு ஆற்றின் வடபகுதி கரையில் அரசு உரிமம் பெற்ற மணல் குவாரி ஒன்று, கடந்த 21–12–2014 முதல் செயல்பட்டு வருகிறது. மேற்படி ஆற்றின் தென்கரைப் பகுதியில் அமைந்துள்ள அரியலூர் மாவட்டம், சன்னாசிநல்லூர் கிராம மக்கள் மணல் குவாரியினால் தங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாகக் கூறி, மணல் குவாரி செயல்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, மணல் குவாரியிலிருந்த நான்கு ஜே.சி.பி. வாகனங்களைத் தங்களுடைய கிராமத்திற்கு எடுத்துச் சென்றுள்ளனர். இதனையடுத்து, கடந்த 27–1–2015 அன்று வருவாய் மற்றும் காவல் துறை அதிகாரிகள் சன்னாசிநல்லூருக்குச் சென்று கிராம மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி, மணல் குவாரி அமைந்துள்ள இடம் குறித்து மீண்டும் அளவீடு செய்வதாக உறுதியளித்து, ஜே.சி.பி. வாகனங்களை மீட்டுக்கொண்டு வந்துள்ளனர்.*

*அதன்படி 30–1–2015 அன்று திட்டக்குடி மற்றும் அரியலூர் தாலுகா வட்டாட்சியர்கள் மணல் குவாரி அமைந்துள்ள இடத்திற்குச் சென்று அளவீடு செய்து, அக்குவாரி கடலூர் மாவட்டம் நெய்வாசல் கிராம எல்லையிலேயே அமைந்துள்ளதாக உறுதி செய்து அதற்கான எல்லைக் கற்களைப் பதித்துள்ளனர். இருப்பினும், இதனால் திருப்தியடையாத சன்னாசிநல்லூர் கிராம மக்கள் 4–2–2015 அன்று குன்னம் சட்டமன்ற தி.மு.க. உறுப்பினர் சிவசங்கர் தலைமையில் மேற்படி மணல் குவாரியை*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 பிப்ரவரி 19

முற்றுகையிடப்போவதாக துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து 4—2—2015 அன்று காவல் மற்றும் வருவாய்த் துறையினர் மேற்படி மணல் குவாரி அமைந்துள்ள நெய்வாசல் கிராமத்தில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். அன்றையதினம் காலை சுமார் 10—30 மணியளவில் சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவசங்கர் தலைமையில் 200 பெண்கள் உட்பட 500 பேர் வெள்ளாறு ஆற்றின் தென்கரைப் பகுதியில் சட்டவிரோதமாகக் கூடி, மணல் குவாரி அமைந்துள்ள கிராமத்திற்குள் நுழைய முற்பட்டுள்ளனர். அப்போது அங்கு பாதுகாப்புப் பணியிலிருந்த கடலூர் மற்றும் அரியலூர் மாவட்ட காவல் துறையினர் அவர்களைத் தடுத்து நிறுத்த முற்பட்டபோது, அக்கும்பல் காவல் துறையினர்மீது கல் வீசித் தாக்குதல் நடத்தியதோடு, மணல் குவாரிக்குள் நுழைந்து ஜே.சி.பி. உள்ளிட்ட வாகனங்களைச் சேதப்படுத்தி கலவரத்தில் ஈடுபட்டுள்ளனர். காவல் துறையினர் அவர்களைக் கலைந்து செல்லுமாறு பல முறை எச்சரித்ததைக் கேட்காமல், அக்கும்பல் தொடர்ந்து கல்வீச்சில் ஈடுபட்டு, பொதுச் சொத்துகளுக்குச் சேதம் விளைவித்ததால், வேறு வழியின்றி காவல் துறையினர் அக்கும்பலைக் கலைந்து போகச் செய்துள்ளனர். இச்சம்பவத்தில் காயமடைந்த 9 பேர் காவல் ஆளிநர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். மேலும், கிராம மக்கள் 8 பேர் உள்நோயாளிகளாகவும், 13 பேர் வெளிநோயாளிகளாகவும் அரியலூர் மற்றும் செந்துறை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர். இச்சம்பவம் தொடர்பாக ஆவினன்குடி கிராம நிருவாக அலுவலர் அளித்த புகாரின் அடிப்படையில், ஆவினன்குடி காவல் நிலையத்தில் சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவசங்கர் மற்றும் சன்னாசிநல்லூர் கிராமத்தினர்மீது வழக்கு குற்ற எண் 10/2015 பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது அப்பகுதியில் காவல் துறையினர் தொடர்ந்து பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருவதால் மணல் குவாரி எவ்வித இடையூறுமின்றி செயல்பட்டு வருகிறது. வழக்கு புலன்விசாரணையில் இருந்து வருகிறது என்ற உண்மைத் தகவலை இங்கே கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 சனவரி 12 ஆம் தேதி இதே அவையில்



2015 பிப்ரவரி 19] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

மாண்புமிகு தி.மு.க. சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இங்கே பேசியதைக் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அ.தி.மு.க. உறுப்பினர் ஒரு தவறான தகவலை இந்த அவையிலே பதிவு செய்கிறார்கள். எந்தவித ஆதாரமாவது இருந்தால், அதை இங்கே எடுத்துச் சொல்லவேண்டும். இல்லாததை, ஏதோ பொத்தாம் பொதுவாக, எதுவும் பேசிவிடக்கூடாது. ஆகவே, ஏதாவது ஆதாரமிருந்தால் தயவுசெய்து அதை இந்த அவையிலே சொல்லவேண்டும். இல்லையென்று சொன்னால் அதை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் ஆதாரம் இருக்கிறதா?

**திரு. ஞா. செந்தமிழன்:** ஆதாரம் இருக்கிறது. பத்திரிகையிலே வந்த செய்திகள். அவற்றைத் தர விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** பத்திரிகையிலே வரக்கூடிய செய்திகளையெல்லாம் வைத்துப் பேசுவது முறையல்ல. தயவுசெய்து, ஆதாரமிருந்தால் பேசலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பத்திரிகைச் செய்தியை ஒரு ஆதாரமாக வைத்துப் பேசக்கூடாது. அதை மேற்கோள் காட்டுவதற்கு முன்பாகக்கூட என்னுடைய அனுமதியைப் பெற்றிருக்கவேண்டும். ஆகவே, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும் என்று ஆணையிடுகிறேன். இல்லையானால், அது சார்ஜ் ஆகிவிடும் இல்லையா?"

இவ்வாறு கூறியிருப்பது யார்? சென்ற ஆட்சியிலே நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். இப்பொழுது பத்திரிகைச் செய்தியை ஆதாரமாக வைத்து நீங்களே பேசுகிறீர்கள். அதனால்தான் அவர் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கச் சொல்கிறோம். அது அவைக் குறிப்பிலிருந்து இன்றுவரை நீக்காமல் இருக்கிறது. நீக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். (குறுக்கீடுகள்) சட்டமன்ற மரபு, விதிகள் என்பது எல்லா ஆட்சிக் காலத்திலும் ஒன்றுதான். என்ன

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2015 பிப்ரவரி 19

சட்டமன்ற மரபு, விதிமுறைகள் என்பது கடந்த ஆட்சியில் கடைப்பிடிக்கப்பட்டதோ, அதே விதிமுறைகள்தான் இப்பொழுதும் பின்பற்றப்படுகிறது. எப்பொழுதும் அந்த விதிமுறைகள் மாறாது. ஆகவே, அன்றைக்கு ஒரு அணுகுமுறையும், இன்றைக்கு ஒரு அணுகுமுறையும் நீங்கள் பின்பற்றுவது என்பது சரியான அணுகுமுறையல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. மு.க. ஸ்டாலின், சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் சொன்னதை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன். அதிலே நான் மாறுபட்ட கருத்தைச் சொல்ல விரும்பவில்லை. ஆனால், நான் கேட்க விரும்புவது, முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த தாது மணல் முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்துவதற்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமித்து, அந்த அறிக்கை 17–9–2013 அன்று அவரிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதுவரையில் அவையில் வைக்கப்படவில்லை.

பிற்பகல் 12–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசட்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாது மணல் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கூறுகின்றபோது, சில தவறான கருத்துகள் பதிந்துவிடக்கூடாது என்பதற்காக, சில உண்மையான தகவல்களை நான் இந்தச் சட்டமன்றத்திலே கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மாவட்டங்களில் கார்னெட், சிலிமனைட், இல்மனைட், ரூட்டைல், சிர்கான், லியோகாக்சின் மற்றும் மோனோசைட் போன்ற தாது மணல் கனிமங்களை அகழ்வு



2015 பிப்ரவரி 19] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

செய்ய அனுமதியளிக்கப்பட்ட தாது மணல் கனிமக் குத்தகை குவாரிகள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய குறிப்பாகும்.

கடற்கரை கனிம மணல் மற்றும் ஆற்றுப் படுகைகளில் கிடைக்கக்கூடிய தாது மணல் கனிமங்களான கார்னெட், சிலிமனைட், இல்மனைட், ரூட்டைல், சிர்கான், லியோகாக்சின் மற்றும் மோனோசைட் போன்ற கனிமங்களுக்கு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (அபிவிருத்தி மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1957 மற்றும் கனிமச் சலுகைகள் விதிகள், 1960 ஆகியவற்றின்கீழ் சுரங்கக் குத்தகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இச்சட்டத்தின் அட்டவணை 1–ன் பகுதி ‘பி’–ன்கீழ் வரும் அணுசக்தி கனிமங்களான இல்மனைட், ரூட்டைல், சிர்கான், லியோகாக்சின் மற்றும் மோனோசைட் போன்ற கனிமங்களுடன், கார்னெட் மற்றும் சிலிமனைட் ஆகிய கனிமங்களும் கலந்திருந்தால், மேற்படி சட்டத்தின் பிரிவு 5 (1)–ன்கீழ் மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்ற பின்னரே மாநில அரசால் கனிமக் குத்தகை உரிமம் வழங்க இயலும். கார்னெட் மற்றும் அவற்றுடன் கலந்துள்ள கனிமங்களை எடுக்க திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 11 உரிமங்களும், மதுரை மாவட்டத்தில் 2 உரிமங்களும் தூத்துக்குடி மாவட்டத்தில் 6 உரிமங்களும், திருநெல்வேலி மாவட்டத்தில் 53 உரிமங்களும் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் 9 உரிமங்களும், ஆக மொத்தம் 81 கனிமக் குத்தகை உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் தாது மணல் கனிமங்கள் அடங்கிய கனிமக் குத்தகைப் பகுதி 5 ஹெக்டேர் முதல் 50 ஹெக்டேர் வரை இருந்தால், மாநில சுற்றுச்சூழல் அமைப்பிடமிருந்து தடையின்மைச் சான்றிதழ் பெறப்படவேண்டும். குத்தகைப் பகுதி 50 ஹெக்டேருக்கும் மிகைப்பட்டிருந்தால், மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்திடமிருந்து தடையின்மைச் சான்றிதழ் பெறப்படவேண்டும்.

கடலோரப் பகுதிகளில் கடற்கரை உயர் அலை மட்டத்திலிருந்து 500 மீட்டர் அளவுவரை கடற்கரை முறைப்படுத்தப்பட்ட பகுதி (Coastal Regulatory Zone) என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதியில் கனிமச் சுரங்கங்களுக்கு, 1991 ஆம் ஆண்டு கடற்கரை முறைப்படுத்துதல் மண்டல அறிக்கையின்படி, மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையிடமிருந்து தடையின்மைச் சான்றிதழ் பெறப்படவேண்டும்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 பிப்ரவரி 19

குத்தகைக்கு விண்ணப்பிக்கப்பட்ட பரப்பு 5 ஹெக்டேருக்கும்கீழ் இருக்குமாயினும், வரையறுக்கப்பட்ட கடற்கரை முறைப்படுத்துதல் சட்டம், 1991 அறிவிக்கையின்படி, மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்தின் தடையில்லாச் சான்று பெறப்பட வேண்டும்.

கார்னெட் மற்றும் சிலிமனைட் ஆகிய கனிமங்களுக்கு சுரங்கத் திட்டம் (Mining Plan) ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மத்திய அரசின் இந்திய சுரங்கக் கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. ஏனைய கனிமங்களான ரூட்டைல், இல்மனைட், சிர்கான் மற்றும் மோனோசைட் போன்ற கனிமங்களுக்கு மத்திய அரசின் அணுசக்திக் கழகத்திற்கு (Atomic Minerals Division) சுரங்கத் திட்ட ஒப்புதல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட சுரங்கத் திட்டத்தின்படி, கனிம அகழ்வு மேற்கொள்ளப்படாவிட்டால், கனிமச் சலுகை மற்றும் மேம்படுத்துதல் விதிகள், 1988–ன் விதி 13 (2)–ன்படி மத்திய அரசைச் சேர்ந்த இந்திய கனிமக் குழுமத்தின் மண்டல கனிமக் கட்டுப்பாட்டுத் தலைமை அலுவலர், மேற்படி கனிமக் குத்தகையைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க வாய்ப்புள்ளது. இத்தவறுகள் சரிசெய்யப்பட்ட பின்னர், அதே விதிகளின்கீழ் கனிமக் குத்தகையைத் தொடர ஆணையிடவும் வாய்ப்புள்ளது.

கனிம உற்பத்தியை வரன்முறைப்படுத்துதல், இயற்கை சுற்றுச்சூழல், வெள்ளம், சுற்றுச்சூழல் சீர்கேட்டைத் தடுத்தல், பொது சுகாதாரத்திற்கு உண்டாகும் ஆபத்தைத் தடுத்தல் போன்ற காரணங்களின் அடிப்படையில், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (அபிவிருத்தி மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1957–ன் பிரிவு 4A (i)–ன்கீழ், விதி மீறல்கள் செய்யப்பட்ட கனிமக் குத்தகையை நிறுத்தி வைக்கவோ அல்லது நிரந்தரமாக இரத்து செய்யவோ மாநில அரசுடன் கலந்து ஆலோசித்த பின்னர், மத்திய அரசின் கனிம அமைச்சகத்திற்கு அதிகாரம் உண்டு.

பிற்பகல் 12–35

சுரங்கம் மற்றும் கனிமங்கள் (அபிவிருத்தி மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1957 பிரிவு 24–ன்படி, மத்திய அரசு அல்லது மாநில அரசுகளின் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்கள் கனிமக் குத்தகைப் பகுதிகளை ஆய்வு செய்யவும், ஆவணங்களை



2015 பிப்ரவரி 19] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

ஆய்வு செய்யவும், அளவீடு மற்றும் சர்வே செய்யவும், இருப்புக் கணக்கை ஆய்வு செய்யவும் அனுமதி அளிக்கிறது. அதே சட்டத்தில் பிரிவு 21 உட்பிரிவு 5–ன்படி, அனுமதியின்றி கனிம சுரங்கம் செய்யும் நபர்களிடமிருந்து மேற்படி கனிமங்களைப் பறிமுதல் செய்யவும் அல்லது மேற்படி கனிமங்கள் அப்புறப்படுத்தப்பட்டிருந்தால், அக்கனிமங்களின் விலை, அபராதம், உரிமத் தொகை மற்றும் பிற வரிகளை வசூல் செய்யவும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு நிர்ணயித்தவாறு, கார்னெட் கனிமத்திற்கு உரிமத் தொகை, இந்திய கனிமக் குழுமம் மாதந்தோறும் வெளியிடும் விற்பனை மதிப்பின் அடிப்படையில் 3 சதவிகிதம் என்ற கணக்கில் வசூலிக்கப்படுகிறது. இல்மனைட், ரூட்டைல் போன்ற கனிமங்களுக்கு நிகர வருமான அடிப்படையில் 2 சதவிகிதம் உரிமத் தொகை நிர்ணயிக்கப்படுகிறது. இந்நேர்வுகளில் மத்திய அரசு மட்டுமே உரிமத் தொகையை நிர்ணயம் செய்யமுடியும்.

இந்திய தேசிய பசுமைத் தீர்ப்பாயம் தன்னுடைய 14–8–2013 நாளிட்ட தீர்ப்பில், முறைகேடாக மணல் அள்ளப்படுவது தொடர்பாக ஆய்வு செய்ய ஒரு வல்லுநர் குழுவை அமைக்கப்போவதாகக் கூறியுள்ளது. சுற்றுச்சூழல் தடையின்மைச் சான்றிதழ் பெற்ற பின்னரே, கடற்கரைக் கனிமங்கள், குறிப்பாக, தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களில் வெட்டியெடுக்கப்பட வேண்டுமென்று தனது ஆணையில் தேசிய பசுமைத் தீர்ப்பாயம் தெரிவித்துள்ளது.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் தன்னுடைய 6–8–2013 நாளிட்ட கடிதத்தில், கார்னெட், இல்மனைட், ரூட்டைல் மற்றும் மோனோசைட் போன்ற கனிமங்களின் தனித்தன்மை மற்றும் விலை மதிப்பு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, முறைகேடாக இக்கனிமங்களை வெட்டி எடுப்பது தொடர்பாக முழுமையான விசாரணை மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்திருந்தார்.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் மேற்படி வேண்டுகோளுக்கிணங்க, புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் தனது பரிந்துரையை 8–8–2013 அன்று அரசுக்கு அனுப்பியிருந்தார். இவற்றைப் பரிசீலித்த அரசானது, வருவாய்த் துறை செயலரின் தலைமையின்கீழ் ஒரு சிறப்புக் குழுவை அமைத்து, தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ள 6 தாது மணல் சுரங்கக் குத்தகைகளையும் ஆய்வு செய்து அறிக்கை அளிக்க

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 பிப்ரவரி 19

வேண்டுமென அரசாணை (நிலை) எண் 156 தொழில் (எம்எம்டி1) துறை, நாள் 8–8–2013–ல் ஆணையிட்டது. மேலும், தூத்துக்குடி மாவட்டத்தின் தாது மணல் சுரங்கக் குத்தகை நடவடிக்கைகளை முழுவதுமாக நிறுத்தி வைக்கவும், மேற்படி சிறப்புக் குழுவானது ஒரு மாதத்திற்குள் அறிக்கையை அரசுக்கு அளிக்கவேண்டும் எனவும் அரசு ஆணையிட்டது. அதன்படி, சிறப்புக் குழுவானது தனது களப் பணியினை மேற்படி மாவட்டத்தில் 17–9–2013 அன்று முடித்துள்ளது.

புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர், தனது 17–9–2013 நாளிட்ட கடிதத்தில், திருநெல்வேலி மாவட்டத்தில் 53 தாது மணல் கனிமக் குத்தகைகளும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 11 தாது மணல் கனிமக் குத்தகைகளும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 9 தாது மணல் கனிமக் குத்தகைகளும் மற்றும் மதுரை மாவட்டத்தில் 2 கனிமக் குத்தகைகளும், ஆக மொத்தம் 75 தாது மணல் கனிமக் குத்தகைகள், கார்னெட், சிலிமனைட், இல்மனைட், ரூட்டைல் மற்றும் பிற கனிமங்களை அகழ்ந்தெடுக்க தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவித்திருந்தார்.

மேலும், புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர், தூத்துக்குடி மாவட்டத்தில் ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட சிறப்புக் குழுவே திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி மற்றும் மதுரை மாவட்டங்களில் தனியாருக்கு வழங்கப்பட்ட கார்னெட், சிலிமனைட், இல்மனைட், ரூட்டைல் போன்ற தாது மணல் கனிமங்களுக்கு வழங்கப்பட்ட குத்தகைப் பகுதிகளை ஆய்வு செய்து, ஒருமித்த அறிக்கையை அளிக்க ஆணையிடலாம் என அரசுக்குப் பரிந்துரை செய்திருந்தார்.

அதன்படி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி மற்றும் மதுரை மாவட்டங்களில் கார்னெட், சிலிமனைட், இல்மனைட், ரூட்டைல் போன்ற தாது மணல் கனிமங்களை அகழ்வு செய்ய தனியாருக்குக் குத்தகை உரிமங்கள் வழங்கப்பட்ட 75 சுரங்கக் குத்தகைப் பகுதிகளில், அரசு நிறுவனமான IRE Ltd., நிறுவனத்திற்கு 3 சுரங்கக் குத்தகைப் பகுதி மற்றும் திருவாளர்கள் டாமின் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ஒரு சுரங்கக் குத்தகைப் பகுதி, ஆக மொத்தம் 4 சுரங்கக் குத்தகைப் பகுதிகள் நீங்கலாக, மீதமுள்ள 71 சுரங்கக் குத்தகைப் பகுதிகளை ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிக்கவும் மற்றும் மேற்படி மாவட்டங்களில் இயங்கிவரும் தாது மணல் குவாரிகளின் செயல்பாட்டினை நிறுத்திவைக்கவும், வருவாய்த் துறைச் செயலர் தலைமையின்கீழ் சிறப்புக் குழு அமைத்து அரசாணை (நிலை) எண் 173, தொழில் (எம்.எம்.டி.1) துறை, நாள் 17–9–2013–ல் அரசு ஆணையிட்டது. இவ்வாறு அமைக்கப்பட்ட சிறப்புக் குழு ஆய்வினை முடித்து, அது தொடர்பான அறிக்கையை அரசுக்கு விரைவாக அளிக்கவேண்டும் எனவும் ஆணையிடப்பட்டது.



2015 பிப்ரவரி 19] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பிற்பகல் 12–40

வருவாய்த் துறைச் செயலரின்கீழ் அமைக்கப்பட்ட சிறப்புக் குழுவானது, தனது புலத் தணிக்கையை திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் முடித்துள்ளது. திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மாவட்டங்களில் நீதிமன்ற ஆணைகளின் காரணமாக, மேற்படி ஆய்வு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கார்னெட் மணல் தொடர்பான உயர் நீதிமன்ற வழக்குகள். திரு. ஆர். அப்பு நடேசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், அரசுக்கு தனது 21–12–2008 ஆம் நாளிட்ட மனுவில், திரு. டி. தயாதேவதாஸ் அவர்களுக்குச் சொந்தமான நிறுவனங்களான திருவாளர்கள் சதர்ன் எண்டர்பிரைசஸ் மற்றும் இந்தியன் கார்னெட் சாண்ட் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் ஆகிய நிறுவனங்களுக்கு திருச்சி மாவட்டத்தில் அரசு புறம்போக்கு நிலங்களில் வழங்கப்பட்ட கனிமக் குத்தகைகளில் சுற்றுச்சூழல் விதிமீறல்கள் உள்ளதாகக் கூறி, அதன்மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டார். மேலும், அவர் தொடர்ந்த ரிட் எண் 175/2010, நாள் 9–2–2010–ன்படி, மேற்கூறிய நிறுவனங்களுக்கு வழங்கிய கனிமக் குத்தகைகளில் அரசு தணிக்கை மேற்கொண்டு, அறிக்கை சமர்ப்பிக்கவேண்டுமென சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் ஆணை பெற்றார்.

இதன் தொடர்ச்சியாக, திரு. தயாதேவதாஸ் அவர்களுக்குச் சொந்தமான நிறுவனங்கள் அனுமதியின்றி பல கோடி ரூபாய் மதிப்புள்ள கார்னெட் மணல் வெட்டி எடுக்கப்பட்டதை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அரசுக்குத் தெரிவித்திருந்தார். இம்முறைகேடுகள் குறித்து அரசு கடித எண் 17407, தொழில் துறை, நாள் 14–11–2011–ல், சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளைக்குத் தெரியப்படுத்தப்பட்டது. இவ்வறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, நீதிப் பேராணை மனு எண் 175/2010–ன்மீது, 18–11–2011

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 பிப்ரவரி 19

அன்று இறுதி ஆணையை வழங்கிய உயர் நீதிமன்றம், இவ்வழக்கில் சம்பந்தமுடையவர்களுக்கு உரிய வாய்ப்பு அளித்து, சட்டத்திற்கு உட்பட்டு, திரு. ஆர். அப்பு நடேசன் அவர்களின் 21–12–2008 ஆம் நாளிட்ட மனுவின்மீது உரிய நடவடிக்கை எடுக்கலாம் என ஆணையிட்டது. உயர் நீதிமன்ற ஆணையின்படி, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர், குழு ஒன்றினை அமைத்து திரு. தயாதேவதாஸ் என்பவருக்குச் சொந்தமான சுரங்கக் குத்தகை உரிமப் பகுதிகளை ஆய்வு செய்து, கள்ளத்தனமாக பல கோடி ரூபாய் மதிப்பிலான 39,38,190 மெட்ரிக் டன் கார்னெட் கலந்த மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டதைக் கண்டறிந்து அரசுக்குத் தெரியப்படுத்தினார். இதன்மூலம், 14,46,592 மெட்ரிக் டன் கார்னெட் கலந்த கார்னெட் மணல் வெவ்வேறு இடங்களில் திரு. தயாதேவதாஸ் அவர்களுக்குச் சொந்தமான மணல் பிரிக்கும் ஆலைகளில் இருப்பது அறியப்பட்டது. இந்த ஆலைகளில் இருப்பிலுள்ள மணல் அளவினைத் தவிர, ஏனைய மணல்கள் அனைத்தும் எவ்வித அனுமதியின்றி அப்புறப்படுத்தப்பட்டதும் அறியப்பட்டது.

எனினும், திரு. டி. தயாதேவதாஸ், மேற்கண்ட உயர் நீதிமன்ற ஆணையை எதிர்த்து மறுபரிசீலனை வழக்கு எண் 61/2011 என்ற வழக்கினைத் தொடுத்திருந்தார். திருச்சி மாவட்ட ஆட்சியர் அறிக்கையின்மீது அரசு நடவடிக்கை எடுத்து, மேற்கண்ட நிறுவனங்களுக்கு திருச்சி மாவட்டத்தில் அரசு புறம்போக்கு நிலத்தில் வழங்கப்பட்ட ஐந்து சுரங்கக் குத்தகைகளை, அரசு ஆணை (நிலை) எண்கள் 8, 9, 10, 11 மற்றும் 12, தொழில் துறை, நாள் 1–2–2013–ன்படி, இரத்து செய்து ஆணையிட்டது. இந்த ஆணைகளை எதிர்த்து, 5 உயர் நீதிமன்ற வழக்குகள் எண் 2111/2013 முதல் 2115/2013 வரை இந்நிறுவனங்களால் உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளன. இந்த வழக்குகளில் எதிர் வாதவுரை அரசால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை தனது 6–2–2013 அன்று வழங்கிய இடைக்கால ஆணையில், மேற்படி சுரங்கங்களில் முறைகேடாக வெட்டியெடுக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ள கார்னெட் மணலை அப்புறப்படுத்தக்கூடாது என்றும், மனுதாரரும் அம்மணலுக்கு இடையூறு செய்யக்கூடாது என்றும் ஆணையிட்டுள்ளது. இந்த இடைக்கால ஆணை தற்போது நடைமுறையில் உள்ளது.



2015 பிப்ரவரி 19] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் இருந்த மறுபரிசீலனை மனு எண் 61/2011 மற்றும் அனைத்து வழக்குகளும் ஒரே தொகுப்பு வழக்காக மாற்றப்பட்டு, சென்னை உயர் நீதிமன்ற அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

மேற்படி வழக்குகள் தவிர, திரு. டி. தயாதேவதாஸ் என்பவரால், சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண் 5549/2007 மற்றும் 1233/2012 ஆகிய வழக்குகள் தொடுக்கப்பட்டன. இவ்வழக்குகளில் சி.பி.ஐ. மூலம் தாது மணல் குவாரிகளின் விதிமீறல்களையும், முறைகேடுகளையும் விசாரிக்க வேண்டுமென கோரியிருந்தார். திரு. வி. சுந்தரம், இ.ஆ.ப. (ஓய்வு) என்பவர் தன்னையும் மேற்படி வழக்கில் பிணைத்துக்கொள்ள கோரி மாண்புமிகு உயர் நீதிமன்றத்திற்கு மனு செய்திருந்தார். இவ்வழக்கில், அரசு சார்பாக திரு. ஏ.எல். சோமையாஜி, மாநில அரசு தலைமை வழக்குரைஞர் அவர்கள் நியமிக்கப்பட்டு, மேற்படி வழக்குகளுக்காக வாதாடினார்.

பிற்பகல் 12–45

சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை, மறு சீராய்வு மனு எண் 61/2011, நீதிப் பேராணை மனுக்கள் எண் 14399/2011, 14400/2011, 5549/2007 மற்றும் 1233/2012 ஆகியவற்றின்மீது 12–12–2013 அன்று தனது தீர்ப்பை அளித்தது. அமர்வு நீதிமன்றமானது, மறு சீராய்வு மனு எண் 61/2011–ஐ தள்ளுபடி செய்தது. மேலும், நீதிப் பேராணை மனுக்கள் எண் 5549/2007 மற்றும் 1233/2012 ஆகியவற்றின்மீது தீர்ப்பளித்த அமர்வு நீதிமன்றம், வருவாய்த் துறைச் செயலர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள ஆய்வுக் குழுவானது, இரு வாதப் பிரதிவாதங்களையும் கேட்டு, அதன்மீது பரிந்துரைத்து அரசுக்கு அனுப்பவும், அரசு அந்த ஆய்வறிக்கையை தகுதியிருப்பின் ஆய்வு செய்து, சட்டத்திற்குட்பட்டு தேவையான ஆணை பிறப்பிக்கவும் ஆணையிட்டது. மேலும், மாண்புமிகு உயர் நீதிமன்றம் 14399/2011 மற்றும் 14400/2011 ஆகிய வழக்குகளில் ஏற்கெனவே வழங்கப்பட்ட விசாரணை அறிக்கைகள் மற்றும் ஆணைகளின்படி, மனுதாரரின் கோரிக்கை முடிவுற்றது எனக் கருதி தள்ளுபடி செய்தது. வழக்கு எண் 5549/2007 மற்றும் 1233/2012 ஆகியவற்றுடன், இவ்வழக்கில் இணைத்துக்கொள்ளக் கோரிய மற்ற மனுக்கள் அனைத்தும் முடிந்ததாகக் கூறி ஆணையிட்டது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 பிப்ரவரி 19

மாண்புமிகு உயர் நீதிமன்ற ஆணையின்படி, திரு. டி. தயாதேவதாஸ் 26–12–2013 அன்றும், திருவாளர்கள் வி.வி. மினரல் மற்றும் டிரான்ஸ்வேர்ல்ட் இந்தியா (பி) லிமிடெட் நிறுவனம் 30–12–2013 அன்றும், தங்களது கோரிக்கை மனுக்களை ஆய்வுக் குழுத் தலைவரிடம் அளித்தன. கோரிக்கை மனுக்கள் தற்போது குழுவின் ஆய்வில் உள்ளன.

திரு. வி. அன்பழகன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு எண் 34270/2013–ன்படி, அரசுச் செயலர், வருவாய்த் துறை, திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., தலைமையில் அமைக்கப்பட்ட சிறப்புக் குழுவில், பிற மாநிலங்களைச் சேர்ந்த புவியியல் மற்றும் சுரங்கத் துறையைச் சார்ந்த அலுவலர்களை உறுப்பினர்களாக நியமிக்க ஆணை கோரியிருந்தார். மேற்படி மனுவின்மீது மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் ஆணை ஏதும் இதுவரை பிறப்பிக்கவில்லை. பீச் மினரல் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் சார்பாக திரு. என். பால்துரை என்கிற பெருமாள் என்பவர், மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் தொடுத்த வழக்கு எண் 8562/2014–ல், அரசாணை நிலை எண் 156, தொழில் (எம்.எம்.டி.1) துறை, நாள் 8–8–2013 மற்றும் அரசாணை நிலை எண் 173, தொழில் (எம்.எம்.டி.1) துறை, நாள் 17–9–2013–ன்படி, அமைக்கப்பட்ட சிறப்புக் குழுவானது, தனது அறிக்கையினை விரைவில் சமர்ப்பிக்க வேண்டுமெனக் கோரியிருந்தார்.

இவ்வழக்கில் அரசு எதிர்வாதுரையைத் தாக்கல் செய்திருந்தது. மேற்படி வழக்கு 4–8–2014 அன்று மனுதாரரால் திரும்பப் பெறப்பட்டு, அதன் அடிப்படையில் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை மேற்படி வழக்கினைத் தள்ளுபடி செய்து ஆணையிட்டுள்ளது.

மேலும், டிரான்ஸ்வேர்ல்ட் இந்தியா (பி) லிட்., மற்றும் திருவாளர்கள். வி.வி. மினரல்ஸ் (பர்ம்) நிறுவனம் ஆகியோர் வழக்கு எண்கள் 12849 முதல் 12880/2014 வரையுள்ள 32 வழக்குகளைத் தொடுத்துள்ளனர். மேற்படி நிறுவனத்தாரின் சுரங்கப் பணிகளை விதி எண் 13(2), கனிமப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திச் சட்டம் 1988–ன்படி, தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ள இந்திய சுரங்கக் கழகம் (IBM) மற்றும் அதன்மீது நடவடிக்கை எடுத்துள்ள மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி ஆகியோரின் ஆணைகளின்மீது இடைக்காலத் தடை



2015 பிப்ரவரி 19] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

உத்தரவு வழங்கக் கோரியுள்ளனர். மேற்படி வழக்குகள் நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு, 7–7–2014 அன்று இந்திய சுரங்கக் கழகம் (IBM) பிறப்பித்த இடை நிறுத்து ஆணைகளை நிராகரித்து, ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வழக்கில் ஏற்கெனவே அரசாணை எண்கள் 156, 173, தொழில் (எம்.எம்.டி.1) துறை, நாள் 8–8–2013 மற்றும் 17–9–2013 ஆகியவற்றின்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள நிலையில், மேல் நடவடிக்கைகள் தமிழக அரசின் சார்பில் அவசியம் இல்லை.

பிற்பகல் 12–50

மேலும், டிரான்ஸ்வேர்ல்ட் இந்தியா (பி) லிட்., மற்றும் திருவாளர்கள் வி.வி. மினரல்ஸ் நிறுவனத்தார் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு எண்கள் 16716/2014, 19641/2014–ன்படி, அரசால் அமைக்கப்பட்ட சிறப்புக் குழு தனது தாது மணல் தொடர்பான ஆய்வறிக்கையினைச் சமர்ப்பிக்க எதிர்ப்பினைத் தெரிவித்து வழக்கு தொடுத்துள்ளனர். மேற்படி வழக்குகளில் சென்னை உயர் நீதிமன்றம், மதுரை கிளை ஆணை, நாள் 12–12–2013 வழக்கு எண் (எம்.டி.) 1233/2012–ல் தெரிவித்துள்ள வழிமுறைகள் அனைத்தையும் பின்பற்ற வேண்டுமென்று மனுதாரரால் கோரப்பட்டுள்ளது. வழக்கு எண்கள் 16716/2014, 19641/2014 ஆகியவற்றை அரசு வழக்கறிஞர் திரு. எஸ்.டி.எஸ். மூர்த்தி மற்றும் அட்வகேட் ஜெனரல் திரு. ஏ.எல். சோமையாஜி ஆகியோர் முன்னின்று நடத்தி வருகின்றனர். அரசுத் தரப்பில் எதிர்வாதுரைகள் 9–7–2014 அன்று அரசு முதன்மைச் செயலாளர், தொழில் துறை அவர்களாலும், 11–7–2014 அன்று கூடுதல் செயலாளர், வருவாய்த் துறை அவர்களாலும், அரசு வழக்கறிஞர் வழியாக மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேற்படி வழக்குகளின் மறு விசாரணை 12–12–2014 அன்று உத்தரவிடப்பட்டு, மீண்டும் 19–1–2015 அன்று விசாரணைக்கு ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் 17–2–2015–க்கு வழக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. திரு. டி. தயாதேவதாஸ் என்பவர் தன்னையும் மேற்படி வழக்குகளில் பிணைக்கக் கோரி விண்ணப்பித்துள்ளார்.

கடற்கரைக் கனிமங்களான தாது மணல் குவாரிகளின் முறைகேடுகள் குறித்து விசாரிக்க சிறப்பு ஆய்வுக் குழுவினை அமைக்கக் கோரி திரு. விக்டர் ராஜமாணிக்கம் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொது நல வழக்கு எண் 1592/2015

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 பிப்ரவரி 19

மூலம் கோரியுள்ளார். இவ்வழக்கு 23–1–2015 அன்று மாண்புமிகு தலைமை நீதிபதி மற்றும் நீதியரசர் திரு. எம்.எம். சுந்தரேஷ் அவர்கள் அடங்கிய அமர்வு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதனை விசாரித்த உயர் நீதிமன்றம், 4 வார காலத்திற்குள் விரிவான எதிர்வாதுரையினைச் சமர்ப்பிக்க எதிர்வாதிகளான மத்திய அரசின் சுரங்கத் துறை அமைச்சகத்தின் செயலாளர், அணுசக்தித் துறையின் செயலாளர், சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்தின் செயலாளர், இந்திய கனிமக் குழுமத்தின் மண்டல கனிமக் கட்டுப்பாட்டுத் தலைமை அலுவலர், தமிழக அரசின் தலைமைச் செயலாளர், கூடுதல் தலைமைச் செயலாளர், தொழில் துறை, ஆணையர், புவியியல் மற்றும் சுரங்கத் துறை, திரு. ககன்தீப் சிங் பேடி, செயலாளர், ஊரக வளர்ச்சித் துறை ஆகியோருக்கு அறிவுறுத்தியுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கமாகப் பதில் சொன்னதற்குப் பிறகு, மேலும் என்ன கேட்கப் போகிறீர்கள்?

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கமாக பதில் சொல்லிவிட்டார்கள்.

**திரு. துரைமுருகன்:** அதைப்பற்றித்தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதில் நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்கள்?

**திரு. துரைமுருகன்:** நான் பேசினால்தானே, என்ன பேசப் போகிறேன் என்று உங்களுக்குத் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தொடர்ந்து இதுகுறித்து நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தால் எப்படி?

**திரு. துரைமுருகன்:** அதுபோன்று நீண்ட நேரம் பேசமாட்டேன்; நான் சுருக்கமாகப் பேசுகிறேன். அதாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த Rules and regulations பற்றியும், அதன் தொடர்பான வழக்குகள் பற்றியும் மிகவும் strain எடுத்துப் படித்தார்கள். அதில் நான் ஒன்றும் குறுக்கிடவில்லை.



2015 பிப்ரவரி 19] [திரு. துரைமுருகன்]

எங்களுடைய தலைவர் தளபதி திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கேட்டது, அவர் படித்ததுபோன்று, திரு. ககன்தீப் சிங் பேடி அவர்கள், சிறப்புக் குழு மற்றும் பொதுக் குழுக்கள் ஆய்வு அறிக்கைகளை எல்லாம் 17–9–2013 அன்று மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்தார் என்று இந்த மன்றத்திலேயே மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கை படித்தார்கள். திரு. ககன்தீப் சிங் பேடி அவர்கள் கொடுத்த அறிக்கை எங்கே என்றுதான் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கேட்கிறார். அந்த அறிக்கை இருந்தால், இந்த அவையிலே நாளைக்கோ அல்லது இன்னும் இரண்டு நாட்களுக்குள்ளோ வையுங்கள்; பார்க்கலாம். இதைத்தான் நாங்கள் கேட்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனிமேல் யாரும் எந்த உறுப்பினரும் தாது மணல் சம்பந்தமாக எந்தப் புகாரும், எந்தக் கேள்வியும் கேட்க முடியாத அளவிற்கு நான் எனது பதிலுரையில் விளக்கம் தந்திருக்கிறேன். இறுதியாக இந்த வழக்கு உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. திரு. ககன்தீப் சிங் பேடி அவர்கள், முன்பு வருவாய்த் துறைச் செயலாளராக இருந்தார்; இப்போது ஊரக வளர்ச்சித் துறைச் செயலாளராக இருக்கிறார்; அவருடைய அறிக்கையை வெளியிடக்கூடாது என்று பல வழக்குகள் ஒன்றாகச் சேர்ந்து, இப்போது நிலுவையில் இருக்கின்றன. வழக்கு முடிந்தவுடன் நீங்கள் தாராளமாகப் பார்த்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) உயர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கிறது. அந்த அறிக்கையை வெளியிடக்கூடாது என்று வழக்கு இருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய அனுமதி இல்லாமல் நீங்கள் திடீரென்று எழுந்து நின்று பேசக்கூடாது. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது திடீரென்று எழுந்து நின்று பேசக்கூடாது. (குறுக்கீடு) என்னிடம் அனுமதி பெற்ற பிறகுதான் நீங்கள் பேசவேண்டும். (குறுக்கீடு) என்னிடம் அனுமதி பெற்ற பிறகுதான் நீங்கள் எழுந்து பேசவேண்டும். (குறுக்கீடு) என்னிடம் அனுமதி பெற்ற பிறகுதான் நீங்கள் எழுந்து நிற்க வேண்டும். (குறுக்கீடு) என்னிடம் அனுமதி பெற்ற பிறகுதான் நீங்கள் எழுந்து நின்று பேசவேண்டும். (குறுக்கீடு) என்னுடைய

[பேரவைத் தலைவர்] [2015 பிப்ரவரி 19

*அனுமதியில்லாமல் எழுந்து நின்று பேசக்கூடாது. (குறுக்கீடு) நீங்கள்தான் உணர்ச்சிவசப்படுகிறீர்கள். (குறுக்கீடு) நான் உணர்ச்சிவசப்படாமல்தான் பேசுகிறேன். (குறுக்கீடு) நான் உணர்ச்சிவசப்படவில்லை, அமைதியாகத்தான் பேசுகிறேன். நீங்கள் என்னுடைய அனுமதியைக் கேட்டுத்தான் எழுந்திருக்கவேண்டும். திடீரென்று குறுக்கிட்டால் எப்படி? (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள்; நீங்கள் திடீரென்று குறுக்கிட்டுப் பேசினால் எப்படி? (குறுக்கீடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

*பிற்பகல் 12–55*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். அந்த அனுமதியை இரத்து செய்கின்ற உரிமை மத்திய அரசிடம்தான் இருக்கின்றது. புகார் வந்தவுடன், உடனடியாக transport permit-ஐ நிறுத்தி, அதை எடுக்கக்கூடாது என்று சொன்னவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நீங்கள் தயவுசெய்து புரிந்து கொள்ளவேண்டும். எங்கே தவறு நடந்தாலும், அதைச் சுட்டிக்காட்டி, உடனடியாக நடவடிக்கை எடுக்கின்ற அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை தாங்கள் தெரிந்துகொள்ளவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. எஸ்.எஸ். சிவசங்கர், நீண்ட நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.*

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சீக்கிரம் பேசி முடியுங்கள். இந்த சப்ஜெக்ட்டை விட்டு வேறு சப்ஜெக்ட்டிற்குப் போங்கள்.*

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** ** *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சரைப்பற்றி நீங்கள் அப்படியெல்லாம் பேசக்கூடாது.*

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** ** *(குறுக்கீடுகள்)* **

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2015 பிப்ரவரி 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சரைப்பற்றி நீங்கள் இப்படிப் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்)*

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** நான் நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன். *(குறுக்கீடுகள்)* நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுகிறேன். (குறுக்கீடுகள்) அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் ஒரு சவால் விட்டார்கள்; இதிலே ஏதாவது நடவடிக்கை எடுக்கிறீர்களா என்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, அவர் பேசினார். (குறுக்கீடு)*

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் ஒரு சவால் விட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் மற்றும் தி.மு.க. உறுப்பினர்களுடைய ஐயப்பாடுகள் தொடர்பாக மீண்டும் விளக்கவேண்டுமென்றால், நான் இந்தக் கடைசி portion–ஐ மட்டும். . . *(குறுக்கீடுகள்)* வேண்டாம் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. எஸ்.எஸ். சிவசங்கர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) சீக்கிரம் பேசி முடியுங்கள். வேறு சப்ஜெக்ட்டிற்குப் போங்கள்.*

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் ஒரு சவால் விட்டார்கள். *(குறுக்கீடு)* அவர் சவால் விட்டதற்கு நான் பதில் சொல்ல வேண்டுமல்லவா?

[2015 பிப்ரவரி 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சவால் எல்லாம் வேண்டாம். நீங்கள் வேறு சப்ஜெக்ட் குறித்துப் பேசுங்கள்.*

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *நாங்கள் தயார். சி.பி.ஐ. விசாரணைக்கு அவர் தயாரா?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இதற்கே நீண்ட நேரமாகிவிட்டது. நீங்கள் வேறு சப்ஜெக்ட் குறித்துப் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) ஐந்து நிமிடங்களில் பேசி முடியுங்கள்.*

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *இருட்டிலே தூங்கிக் கொண்டிருந்த திருவரங்கத்து ரங்கநாதன் கையைத் தொட்டுப் பார்த்தால், தாது மணல்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இந்த சப்ஜெக்ட் குறித்து நீண்ட நேரம் பேசியாகிவிட்டது. நீங்கள் வேறு சப்ஜெக்ட் ஏதாவது இருந்தால் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசியதற்குத்தான், விளக்கமெல்லாம் கொடுத்தார்கள். நீங்கள் வேறு சப்ஜெக்ட் குறித்துப் பேசுங்கள்.*

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *ஸ்ரீரங்கத்து ரங்கநாதர் கையிலே தாது மணல் இருக்கிறது. அதனாலே தாது மணல்தான் எல்லாப் பிரச்சினைக்கும் காரணம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் வேறு சப்ஜெக்ட் ஏதாவது பேசி முடியுங்கள். நீங்கள் ஏற்கெனவே பேசியதற்கு, விளக்கமாக பதில் சொல்லியாகிவிட்டது.*

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *தாது மணலிலே ஒரு. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. எஸ்.எஸ். சிவசங்கர், நீங்கள் பேசியது தொடர்பாக, உங்கள் தலைவர்கள் எல்லாம் பேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கமாக பதில் சொல்லியாகிவிட்டது. இதற்கு மேலும் நீங்கள் அதைப்பற்றிப் பேசவேண்டாம். வேறு சப்ஜெக்ட் குறித்துப் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் பதில் சொல்லிவிட்டார். நீங்கள் அதைவிட்டு, வேறு சப்ஜெக்ட் குறித்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) வேறு சப்ஜெக்ட் குறித்து ஏதாவது பேசுங்கள். (குறுக்கீடு) வேறு சப்ஜெக்ட் குறித்துப் பேசுங்கள்.*



2015 பிப்ரவரி 19]

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *போக்குவரத்துத் துறையைப் பொறுத்தமட்டிலே, இன்றைக்கு டீசல் விலையை மத்திய அரசாங்கம் குறைத்த பிறகு, டிக்கெட் கட்டணத்தைக் குறைக்கலாம். மக்களுக்காகப் பாடுபடுகின்ற அரசு; மக்களுடைய அரசு என்று சொல்கின்றீர்கள். எனவே, பேருந்துக் கட்டணத்தைக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்யலாம். போக்குவரத்துத் தொழிலாளர் பிரச்சினை இன்னொருபுறம் தலைவிரித்தாடுகிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டீசல் விலை குறைந்ததனால் பேருந்துக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று நேற்றே இங்கு கேள்வி எழுப்பப்பட்டு, அதற்குரிய பதில் தரப்பட்டிருக்கிறது என்ற விவரம் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களுக்குத் தெரியாது என்று நினைக்கிறேன். (குறுக்கீடுகள்) அதாவது, 2011 ஆம் ஆண்டு பேருந்துக் கட்டணங்கள் மாற்றியமைக்கப்பட்டபோது, டீசல் விலை லிட்டருக்கு 43 ரூபாய் 10 காசாக இருந்தது. தற்போது அது லிட்டர் ஒன்றுக்கு ரூ.48.32 காசாக உயர்ந்துள்ளது. கிட்டத்தட்ட லிட்டருக்கு ரூ.5.22 பைசா கூடுதலாகத்தான் இருக்கிறதேயொழிய, குறையவில்லை என்பதனை நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களுக்கு மீண்டும் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள்.*

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *ஐந்து முறை டீசல் விலை ஏறியும், கடந்த தி.மு.க. ஆட்சியில் நாங்கள் பேருந்துக் கட்டணத்தை உயர்த்தாமல் இருந்தோம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. எஸ்.எஸ். சிவசங்கர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)*

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *ஆனால், அப்படி உயர்த்தப்பட்ட கட்டணம், இப்போது குறைக்கப்பட்டதற்குப் பின்பு. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். சிவசங்கர், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** போக்குவரத்துத் தொழிலாளர் பிரச்சினையில், 'தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துகிறோம்; பேச்சுவார்த்தை நடத்துகிறோம்' என்று சொல்லி, தொழிலாளர்கள் மிகப் பெரிய ஏமாற்றத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். தொடர்ந்து போராடி வருகிறார்கள். (குறுக்கீடு) வருகின்ற 3 ஆம் தேதி மறியல் போராட்டம் என்று அறிவித்திருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். சிவசங்கர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுடைய ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தைக்குத் தடையாக இருப்பது, முட்டுக்கட்டையாக இருந்தது தி.மு.க., L.P.F. தொழிற்சங்கம் என்று பல்வேறு முறை இதே அவையிலே சுட்டிக்காட்டிப் பேசப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) நான் சொல்கிறேன். 2010 ஆம் ஆண்டு நீதிமன்றத்தில் ஒரு வழக்கைப் போட்டு, எந்தச் சங்கம் அதிக வாக்குகளைப் பெறுகின்றதோ, அவர்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்கவேண்டுமென்று ஒரு தீர்ப்பைப் பெற்று, தேர்தல் நடத்தி, அந்தத் தேர்தல் மூலமாக 73,450 வாக்குகளைப் பெற்ற L.P.F. தொழிற்சங்கத்தை மட்டும் பேச்சுவார்த்தைக்கு அழைத்து, பேசி ஒப்பந்தம் போடப்பட்டது. வழக்கமாக ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை என்பது, அனைத்துத் தொழிற்சங்கங்களையும் அழைத்து, அவர்களுடைய கோரிக்கைகளைப் பெற்று, அவர்களுடைய கோரிக்கைகளுக்கு ஏற்ப அரசு நடவடிக்கை எடுக்கும். மாறாக, 2010–ல் ஆட்சியில் இருந்தவர்கள் அவர்கள். அவர்களுடைய தொழிற்சங்கத்தினரை வைத்து ஒப்பந்தத்தைப் போட்டுக்கொண்டார்கள். இந்த வழக்கு நீதிமன்றத்தில் தொடர்ந்து நிலுவையில் இருந்தது.

பிற்பகல் 1–00

இந்த ஆண்டு ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தைக்கு அனைத்துத் தொழிற்சங்கங்களையும் அழைக்கவேண்டுமென்று சொன்னபோது, இதுசம்பந்தமான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்ததால், அனைத்துத் தொழிற்சங்கங்களையும் அழைத்துப் பேசலாம் என்றும், L.P.F. தொழிற்சங்கம் அரசுக்குக் கடிதம் வழங்கவேண்டும் என்றும், இதே அவையில் பேசப்பட்டபோது, தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இதே அவையில் இருந்தார்கள். ஆனால், L.P.F. தொழிற்சங்கம் கடந்த 1¼ வருடங்களாக அந்தக் கடிதத்தை அரசிடம் கொடுக்கவில்லை; நீதிமன்றத்திலும் அந்தக் கடிதம் தாக்கல் செய்யப்படவில்லை. கடிதம் வழங்கக் கோரி தொடர்ந்து வலியுறுத்தப்பட்டது. மாறாக, 19 ஆம் தேதி முதல் வேலைநிறுத்தம் செய்யப்படும் என்று 5 ஆம் தேதி அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். 26 ஆம் தேதி தொழிலாளர் நலத் துறையின் துணை ஆணையர் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்தார்கள். 26 ஆம் தேதி பேச்சுவார்த்தை நடைபெற்றது. அந்தப் பேச்சுவார்த்தையிலும், L.P.F. தொழிற்சங்கம் பேச்சுவார்த்தைக்கு அனைத்துத் தொழிற்சங்கங்களையும் அழைக்கலாம் என்ற கடிதத்தை வழங்கவேண்டுமென்று அரசுத் தரப்பில் அழுத்தமாகத் தெரிவிக்கப்பட்டது. அப்பொழுதும் L.P.F. தொழிற்சங்கம் கடிதம் வழங்குவதற்கு முன்வரவில்லை. நாங்கள் கடிதம் கொடுத்தால் இன்றே பேச்சுவார்த்தை தொடங்குவீர்களா, எத்தனை மணிக்கு பேச்சுவார்த்தை தொடங்குவீர்கள், இன்றே அழைப்பீர்களா என்று கேட்டார்கள். இதெல்லாம் எதற்காக என்று சொன்னால், தொழிலாளர்கள் மத்தியில் பதற்றத்தை உருவாக்கவேண்டும், அரசுக்கு ஒரு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற குறுகிய மனப்பான்மையுடன் L.P.F. தொழிற்சங்கம் செயல்பட்டது. ஆனால், 27 ஆம் தேதி மீண்டும் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. மற்ற தொழிற்சங்கங்களெல்லாம், L.P.F. தொழிற்சங்கத்தின் இத்தகைய நடவடிக்கைகளால்தான் காலதாமதம் ஏற்படுகிறது; தி.மு.க.வின் L.P.F. தொழிற்சங்கத்தால்தான் பேச்சுவார்த்தை தடைபடுகிறது; தொழிலாளர்கள் வாழ்க்கை பாதிக்கப்படுகிறது என்று நிர்ப்பந்தம் ஏற்படுத்தியபொழுதுதான், 27 ஆம் தேதி L.P.F. தொழிற்சங்கம் அனைத்துத் தொழிற்சங்கங்களையும் பேச்சுவார்த்தைக்கு அழைக்கலாம் என்று கடிதம் வழங்கினார்கள். கடிதம் வழங்கிய பிறகு, அரசால், 4 ஆம் தேதி 14 பேர் கொண்ட குழு அமைத்து, மாண்புமிகு மக்கள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு அரசாணை வெளியிடப்பட்டது.

41 தொழிற்சங்கங்கள் பதிவு பெற்றிருக்கின்றன. அரசாணை வெளியிடப்பட்ட பிறகு அடுத்தகட்டமாக, அந்த 41 சங்கங்களும் தங்களது கோரிக்கையை 14 பேர் கொண்ட குழுவிடம் சமர்ப்பிக்கலாம் என்று அரசின் சார்பில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்குக் கடிதம் அனுப்பப்பட்டது. அந்த 14 பேர் கொண்ட குழு, அந்தக் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டு, அதன்மீது துறை சார்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த நிலையில் வருகின்ற 2 ஆம் தேதி பேச்சுவார்த்தை நடைபெறும் என்று தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

தி.மு.க.வின் நிலை, L.P.F. தொழிற்சங்கத்தின் நிலை என்னவென்றால், இந்தப் பேச்சுவார்த்தை தடைபடவேண்டும்; தொழிலாளர்கள் மத்தியில் ஒரு பதற்றமான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்ற குறுகிய மனப்பான்மையோடுதான் L.P.F. தொழிற்சங்கத்தினர் தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டிருக்கின்றனர் என்பதை நீங்கள் முதலில் தெரிந்துகொள்ளவேண்டும்.

மாண்புமிகு மக்கள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற தமிழக அரசில், போக்குவரத்துத் துறை சார்பாக வருகின்ற 2 ஆம் தேதி முதற்கட்டப் பேச்சுவார்த்தை நடத்த அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. நிச்சயம் 2 ஆம் தேதி முதற்கட்டப் பேச்சுவார்த்தை நடைபெற்று, தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

நீங்கள் ஒன்றைத் தெரிந்துகொள்ளவேண்டும். உங்களது ஆட்சிக் காலத்தில் குழு அமைக்கப்பட்டு 38 நாட்கள் கழித்துதான் முதற்கட்டப் பேச்சுவார்த்தையே தொடங்கியிருக்கின்றீர்கள். தொடர்ச்சியாக, 1977 ஆம் ஆண்டு முதல் என்ன நடைமுறை விதிகள் பின்பற்றப்பட்டு வருகின்றனவோ, அதே நடைமுறை விதிகளைப் பின்பற்றி, தொழிலாளர்களின் நலனைக் காக்கின்றவகையில்தான் அனைத்து நடவடிக்கைகளும் அரசின் சார்பில் மாண்புமிகு மக்கள் முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. உங்களது ஆட்சிக் காலத்தில் 5 அல்லது 6 முறை பேச்சுவார்த்தை நடைபெற்ற பிறகுதான், ஊதிய ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை தொடர்ந்து



நடத்தி, முழுமையாக மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு இந்த ஆட்சியில் சிறப்பாக ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தையை நடத்தி, ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசுக்குத் தொழிலாளர்கள் மத்தியில் அவப் பெயரை ஏற்படுத்தவேண்டும்; பொது மக்கள் மத்தியில் பதற்றமான சூழலை உருவாக்கவேண்டும் என்று நினைப்பவர்களுக்கு ஒரு கருத்தை மட்டும் வலியுறுத்திச் சொல்கிறேன். கறந்த பால் மடி ஏறாது; கருவாடு மீன் ஆகாது; சதிகாரன் நெஞ்சு நல்லது நினைக்காது; மக்கள் சக்தியை இழந்த தி.மு.க., தொழிலாளர்கள் நம்பிக்கையை ஒருபோதும் பெற முடியாது. தொழிலாளர்களுக்காக, தொழிலாளர் நலன் காப்பதற்காக மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, பட்டயக் கல்லூரி என்று பல்வேறு கல்லூரிகளை உருவாக்கி, ஓட்டுநர்கள், நடத்துநர்கள் தங்களது பிள்ளைகளை மருத்துவர்களாக, பொறியாளர்களாக உருவாக்கும் வகையில் அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொடுத்திருப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களுடைய நம்பிக்கையைப் பெற்றிருக்கின்ற தொழிலாளர்கள், அம்மா அவர்கள் மனதில் நீங்காத நம்பிக்கையைப் பெற்றிருக்கின்ற போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை குறிப்பிட்ட தேதியில் நடத்தப்படும். மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய அனைத்துத் திட்டங்களும் தொழிலாளர் நலனுக்காக, அவர்கள் மனம் நிறைவு அடைகின்ற வகையில் இருப்பதால், ஊதிய ஒப்பந்தத்தைச் சிறப்பாக அரசு ஏற்படுத்தும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–05

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாது மணல் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் மற்றும் தி.மு.க. உறுப்பினர்கள் குறிப்பிட்ட திரு. ககன்தீப் சிங் பேடி அறிக்கை தூத்துக்குடி மாவட்டம் பற்றியதுதான். அந்த அறிக்கை வழக்கின் காரணமாகத்தான்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 பிப்ரவரி 19

வெளியிடப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. நீதிமன்ற ஆணைகளின் காரணமாகவே மற்ற மாவட்டங்களில் அந்த ஆய்வு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதுபற்றியும் எனது பதிலில் ஏற்கெனவே நான் சொல்லியுள்ளேன். முழுமையான அறிக்கையைப் பெற்ற பிறகே, அதை ஆய்வு செய்து, முடிவு எடுக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர், உங்கள் உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் வழக்கு போடுவதைப்பற்றிச் சொன்னார்கள். அந்த வழக்கைப் போட்டது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொழிற்சங்கம் அல்ல; அது வேறு தொழிற்சங்கமாகும் என்பதை மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். அதேபோல், மிகுந்த அக்கறையோடு செயல்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். போனஸ் கேட்ட ஒரே குற்றத்திற்காக தீபாவளி அன்றைக்கு போக்குவரத்துத் தொழிலாளிகளை அடித்து, முடக்கியது எந்த ஆட்சி? அது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லத்தில் இருப்பவர்கள் சதுரங்கம், செஸ், கேரம்போர்டு போன்ற விளையாட்டுகளை விளையாடுவார்கள். குடும்பத்திற்குள்ளேயே மார்க் போட்டு, விளையாடி, போட்டி நடத்தி, அதில் அப்பாவித் தொழிலாளர்கள் மூன்று பேர் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டார்கள். அவர்கள் தொழிலாளர்களைப்பற்றி, தொழிலாளர்களுடைய நலன்களைப்பற்றி இன்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சம்பவம் நடைபெற்றபோது வெளியே வந்து மிகப் பெரிய அளவில் ஆவேசமாகப் பேட்டி அளித்தார்கள். “பாதிக்கப்பட்ட தொழிலாளிகளுக்கு நாங்கள் நிவாரணத்தைத் தருவோம்; தீர்ப்பைப் பெற்றுத் தருவோம்” என்று சொன்னார்கள். அவ்வாறு சொன்னதை அவர்கள் மறந்துவிட்டார்கள்.



2015 பிப்ரவரி 19] [திரு. வி. செந்தில்பாலாஜி]

தொழிலாளர்களின் ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தைக்கு, 1¼ வருடம் தடையாக இருந்துவிட்டு, அந்தப் பேச்சுவார்த்தைக்குக் கடிதம் வழங்காமல், தொழிலாளர்கள் எந்த வகையிலும் அவர்கள் நலன்களைப் பெற்றுவிடக்கூடாது என்று நினைத்து, கடிதம் வழங்குவதற்கே 1¼ வருடம் காலம் எடுத்துக்கொண்டு, பேச்சு வார்த்தைக்கு தி.மு.க. மற்றும் L.P.F. சங்கம் தடையாக இருக்கிறது என்று அனைத்துத் தொழிலாளர்களும் நிர்ப்பந்தித்த பின்னர், கடிதத்தை வழங்கிய சங்கம் தி.மு.க.–வினுடைய L.P.F. சங்கம் ஆகும். அவர்கள் தடையாக இருந்தாலும்கூட, தொழிலாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்; அவர்களுடைய நலன்கள் பேணிக்காக்கப்படவேண்டும் என்பதற்காக ஆயிரம் ரூபாயை இடைக்கால நிவாரணமாக வழங்கிய தலைவி, மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், (மேசையைத் தட்டும் ஒலி) அதனை தொழிலாளர்கள் இன்றைக்கும் நன்றியுணர்வோடு எண்ணிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். தி.மு.க. போக்குவரத்துத் துறையைச் சீரழித்தது; கடன் சுமையில் ஆழ்த்தியது. இந்திய அரசியல் வரலாற்றிலேயே கடன் சுமையில் மூழ்கிய அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 1,300 கோடி ரூபாயை டீசல் மானியமாக வழங்கிய முன்நிகழ்வு இல்லை. அந்தப் புதிய வரலாற்றை உருவாக்கியது மாண்புமிகு அம்மா அவர்கள் தான். 1,300 கோடி ரூபாயை டீசல் மானியமாக வழங்கி, போக்குவரத்துக் கழகத்தையும், போக்குவரத்துத் தொழிலாளர்களையும் காப்பாற்றி வருகின்றார்கள். மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி குறிப்பிட்ட தேதியில் பேச்சுவார்த்தை நடைபெற்று, தொழிலாளர்களுடைய மனம் நிறைவுபெறுகின்ற வகையில், ஊதிய ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர், உங்கள் உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடிக்க விட்டால்தானே! ஒவ்வொரு அமைச்சர்களாக லாவணிக் கச்சேரி பாடுகிறார்கள். நான் பாடுவதற்கு அவர்கள் எதிர்ப்பாட்டுப் பாடி லாவணிக் கச்சேரியாகப் போய்க் கொண்டிருக்கிறது.

[2015 பிப்ரவரி 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தத்தில் வெற்றுக் காகிதமாகக் கொடுத்திருக்க வேண்டிய ஆளுநர் உரையை, பழைய செய்திகளை அச்சிட்டு கொடுத்திருக்கிறார்கள். அந்த ஆளுநர் உரையைப் படிப்பதற்கு ஆளுநர் வந்திருக்கத் தேவையில்லை. காரணம் எதுவுமில்லாத விஷயத்தை வெறும் காகிதத்தை, கடந்த காலத்தில் நிகழ்ந்தவற்றை தொகுப்பாகக் கொடுப்பதற்கு, இந்த ஆட்சியில் நடக்கின்ற ** தீர்ப்பதற்கான வழிமுறைகளைச் சொல்லாமல், ஆட்சியின் சாதனைகள் என்று எதையும் சொல்லிக்கொள்வதற்கு இல்லாமல், தொடர்ந்து அதைப் படிப்பதற்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசங்கர் அவர்கள் பொத்தாம்பொதுவாக ** என்று சொல்லக்கூடாது. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும். குறிப்பிட்ட சம்பவங்களைக் குறிப்பிட்டு, அந்த சம்பவங்களின்மீது மேல் நடவடிக்கை எடுக்கவில்லை என்று திரு. சிவசங்கர் அவர்கள், தெரிந்தால் அதைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள் கூறியது நீக்கப்படுகிறது.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம்–ஒழுங்கு மிகச் சிறப்பாக இருக்கிறது என்று ஆளுநர் உரையில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், காலைப் பத்திரிகையில் நேற்றைய திருட்டு நிலவரம் என்று செய்தி போடுகின்ற அளவிற்கு, தினம், தினம் திருட்டுகள் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில், சட்டம்–ஒழுங்கு சீர்குலைந்து இருக்கிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் . . .

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2015 பிப்ரவரி 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர், நேரம் அதிகமாகிவிட்டது, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசங்கர் நேற்று சபைக்கு வரவில்லை. சட்டம்–ஒழுங்குப் பிரச்சினைக்கு நான் ஏற்கெனவே நேற்றையதினம் விளக்கமாக பதில் கூறியிருக்கின்றேன். என்னுடைய சட்டமன்ற உரையிலிருந்து நீங்கள் எடுத்துப் பார்த்தால் தெரியும். (குறுக்கீடுகள்) தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின் அவர்கள் உட்கார்ந்து கேட்கவேண்டும்; மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்களும் உட்காரவேண்டும். அந்த உரையில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து இன்றுவரை (குறுக்கீடுகள்) சட்டத்தின் ஆட்சி தமிழகத்தில் எவ்வாறு நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை விளக்கமாக நான் சொல்லியிருக்கிறேன்.

பிற்பகல் 1–10

ஓர் அரசு சீராக நடைபெறவேண்டுமென்று சொன்னால், சட்டம்–ஒழுங்கு சீராகப் பராமரிக்கப்படவேண்டும். இந்த நிலையில் மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த மூன்றரை ஆண்டுக் காலம் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தியதன் காரணமாகத்தான், கடந்த தி.மு.க. ஆட்சியில் ஐந்தாண்டுக் காலத்தில் நடத்தப்பட்ட, நிகழ்த்தப்பட்ட கொலையானாலும் சரி, குற்ற எண்ணிக்கையானாலும் சரி, கன்னக்களவு வழக்குகளானாலும் சரி, அதைவிட கடந்த மூன்றரை ஆண்டுக் காலத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் குற்றங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு, குறைந்த சதவிகிதம் எட்டப்பட்டிருக்கிறது என்பதை நேற்றைய தினம் நான் விளக்கமாகச் சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதோடு மட்டுமல்லாமல், தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தினுடைய கூற்றின்படி, இந்தியாவில் இருக்கின்ற மற்ற மாநிலங்களைக் காட்டிலும், தமிழகத்தில், மாண்புமிகு அம்மா அவர்கள் நல்லாட்சி நடத்திக்கொண்டிருந்த தமிழகத்தில், குற்ற

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 பிப்ரவரி 19

நிகழ்வுகள் அனைத்து நிலைகளிலும், அனைத்து வகைகளிலும் குறைக்கப்பட்டிருக்கின்றன என்பதனைப் புள்ளிவிவரத்தோடு நான் இங்கே சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் இதை திரு. சிவசங்கர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கின்றேன்.

அதைப்போல, களவுபோன, திருட்டுப்போன பொருட்களைக் கைப்பற்றி உரிமையாளர்களிடம் வழங்குவதிலும் இந்திய அளவில் தமிழகம்தான் முதல் நிலையில் இருக்கிறது என்பதையும் நான் இங்கே எடுத்துச் சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) திரு. சிவசங்கர் ஏதோ பொத்தாம்பொதுவாகப் பேசிவிட்டு, வெளியேறுவதிலேயே குறிக்கோளாக இருக்கிறார். நீங்கள் உட்கார்ந்து கேட்கவேண்டும். நன்றாகக் கேட்டுக்கொள்ளுங்கள். ஏதாவது ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டு, இந்தச் சம்பவத்தில் இந்தப் பிரச்சினை இருக்கிறது, அரசு இன்னும் தீவிர கவனம் செலுத்தவேண்டுமென்று கோரிக்கை ஏதாவது இருப்பின், நீங்கள் சொல்லலாம். அதற்கு பரிகாரமாக உரிய பதில் என்னிடம் இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர், வேறு சப்ஜெக்ட் பற்றிப் பேசுவதாக இருந்தால் பேசுங்கள். இல்லையென்றால், உட்காருங்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்தின் ஆட்சி நடப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார். காவல் துறை ஆட்சிதான் நடந்துகொண்டிருக்கிறது. காவல் துறையைக் கொண்டு எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதும், எப்போதும் பொது மக்களை ஒடுக்குவதும்தான் நடந்துகொண்டிருக்கிறது. சன்னாசிநல்லூர் பிரச்சினையை நீங்கள் சொன்னீர்கள். இதிலே அந்த மக்கள் தாக்கப்பட்ட செய்தி, மக்களைப் போலிஸ் தாக்குகின்ற படம் அத்தனையும் வந்திருக்கிறது. இது ஆதாரபூர்வமான செய்தி. (குறுக்கீடு)

*(திரு. எஸ்.எஸ். சிவசங்கர் ஒரு தாளை உயர்த்திக் காண்பித்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போதும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) போதும், நீங்கள் உட்காருங்கள். நிறைய பேசிவிட்டீர்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)



2015 பிப்ரவரி 19]

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் மீண்டும் கும்பல் என்று சொல்லியிருக்கிறார். அது கும்பல் இல்லை. பொது மக்கள் என்று நீங்கள் உணரவேண்டும். ஒரு கிராமத்திலே 300 ஆண்களும், 200 பெண்களும் திரண்டு வருகிறார்கள் என்றால், அது ஏதோ திட்டமிட்டு வருகின்ற கூட்டமல்ல; பொது மக்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர், என்னுடைய அனுமதியில்லாமல் பத்திரிகையைக் காட்டக்கூடாது. இதையெல்லாம் என்னுடைய அனுமதியில்லாமல் நீங்கள் காட்டக்கூடாது. (குறுக்கீடு) அப்படியெல்லாம் இல்லை, (குறுக்கீடு) என்னுடைய அனுமதியை வாங்கிக் கொண்டுதான், இங்கு கொண்டு வந்த பத்திரிகை செய்தியைக் காட்டவேண்டும். (குறுக்கீடு) இப்படியெல்லாம் நீங்கள் பேசக்கூடாது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை செய்தி குறித்து உங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவரே சொல்கிறார். நாங்கள் அந்த விதிமுறையை ஏற்றுக்கொள்கிறோம். ஒத்துக்கொள்கிறோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) போதும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) போதும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) போதும் உட்காருங்கள். நீங்கள் நிறைய பேசிவிட்டீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

## 4. அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி

### தே.மு.தி.க. உறுப்பினர்களை பேரவைப் பணிகளினின்று கூட்டத்தொடர் முழுவதும் தற்காலிகமாக நீக்கி வைத்தல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

[2015 பிப்ரவரி 19

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு தே.மு.தி.க. உறுப்பினர்கள் நடந்துகொண்டதையெல்லாம் நீங்கள் பார்த்தீர்கள். மாண்புமிகு உறுப்பினர்களுடைய தகவலுக்காகச் சொல்கிறேன். எந்த அளவுக்கு அவர்களுடைய அக்கிரமம் இங்கு இருந்தது என்பது மட்டுமல்ல; அவர்களுடைய அராஜகம் வெளியிலும் எந்தளவுக்கு நீடித்திருக்கிறது என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக ஒரு தகவலைச் சொல்லிக்கொள்கிறேன். தே.மு.தி.க.–வைச் சேர்ந்த திரு. சி.எச். சேகர், திரு. க. தினகரன் மற்றும் அவருடைய கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் இன்று சபைக் காவலர்களை வெளியிலே தாக்கி, அவர்கள் காயமடைகிற அளவுக்கு கொலைவெறித் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள் என்பதை இந்தச் சபைக்குத் தெரிவித்து, சபைக்கு வெளியே நடந்திருக்கும் நடவடிக்கைகளுக்கும், சபைக்கு உள்ளே நடந்திருக்கும் நடவடிக்கைகளுக்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுடைய அராஜகம், அக்கிரமம் சட்டமன்றத்திற்குள்ளே மட்டுமல்ல; வெளியிலும் தொடர்ந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டிருப்பீர்கள். அதற்காக அனைத்துக் கட்சிகளும் அதற்குரிய கண்டனத்தைக் கடுமையாகத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–15*

அடுத்தபடியாக முன்னர் முன்மொழிந்த தீர்மானத்திலே ஒரு திருத்தத்தை இந்த நேரத்திலே பதிவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தே.மு.தி.க. உறுப்பினர்களை இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடர் முழுவதும் நீக்கி வைக்க வேண்டும்"

என்று தீர்மானத்தைத் திருத்திக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)



2015 பிப்ரவரி 19] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் திருத்தப்பட்டபடி நிறைவேறியது.

இன்றைக்குக் குழப்பம் விளைவித்த தே.மு.தி.க. உறுப்பினர்களை இந்தக் கூட்டத்தொடர் முடியும்வரை அவை நடவடிக்கைகளிலிருந்து நீக்கிவைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) அவர்கள்மீது எடுத்த நடவடிக்கைக்கு ஆதரவு கொடுத்ததற்கு நன்றி.

## 6. திரு. வி.சி. சந்திரகுமார் உள்ளிட்ட தே.மு.தி.க. உறுப்பினர்கள்மீதான உரிமை மீறல் பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பிவைத்தல்

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தின் நடவடிக்கைகளுக்கும், உறுப்பினர்களுடைய பாதுகாப்பிற்கும், சபையின் கண்ணியத்திற்கும் பொறுப்பேற்றிருக்கக்கூடிய, அரசியல் சாசன சட்டத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற பேரவைத் தலைவரின் இருக்கைக்கு தே.மு.தி.க. உறுப்பினர்கள் வந்து பேரவைத் தலைவரை மிரட்டி, அவரைத் தாக்கும் நோக்கோடு, அவருக்கே இப்படி ஒரு பாதுகாப்பற்ற சூழ்நிலையை உருவாக்கி, அவர் பதவிக்கு அவமதிப்பு ஏற்படுத்தும் வகையில் ஒரு சூழ்நிலையை உருவாக்கியுள்ளனர். மேலும், தே.மு.தி.க. உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் ஆணையையும் மீறி, பேரவை விதிகளை, மரபுகளை துச்சமாகக் கருதி, பேரவைத் தலைவரின் ஆணையைச் செயல்படுத்த முனைந்த பேரவைக் காவலர்களை அச்சுறுத்தியும், அவர்களைத் தாக்கியும், அவர்களது தொப்பிகளைத் தட்டி எறிந்தும், அவர்கள் தங்கள் பணியினைச் செய்ய விடாது தடுக்கும்வகையிலும் செயல்பட்டுள்ளார்கள். மேலும், தேமுதிக–வைச் சேர்ந்த திரு. வி.சி. சந்திரகுமார் மற்றும் அவரோடு சேர்ந்த ஒரு சில தே.மு.தி.க. உறுப்பினர்கள் தொடர்ந்து அவை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்கும் நோக்கில் செயல்பட்டு வருவது கண்டனத்திற்குரிய ஒன்றாகும். எனவே, இவர்களது செயல் அவை உரிமையை மீறிய செயலாகக் கருதப்படுவதால், இப்பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பிரச்சினை குறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக பேரவை விதி 226–ன்கீழ் இப்பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.

## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெறும் விவாதத்தின் தொடர்ச்சியாக திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.

***திருமதி எஸ். கணிதா சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் பேச வாய்ப்பளித்த கழக நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு மக்களின் முதல்வர் எங்கள் பொன்மனத் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி அவருடைய பொற்பாதங்களில் கோடானுகோடி வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வியைக் காத்த கலைமகளே, பள்ளிக் கல்வி காக்க வந்த மலைமகளே, பிளஸ் *2* மாணவர்களுக்கு லேப்டாப், பிளஸ் *1* மாணவர்களுக்கு சைக்கிள், அனைத்து மாணவர்களுக்கும் இலவச பஸ் பாஸ், எல்லாப் பள்ளிகளுக்கும் தர மதிப்பீட்டு முறை, முப்பருவங்களுக்கும் முப்பருவப் புத்தகம், புத்தகச் சுமை குறைக்க எத்தனை பெரிய யுக்தி, ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை, எல்லா மாணவர்களுக்கும் விதவிதமான அறுசுவை மதிய உணவு வாரி வழங்குகின்ற எங்கள் வள்ளல் தாயே!

பிற்பகல் *1–20*

தமிழக மக்கள் இன்புற்றிருக்கவே ஏற்றமிகு திட்டங்களை வாரி வழங்கிய பார் போற்றும் எங்கள் அன்னையே, ஏழையெளிய மக்கள் என்றும் இன்புற்றிருந்திட பசுமை வீடு திட்டம், இல்லத்தரசிகள் இன்புற்று வாழ விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், உழைக்கும் மக்கள் உறங்க மின் விசிறி, திருமண வயதுடைய பெண்களுக்குத் திருமண நிதியுதவியுடன் தாலிக்குத் தங்கம் தரும் தங்கத் தாரகையே, கிராம மக்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக்கொள்ள விலையில்லா ஆடு, கறவை மாடு என அருமையான திட்டங்கள், முடியாத நிலையில் உள்ள முதியோருக்கு உதவித் தொகை, விதவை உதவித் தொகை,



கணவனால் கைவிடப்பட்டோர் உதவித் தொகை, மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகை என பார்த்துப் பார்த்து செய்யும் பார் போற்றும் அன்னையே, அண்டை மாநிலங்கள் பின்பற்றக்கூடிய அளவிற்கு முன்மாதிரியாக மக்களின் ஏழ்மை நிலையைப் போக்கும் மலிவான விலையில் அம்மா உணவகம், அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா மருந்தகம், அம்மா சிமென்ட், அம்மா காய்கறி விற்பனை அங்காடி என எல்லையில்லா திட்டங்களை வாரி வழங்கிய எங்கள் பாரி வள்ளலே, அனைத்துத் தரப்பு மக்களும் வளமும், நலமும் பெற வகை வகையாய் திட்டங்கள் வழங்கி வரும் எங்கள் தாயே, இங்கு ஏழ்மையின்றி எல்லோரும் வாழ இனிய தமிழகத்தை உருவாக்க உழைத்துக்கொண்டிருக்கும் எங்கள் உத்தமத் தாயே, தமிழகத்தைத் தன்னிறைவு பெறச்செய்ய தன்னலமற்று உழைக்கும் உங்களின் எல்லையில்லா உழைப்பால் மக்கள் இன்புற மக்களைக் காக்கும் எங்கள் மகராசியே, அந்திமாலையானதால், ஆதவன் மறைந்து போனதால், ஜெயம் ஜெயம் என்று சொல்லி இரட்டை இலை படபடக்க, வெற்றிக்கொடி பளபளக்க, கோட்டையிலே தோன்றினாராம் நம் குலம் காக்கும் அன்னை. தீய சக்தியின் சூழ்ச்சியினால் இந்த அவையில் மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் இல்லையென்றாலும், எதிரிகளின் சூழ்ச்சிகளை வீழ்த்தி மீண்டும் இந்த அவையில் முதலமைச்சராக அமரும் காட்சியைக் காண ஏழரைக் கோடி தமிழக மக்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவையில் கூறிக்கொள்வதில் பெருமைகொள்கிறேன். அதற்குச் சான்றாக நடந்து முடிந்த திருவரங்கம் சட்டமன்றத் தேர்தலில் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் களம் இறங்காமலேயே, களம் இறங்கிய வேட்பாளர்களை வென்றார். கடந்த மூன்றரை ஆண்டுகளில் மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் தொகுதிக்குச் செய்த எண்ணற்ற திட்டங்கள் மற்றும் தமிழக மக்களுக்கு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் அரசு செய்த சாதனைகளுக்குக் கிடைத்த வெற்றி இது. மக்கள் சக்தியின் மாண்புகளை மதிக்காமல் ஜனநாயகத்தினை இழித்துப் பேசும் எதிர்க்கட்சிகளும், மற்ற எதிர்க்கட்சிகளும் வரவிருக்கின்ற *2016* ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் மூடுவிழா நடத்துவதற்கு நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலிலும், தற்போது நடைபெற்ற திருவரங்கம் இடைத் தேர்தலிலும் பெற்ற வெற்றியே சான்றாக அமைந்தது என்பதைக் கூறிக்கொள்வதில் பெருமைகொள்கிறேன்.

[திருமதி எஸ். கணிதா சம்பத்][2015 பிப்ரவரி 19

மேலும், பல கட்சிகள் இந்த ஆளுநர் உரையில் புதிய திட்டங்கள் எதுவும் இல்லை என்று குறை கூறுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் பொறுப்பேற்ற நாள் முதல், "மக்களால் நான், மக்களுக்காக நான்" என்ற குறிக்கோளோடு பல திட்டங்களை அறிவித்து, அதனைச் செயல்படுத்தி, அதில் வெற்றியும் கண்டுள்ளார். அதிலும் குறிப்பாக, கல்விக்காக அவர் செய்த சாதனையால் இதுவரை தமிழக வரலாற்றிலேயே முதல்முறையாக அரசு பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு படித்த மாணவர்கள் முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளார்கள் என்பதை அறிந்தோம். மேலும், கிராமப்புற மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள தன்னிச்சையாக தங்கள் வருமானத்தினை உயர்த்திக்கொள்ள பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார் மக்களின் முதல்வர் என்று ஆளுநர் உரையில் தெளிவாகக் கூறியுள்ளதைக் கண்டு பொதுமக்கள் பெருமிதப்படுகிறார்கள். நடுநிலையாளர்கள் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களை வாழ்த்துகிறார்கள். "தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்; நம்முடைய அம்மா அவர்கள் தினையை விதைத்தார்கள்; தினையை அறுத்தார்கள். ஆனால், வினையை விதைத்தவர்கள், வினையை அறுத்துக்கொண்டே இருப்பார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

கடந்த மூன்றரை ஆண்டுகளிலே மதுராந்தகம் தொகுதியிலே 50 ஆண்டுகளாக செய்யாத சாதனைகளையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் செய்து கொடுத்திருக்கிறார்கள். எனது மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியிலே மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் மிகவும் பின்தங்கிய மக்கள் வாழும் பகுதியின் நெடுநாள் கோரிக்கையான தண்டரைப்பேட்டை மேம்பாலம், கத்திரிச்சேரி மேம்பாலம், பழமையான கட்டடத்தில் இயங்கி வந்த வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம், அமர்வு நீதிமன்றம், நீதிபதிகள் குடியிருப்பு வளாகம் மற்றும் அரசு அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்களையும் அமைத்துத் தந்தார்கள். ஜமீன்எண்டத்தூரில் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதி கொண்டதாக விரிவுபடுத்திக் கொடுத்துள்ளார்கள். அதேபோல், அச்சரப்பாக்கம் ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். நெல்வாய் தரைப்பாலம் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.



2015 பிப்ரவரி 19] [திருமதி எஸ். கணிதா சம்பத்]

அதேபோல், புதிய பேருந்து வழித்தடங்கள் மற்றும் எண்ணற்ற திட்டங்களை ஒரு தொகுதியிலேயே செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், தமிழ்நாடு முழுவதும் உள்ள 234 தொகுதிகளிலும் நிறைவேற்றிய திட்டங்களினால் அம்மா அவர்கள்தான் அடுத்த முதல்வராக வருவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் இவர்களுக்கு ஓட்டே போடமாட்டார்கள் என்று என்னென்னவோ பேசினார்கள்; என்னென்னவோ செய்தார்கள். ஆனால், இது நடக்கவே நடக்காது. மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் மக்களுக்காகவே வாழ்ந்து, மக்களுக்காகவே பல நல்ல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தியிருக்கிறார்கள். வருகின்ற 24 ஆம் தேதியன்று பிறந்த நாள் காணவிருக்கும் நம்முடைய மக்களின் முதலமைச்சர் அம்மா அவர்களை வாழ்த்த வயதில்லை என்றாலும், நோய் நொடியின்றி வாழவேண்டும் என்று ஆண்டவனிடத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பினைத் தந்த மக்களின் முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

***திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிலம் கையகப்படுத்துதல் சட்டம், 2013–ல், முப்போகம் விளையும் நிலங்களுக்கு விதிவிலக்கு மற்றும் 80 சதவீத விவசாயிகளின் ஒப்புதல் இல்லாமல் நிலத்தைக் கையகப்படுத்த முடியாது போன்ற அம்சங்கள் இருந்தன. இந்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும்போது, அன்றைக்கு எதிர்க்கட்சியாக இருந்த பாரதிய ஜனதா கட்சி ஆதரித்தது. தற்போது இந்தச் சட்டத்தை அவசரச் சட்டத்தின்மூலம் திருத்தியுள்ளது. இதில் விவசாயிகளுக்குச் சொந்தமான நிலத்தை, அவர்களின் ஒப்புதல் இல்லாமல் அரசால் கையகப்படுத்த முடியும் என்ற திருத்தம் உள்பட, விவசாயிகளைப் பாதிக்கும் பல அம்சங்கள் உள்ளன. விவசாயிகளின் நில உரிமையைப் பறிக்கும் இந்தத் திருத்தச் சட்டத்தை மத்திய அரசு

திரும்பப் பெறவேண்டும். இச்சட்டத்தைத் தமிழகத்தில் அமல்படுத்தக்கூடாது. நாடாளுமன்றத்தில் இச்சட்டம் குறித்து வாக்கெடுப்பு நடக்கும்போது, தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இச்சட்டத்தை எதிர்த்து வாக்களிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டெல்டா மாவட்டங்களில் கடல் நீர் உட்புகுவதைத் தடுக்க ரூபாய் 1,560 கோடியில் தடுப்பணைகள் கட்டும் அறிவிப்பு எந்த நிலையில் உள்ளது என்று டெல்டா மாவட்ட விவசாயிகள் கேட்கின்றார்கள். ஆகவே, அதுகுறித்து அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**பொங்கல் பண்டிகைக்கான இலவசப் பொருள்கள் மற்றும் 100 ரூபாய் கொடுக்கவில்லை. விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின் விசிறி இன்னும் 90 இலட்சம் பேர்களுக்கு வழங்கப்படவில்லை என்று செய்தி ஏடுகள் கூறுகின்றன. தொகுதிப் பக்கம் சென்றாலே, மக்கள் மிக்சி, கிரைண்டர், மின் விசிறி எப்போது கிடைக்கும் என்கின்ற கேள்வியைத்தான் கேட்கின்றார்கள். உடனடியாக அவற்றை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்குகின்ற திட்டம், இதுவரை உலகத்தில் எந்த ஒரு அரசியல் தலைவரும், எந்த ஒரு முதலமைச்சரும் செய்யாத சாதனை. ஒரு குடும்பத்திற்கு 20 கிலோ அரிசி என்று ஒரு கோடியே 84 இலட்சம் குடும்பங்களுக்கும் விலையில்லாமல் வழங்குகின்றார்கள். ** எனவே பொத்தாம்பொதுவாக சொல்லியிருப்பதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய திட்டங்களிலே தாய்மார்களுடைய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பணிச் சுமையைச் குறைக்கக்கூடிய விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின் விசிறி வழங்கும் திட்டத்தின்கீழ் சிறப்புத் திட்ட அமலாக்கத் துறையின் மூலமாக கொள்முதல் செய்து, வருவாய்த் துறையின் மூலமாக பயனாளிகளுடைய வீடுகளிலே, அவர்களுடைய திருக்கரங்களிலே ஒப்படைக்கின்ற அந்த வரலாற்றுச் சாதனைகளிலே 1.85 கோடி மகளிருக்கு 5 ஆண்டுகளில் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தகுதியுடைய பயனாளிகள் அனைவருக்கும் மேற்குறிப்பிட்ட வீட்டு உபயோக சாதனங்கள் 5 ஆண்டுகளிலே படிப்படியாக வழங்கப்படவிருக்கின்றன.

கடந்த 3 ஆண்டுகளில் இலக்கின்படி 95 இலட்சம் வீட்டு உபயோகப் பொருட்களின் தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது. நடப்பு 2014–2015 ஆம் ஆண்டிற்கு 45 இலட்சம் பயனாளிகள் பயன்பெற இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்மூலம் அதற்கான கொள்முதல் மேற்கொள்ளப்பட்டு, தகுதியுடைய பயனாளிகளுக்கு வழங்குவதற்கு இதுவரை 1,18,900 சாதனங்கள் மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. தொடர்ந்து படிப்படியாக புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை கடந்து, அனைவருக்கும்—ஒரு கோடியே 85 இலட்சம் பேர்களுக்கும் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். அதன்மீது என்ன clarification? (குறுக்கீடு) அவர் பேசுவார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இப்போது நேரம் 1–30 ஆகிவிட்டது. அதற்கெல்லாம் அனுமதி இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்குவதும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. அதை உடன் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டெல்டா மாவட்டங்களை கடுமையாகப் பாதிக்கக்கூடிய மீத்தேன் திட்டத்தை முழுவதுமாய் கைவிட மாநில அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வீ.பி. நாகைமாலி] [2015 பிப்ரவரி 19

புதிய குடும்ப அட்டைகளுக்கு மனு செய்து ஏராளமானவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்குவது குறித்து அரசு முடிவு எடுத்துள்ளபடி இத்திட்டத்தின்கீழ், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கும், அரசு மற்றும் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல் தொழில்நுட்பக் கல்லூரிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கும் விலையில்லா மடிக்கணினி இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு வழங்கப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையிலே, மடிக்கணினி கொள்முதல் செய்வதற்கான பணி தமிழ்நாடு எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்கள்மூலம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் இத்திட்டத்தின்கீழ் 21 இலட்சத்து 15 ஆயிரத்து 416 தகுதியுடைய அனைத்து மாணவர்களுக்கும் மடிக்கணினி வழங்கிய ஒரே அரசு உலகத்திலேயே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்ற ஆண்டுகளில் மீதமுள்ள மடிக்கணினிகள் நடப்பாண்டில் சென்னையிலே 24 ஆயிரமும், திருச்சியிலே 23 ஆயிரமும் மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு, 47 ஆயிரத்து 144 மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2014–2015 ஆம் ஆண்டிற்கு 5.50 இலட்சம் மடிக்கணினிகள் கொள்முதல் செய்ய எல்காட் நிறுவனத்திற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தற்போது கொள்முதல் பணி நடைபெற்று வருகிறது. ஆகவே, தகுதியுள்ள மாணவர்களுக்கெல்லாம் மடிக்கணினிகள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு வழங்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2015 பிப்ரவரி 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** புதிய குடும்ப அட்டைகளுக்கு மனு செய்து ஏராளமானவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். உடனடியாக இவர்களுக்குக் குடும்ப அட்டைகள் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றிலிருந்து மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு இதுசம்பந்தமாக மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறுகிற அரசு உரிய பதிலை வழங்கி வருகிறது. இருந்தாலும், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் உடனடியாக குடும்ப அட்டைகள் வழங்கவேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். 60 நாட்களுக்குள்ளாக குடும்ப அட்டைகள் நிச்சயமாக வழங்கப்படும் என்கிற உத்தரவாதத்தை நான் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். உரிய ஆவணங்களோடு மனு செய்கிற அத்தனை பேருக்கும் 60 நாட்களுக்குள் நிச்சயமாக உரியவர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்பதை மீண்டும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 60 நாட்களுக்குள் வழங்கப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால், மாதக் கணக்கிலே குடும்ப அட்டைகள் பெறாமல் இருக்கிறார்கள். தொகுதிக்குச் செல்கிறபோது எல்லோரும் கேட்கிறார்கள். இது மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது என்பதையும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

[2015 பிப்ரவரி 19

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகளுடைய தேவைகள் அதிகரித்திருக்கின்றன. குடும்ப அட்டை வைத்திருக்கிறவர்களுக்கு மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு சலுகைகளை வழங்கிக் கொண்டிருப்பதனால், ஒரே குடும்பத்தில் இருக்கிற 2, 3 பேர் மனு செய்கிற சூழ்நிலை இருக்கிறது. எனவேதான், எல்லோரும் மனு செய்கிறார்கள். ஒரு குடும்ப அட்டை பெறவேண்டுமென்று சொன்னால், அவர்களுக்கு தனி சமையல் அறை வேண்டும். இரண்டு சமையல் அறைகள் இருந்தால்தான் அந்த வீட்டில் இரண்டு குடும்ப அட்டை கொடுக்க முடியும். திருமணம் ஆனவுடன், அவர்களுக்குக், குடும்ப அட்டை கொடுத்துவிட முடியாது. ஒரே வீட்டில் இருக்கிறவர்கள் திருமணம் ஆன உடனேயே மனு செய்துவிடுகிறார்கள். அதனால்தான் இந்தமாதிரி பிரச்சினை வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்கிறேன். 1–6–2011 முதல் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து, 31–1–2015 வரை பெறப்பட்ட விண்ணப்பங்கள் 16 இலட்சத்து 32 ஆயிரத்து 565. இதுவரை விசாரணை செய்யப்பட்டவை 15 இலட்சத்து 72 ஆயிரத்து 464. விசாரணையில் உள்ள மனுக்கள் 60 ஆயிரத்து 101. விசாரணைக்குப் பின் பரிந்துரை செய்யப்பட்ட மனுக்கள் 12 இலட்சத்து 50 ஆயிரத்து 885. இதில் வழங்கப்பட்ட குடும்ப அட்டைகள் 10 இலட்சத்து 93 ஆயிரத்து 484. அச்சிடப்பட்டு வழங்கப்படும் நிலையில் உள்ளவை 1 இலட்சத்து 57 ஆயிரத்து 401. தகுதியின்மை, ஆவணங்கள் இல்லாமை ஆகிய காரணங்களினால் தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்கள் 3 இலட்சத்து 21 ஆயிரத்து 579. எனவே, உரிய ஆவணங்கள், சரியான ஆவணங்கள் வருகிறபட்சத்தில், குடும்ப அட்டைகள் உரியவர்கள் அனைவருக்கும் வழங்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.



2015 பிப்ரவரி 19]

**திரு. வீ.பி. நாகைமாலி:** டெங்கு, பன்றிக் காய்ச்சல் போன்ற நோய்கள் மக்களைப் பாதிக்காமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும். சுகாதாரத் துறை இதில் கூடுதல் கவனம் செலுத்த முடுக்கிவிடப்படவேண்டும். டெங்கு காய்ச்சலைக் கண்டறிய தமிழகம் முழுவதும் 60 ‘எலிசா’ பரிசோதனை மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அரசு கூறுகிறது. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ‘எலிசா’ பரிசோதனை மையங்களை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பயிர்க் காப்பீட்டு இழப்பீடுகளுக்கு தமிழக அரசு செலுத்தவேண்டிய ஈவுத் தொகை செலுத்தப்படாத காரணத்தால். .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே டெங்கு காய்ச்சல் முழுமையான கட்டுப்பாட்டில் இருக்கிறது. மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு, இன்றைக்குத் தமிழ்நாடு அரசு எடுத்திருக்கக்கூடிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் மூலமாகத்தான், மற்ற மாநிலங்களையெல்லாம் ஒப்பிடுகின்றபோது, டெங்கு காய்ச்சல் முழுக் கட்டுப்பாட்டில் இருக்கிறது; இறப்பு தவிர்க்கப்பட்டிருக்கிறது. ‘எலிசா’ பரிசோதனை மையம் என்பது மாவட்ட தலைமை மருத்துவமனையிலே இருக்கிறது. ஏற்கெனவே 31 இடங்களில் இருந்தது; மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு, தற்போது 64 இடங்களிலே ‘எலிசா’ பரிசோதனை மையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலே ‘எலிசா’ பரிசோதனை மையங்கள் அமைக்கவேண்டிய சூழல் இல்லை. ஏனென்று சொன்னால், தேவைப்படுகின்ற மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும், தேவைப்படுகின்ற தாலுகா மற்றும் தாலுகா அல்லாத மருத்துவமனைகளிலும் அந்தச் சிறப்புப் பரிசோதனை மையங்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2015 பிப்ரவரி 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய மக்கள் தலைமை மருத்துவமனைகளுக்கு வந்து செல்வதிலே சிரமம் இருக்கிறது. ஆகவே, எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் அந்தப் பரிசோதனை கருவிகள் இருந்தால், கிராமப்புறங்களிலே இருக்கிற மக்கள் உடனடியாக பரிசோதனை செய்துகொள்ள இயலும் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பயிர்க் காப்பீட்டு இழப்பீடுகளுக்குத் தமிழக அரசு செலுத்த வேண்டிய ஈவுத் தொகை செலுத்தப்படாத காரணத்தால், விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய நிவாரணம் கிடைக்கப் பெறவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை அவைக்குத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார். தமிழக அரசின் சார்பில் செலுத்தப்படவேண்டிய காப்பீட்டுத் தொகையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செலுத்தியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** ஆனால், விவசாயிகளுக்கு இன்னும் கிடைக்கவில்லை என்கிற விவரத்தைத்தான் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு மத்திய அரசுதான் காரணம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.



2015 பிப்ரவரி 19]

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாநில அரசும் விரைந்து அதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாநில அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு, முனைப்போடு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** ஆசிரியர் தகுதித் தேர்வில் இட ஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு வழங்கப்பட்ட மதிப்பெண் தளர்வை, மதுரை உயர் நீதிமன்ற பெஞ்ச் இரத்து செய்துள்ளது. சென்னை பெஞ்ச் சரி என்று சொல்லியிருக்கிறது. இந்தச் சூழலில் அரசு மேல்முறையீடு செய்துள்ளதா? மதுரையில் மறு ஆய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது, அதன் நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், Weightage முறை குறித்து தொடரும் நீதிமன்ற வழக்குகளை முடிவுக்குக் கொண்டுவர அரசு என்ன முயற்சி மேற்கொண்டுள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

தஞ்சாவூர், நாகப்பட்டினம் புறவழிச்சாலை அமைக்கும் பணி ஆண்டுக்கணக்கில் அப்படியே கிடக்கிறது. NHAI அலுவலகத்திற்குச் சென்று இதுகுறித்து கேட்டால், மாநில அரசினுடைய N.O.C. இன்னும் கிடைக்கவில்லை; ஆகவே, அந்தப் பணி தடைபடுகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, இதுகுறித்த உண்மையான விவரம் எங்களுக்கே புரியவில்லை. ஆனால், அந்தப் பணி அப்படியே கிடக்கிறது. இதுவொரு மிகப் பெரிய பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2015 பிப்ரவரி 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ.பி. நாகைமாலி, உரையை முடியுங்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** போக்குவரத்துத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு தொடர்பான பேச்சுவார்த்தை வருகிற 2 ஆம் தேதி நடைபெறுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள்; நல்லது. அதை விரைந்து முடிக்க வேண்டுகிறேன்.

அதேமாதிரி, பாரம்பரியமான மீன் பிடிப்புப் பகுதிகளில் அமைதியாக மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் நமது மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து தாக்கப்படுவதும், கைது செய்யப்படுவதும் தொடர் கதையாய் நீடிக்கிறது. நமது மீனவர்கள் தொடர்ந்து சந்தித்து வரும் இப்பிரச்சினைக்கு, இந்திய அரசு இராஜ்ஜிய ரீதியில் நிரந்தர தீர்வுகாண நம்முடைய அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1—40

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுடைய பிரச்சினையாக இருந்தாலும் சரி, மீனவ மக்களுடைய பிரச்சினையாக இருந்தாலும் சரி, மிகவும் அக்கறை எடுத்து செயல்படுத்துகிற ஓர் அரசு, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. முன்பெல்லாம் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மீனவர்கள் சுடப்பட்டதுண்டு. 12 மீனவர்கள் இலங்கை கடற்படையினால் சுடப்பட்ட வரலாறு உண்டு. ஆனால், இந்த 3½ ஆண்டுக் கால மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே எந்த ஒரு மீனவரும் இதுவரை சுடப்பட்டதில்லை. மாறாக இதுவரை இல்லாத சாதனையாக, இன்றைக்கு வரலாறு காணாத அளவிற்கு அவர்களுடைய 81 படகுகளை விடுவிப்பதற்கும், அவற்றை அங்கிருந்து கொண்டு வருவதற்கான எரிபொருள் செலவு, அவர்களுக்கான போக்குவரத்துச் செலவு, பழுதுபார்ப்புக்கான செலவுகளையும் வழங்க உத்தரவிட்டிருப்பது மாண்புமிகு மக்களின்



2015 பிப்ரவரி 19] [திரு. கே.ஏ. ஜெயபால்]

முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மீனவர்களுடைய பிரச்சினையை முடிப்பதற்காக வருகிற மார்ச் மாதம் 5 ஆம் தேதி இலங்கை மீனவர்களுக்கும், தமிழக மீனவர்களுக்குமிடையே பேச்சுவார்த்தைக்கு முயற்சி செய்தது மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) உரையை முடித்துவிட்டீர்கள், பிறகு ஏன் திரும்பவும் எழுந்திருக்கிறீர்கள்?

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதவை, முதியோர், மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்டோருக்கு வழங்கப்படுகிற உதவித் தொகை சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட விளக்கத்தைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். இது ஒரு மிகப் பெரிய பிரச்சினையாக தொகுதிகளிலே இருக்கிறது. ஆகவே, நானும் என்னுடைய கருத்தைப் பதிவு செய்ய விரும்புகிறேன். முதியோர், விதவை, மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்டோருக்கு வழங்கப்படுகிற உதவித் தொகை இலட்சக்கணக்கில் நிலுவையில் இருப்பதாக அறிகிறோம். ஆகவே, அதை உடனடியாக வழங்க வேண்டும். புதியதாக மனு செய்யக்கூடியவர்களுக்கும் விரைந்து உதவித் தொகை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2015 ஆம் ஆண்டு ஆளுநர் அளித்த உரையின்மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கருத்துகளைக் கூற அனுமதி வழங்கிய தங்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேதகு ஆளுநர் அவர்களது உரையில், தமிழுக்காக, தமிழ் வளர்ச்சிக்காக இந்த அரசு பல திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளார்கள், அதை வரவேற்கிறோம். இன்று தமிழ்த்

[திரு. கே. உலகநாதன்] [2015 பிப்ரவரி 19

தாத்தா டாக்டர் உ.வே.சா. அவர்களின் 161–வது பிறந்த நாள். அவர் தமிழுக்காக, தமிழ் மொழி வளர்ச்சிக்காக பெரும் பங்காற்றியவர். இவரது நினைவைப் போற்றுகின்ற வகையில், இவர் வாழ்ந்த வீட்டை நினைவுச் சின்னமாக தமிழக அரசு அறிவித்து, அதைச் செயல்படுத்தி அவருக்குப் பெருமை சேர்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு காவேரி டெல்டா மாவட்டத்தில் விட்டு விட்டு மழை பெய்தாலும், மேட்டூர் அணையிலிருந்து சரியான நேரத்தில் தண்ணீர் வராத காரணத்தினால், சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு மகசூல் அளவு மிகக் குறைந்துள்ளது. ஆகவே, தமிழக அரசு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காவேரி நதிநீர்ப் பிரச்சினையில் தமிழகத்திற்கு மத்திய அரசு தொடர்ந்து துரோகம் இழைத்து வருவதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 1990 ஆம் ஆண்டு காவேரி நடுவர் மன்றம் அமைக்கப்பட்டு, 1991 ஜூன் 25–ல் இடைக்காலத் தீர்ப்பை வழங்கியது. மத்திய அரசு உடனடியாக அதை அரசிதழில் வெளியிடாமல், காலங்கடத்தி ஆறு மாதத்திற்குப் பின்னரே வெளியிட்டது. இறுதித் தீர்ப்பு 5–2–2007 ஆம் நாளன்று வழங்கப்பட்டது. இந்தத் தீர்ப்பினை மத்திய அரசு அரசிதழில் வெளியிடாமல், கர்நாடக அரசுக்கு ஆதரவாக 6 ஆண்டுகள் தாமதித்தது. தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டதன் காரணமாக, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் காரணமாக அரசிதழில் வெளியிட்டது. ஒவ்வொரு முறையும் உச்ச நீதிமன்றத்தை நாடியே நமக்குரிய உரிமைகளைப் பெற வேண்டிய நிலை உள்ளது. காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை அமல்படுத்திடவும், காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவையும் அமைக்காமல் மத்திய அரசு காலம் தாழ்த்துவது மிகுந்த கவலையளிக்கிறது. நடுவண் அரசு நடுநிலையோடு நடக்கவில்லை என்பதை நம்மால் உணர முடிகிறது. காவேரி மேலாண்மை வாரியத்தையும், முறைப்படுத்தும் குழுவையும் மத்திய அரசு உடன் அமைத்திடவேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தி, பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் தீர்மானத்தை முன்மொழிந்து ஒருமனதாக நிறைவேற்ற வேண்டியது அவசியம் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.



2015 பிப்ரவரி 19] [திரு. கே. உலகநாதன்]

தமிழ்நாட்டின் ஒப்புதலின்றி மேகதாது என்ற இடத்தின் அருகே காவேரி ஆற்றின் குறுக்கே அணை கட்டி தமிழ்நாட்டிற்கு ஒரு சொட்டு தண்ணீரைக்கூட கிடைக்காமல் செய்து, காவேரி பாசன மாவட்டங்களை பாலைவனமாக்க கர்நாடக அரசு முயல்வதை மத்திய அமைச்சர் ஆதரித்தது மட்டுமல்லாமல், மத்திய அரசு அனுமதிக்குத் தடையாக இருக்காது; அனுமதி வழங்கும் என்று கூறியது குறித்து இதுநாள்வரை பாரதப் பிரதமர் மௌனம் சாதிப்பது வியப்பளிப்பதுடன், தேசிய ஒருமைப்பாடு கேள்விக்குறியாக உள்ளது என்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனுவை தாக்கல் செய்துள்ளதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

மத்திய அரசு நிலம் கையகப்படுத்தும் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளது. மத்திய அரசின் இச்செயல், விவசாயிகளிடம் உள்ள நிலங்களைப் பறிக்கும் செயல் ஆகும். இத்திட்டத்தினைத் தமிழ்நாட்டில் அமல்படுத்தக்கூடாது என்று வேண்டுகிறேன்.

பிற்பகல் 1–45

நாட்டிலேயே மகளிர் சுய உதவிக் குழுக்கள் தமிழ்நாட்டில்தான் அதிகமாக உள்ளன. மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் மகளிர் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. இதை மேலும் வளப்படுத்துவதற்கு மாறாக, இதைச் சீர்குலைக்க மத்திய அரசு முயல்வதை தமிழகம் அனுமதிக்கக்கூடாது. மகாத்மா காந்தி வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்மூலம் கிராம மக்களுக்கு ஆண்டுக்கு ஒரு குடும்பத்திற்கு 100 நாள் வேலை கிடைத்ததோடு, அது கிராமப்புற அபிவிருத்திக்குப் பயன்பட்டு வந்தது. இதை தற்போது மத்திய பி.ஜே.பி. அரசு முற்றாக நிராகரிக்கும் முன்னோட்டமாக தமிழ்நாட்டில் 98 வட்டார ஊராட்சிகளில் மட்டுமே அமல்படுத்த அனுமதியளித்துள்ளதை ஏற்க இயலாது. மாநிலம் முழுவதும் அனைத்து வட்டார ஊராட்சிகளிலும் அமல்படுத்திடவும், வேலை நாட்களை 200 ஆக உயர்த்தவும், விலைவாசி உயர்வைக் கருத்தில்கொண்டு தின ஊதியம் ரூபாய் 400 என உயர்த்தி வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கரும்புக்கான விலையை அரசு நிர்ணயித்தது. அது போதுமானதாக இல்லை என விவசாயிகள் போராடி வரும் நிலையில், அரசு நிர்ணயித்த விலையைக்கூட தனியார் ஆலைகள் தரவில்லை.

[2015 பிப்ரவரி 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். மத்திய அரசின் 16–வது மக்களவை அமைந்தபோது, நமக்கு வழங்கவேண்டிய நிதி சற்று காலதாமதமானது உண்மை. ஆனால், மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்தியிலே எந்தத் திட்டத்தை அறிவித்தாலும், அது மாநிலத்திற்கு நல்லது என்றால் சிறப்பான முறையிலே செயல்படுத்துவார்கள். இன்றைக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திலே, இந்தியாவிலேயே, தமிழகம்தான் அதிகமான மனித சக்தியை உருவாக்கி முதல் இடத்தில் இருக்கிறது. இதற்குக் காரணம் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நடவடிக்கைகள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசு நிதியை வழங்குவதற்குக் காலதாமதப்படுத்தியபோது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில், ஊரக வளர்ச்சித் துறையின் செயலாளர் மற்றும் ஆணையர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தியது மட்டுமல்ல, திருவனந்தபுரத்தில் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. பிரேந்தர் சிங் அவர்கள் வந்தபோது, அம்மா அவர்களின் அனுமதியோடு நானும் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு அப்போதும் வலியுறுத்தினோம். ஆகவே, தொடர்ந்து நிதி வந்துகொண்டிருக்கிறது. இடையிலே தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கான பணம் வருவது தாமதமானபோது, தமிழ்நாட்டில் நம்முடைய அம்மா அவர்களின் அரசால் ரூபாய் 230 கோடி வழங்கப்பட்டு, ஊதியம் கொடுக்கப்பட்டது. இடைப்பட்ட காலங்களில், சில மாவட்டங்களில் மழை அதிகமாக பெய்தபோதும், மத்தியில் புதிய அரசாங்கம் அமைந்தபோதும், தொழிலாளர்கள் எண்ணிக்கை கொஞ்சம் குறைந்தது. ஆனால், இன்றைக்கு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையால் சரி செய்யப்பட்டு, தற்போது தமிழகத்திலே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில், தொழிலாளர்களுக்கு ஊதிய



2015 பிப்ரவரி 19] [திரு. எஸ்.பி. வேலுமணி]

நிலுவையின்றி, முழுமையான அளவில் தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருவதோடு, மனிதசக்தி நாட்கள் உருவாக்கத்தில் தமிழகம் தொடர்ந்து முதலிடம் வகித்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உலகநாதன் அவர்கள், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் ஒழுங்குமுறைக் குழு அமைக்க வேண்டுமென்ற தனது கருத்தை இங்கே பதிய வைத்திருக்கின்றார்கள். காவேரி நடுவர் மன்றத்தினுடைய இறுதி ஆணை வெளியிட்டபின், 6 ஆண்டுகளுக்குப் பின்னால், அந்த ஆணையை அரசிதழில் வெளியிட வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டப் போராட்டம் நடத்தி, உச்ச நீதிமன்றம் வரை சென்று அரசாணை பெற்றுத் தந்தார்கள் என்பதுதான் காவேரி நடுவர் மன்றத்தினுடைய வரலாறு.

19–2–2013 அன்று மத்திய அரசிதழில் இறுதி ஆணை வெளியிடப்பட்டபின் நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையின் பரிந்துரைப்படி, காவேரி நீர் மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் ஒழுங்குமுறைக் குழுவை உடனடியாக அமைக்கும்படி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாரதப் பிரதமருக்கு 22–2–2013 மற்றும் 11–3–2013 ஆகிய நாட்களில் எழுதினார்கள்.

பிற்பகல் 1–50

மத்திய அரசு காவேரி நீர் மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் ஒழுங்குமுறைக் குழுவை அமைக்காததால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இவற்றை உடனடியாக அமைக்கும்படி தமிழக அரசின் சார்பாக ஓர் இடைக்கால மனு 18–3–2013 அன்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இம்மனு, 10–5–2013 அன்று விசாரணைக்கு

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 பிப்ரவரி 19

வந்தது. அப்பொழுது, 19–2–2013 நாளிட்ட மத்திய அரசிதழ் அறிவிப்பின்மீது தக்க மேல்நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்ற மத்திய அரசு வழக்கறிஞரின் கூற்றை பதிவு செய்து, நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையைச் செயல்படுத்த ஒரு தற்காலிக ஏற்பாடாக, மத்திய நீர்வளத் துறைச் செயலரின் தலைமையில் மாநில தலைமைச் செயலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு காவேரி மேற்பார்வைக் குழு ஒன்றை அமைக்க உச்ச நீதிமன்றம் 10–5–2013 அன்று ஆணையிட்டது.

காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் ஒழுங்குமுறைக் குழுவை உடனே அமைக்க மத்திய நீர்வளத் துறைக்கு ஆணை வழங்கும்படி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாரதப் பிரதமருக்கு மீண்டும் 17–5–2013 அன்று கடிதம் எழுதினார்கள். இதைத் தொடர்ந்து 2–9–2013 மற்றும் 3–9–2013 இல் கடிதங்கள் எழுதப்பட்டன.

உச்ச நீதிமன்றத்தின் ஆணைப்படி மத்திய அரசு 22–5–2013 அன்று ஓர் இடைக்கால ஏற்பாடாக காவேரி மேற்பார்வைக் குழுவை அமைத்து, மத்திய அரசிதழில் அறிக்கை வெளியிட்டது. இக்குழுவின் கூட்டங்கள் இதுவரையில் 4 முறை நடைபெற்றுள்ளன. இக்கூட்டங்களில் நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையைச் செவ்வனே செயல்படுத்த இக்குழு எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்று கருதியதால், ஒரு நிரந்தர ஏற்பாடாக காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக மத்திய அரசு அமைக்க உத்தரவு வழங்க வேண்டி, உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு ஓர் இடைக்கால மனுவினை 11–11–2013 அன்று தாக்கல் செய்தது. இம்மனுவை மேல்முறையீட்டு மனுக்களுடன் சேர்த்து விசாரிக்கலாம் என உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது. இது கடந்த காலத்தினுடைய வரலாறு. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள் இங்கே சட்டமன்றத்தில் ஒரு தனித் தீர்மானம் நிறைவேற்றவேண்டும் என்ற கோரிக்கையை வைத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று 5–12–2014 அன்று பின்வரும் அரசினர் தனித் தீர்மானம் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதனை நான் இங்கே நினைவுகூர விரும்புகிறேன். அந்தத் தீர்மானத்தின் சுருக்கம் வருமாறு:



2015 பிப்ரவரி 19] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

“காவேரி நடுவர் மன்றத்தின் 5–2–2007 ஆம் நாளிட்ட இறுதி ஆணை, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெரும் முயற்சியால் 19–2–2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டபோதிலும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகள் இதுவரை அமைக்கப்படவில்லை. எனவே, காவேரியில் தமிழகத்திற்கு உரிய நீர் இந்த இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி, மாதாந்திர வாரியாகப் பெறுவதற்கு ஏதுவாக, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக மத்திய அரசு அமைக்க வேண்டும்.”

இதன் தொடர்ச்சியாக 12–12–2014 அன்று பாரதப் பிரதமருக்கு அனுப்பிய நேர்முகக் கடிதத்தில் தமிழக சட்டமன்றத்தின் தீர்மானத்தை அனுப்பி, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக மத்திய அரசு அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து தமிழக தலைமைச் செயலர், மத்திய நீர்வளத் துறைச் செயலருக்கு இவ்விரு அமைப்புகளையும் உடனடியாக அமைக்கக் கோரி 10–2–2015 அன்று கடிதம் எழுதியுள்ளார்கள்.

இவ்வழக்கை உச்ச நீதிமன்றத்தில் விரைவில் எடுத்துக்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி தமிழ்நாட்டின் மூத்த வழக்கறிஞர்கள் ஆய்வு செய்து வருகின்றார்கள் என்பதனைத் தெரிவித்து, தொடர் நிகழ்வாக இந்தப் பிரச்சினை குறித்து மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதனை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

[2015 பிப்ரவரி 19

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்புக்கான விலையை அரசு நிர்ணயித்தது போதுமானதாக இல்லை என்று விவசாயிகள் போராடிவரும் நிலையில், அரசு அறிவித்த விலையைக்கூட தனியார் ஆலைகள் கோடிக்கணக்கில் பாக்கி வைத்துள்ளன. அதனை உடனடியாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்புக்கு ஆதார விலை குறைவாக இருப்பதாக விவசாயிகள் கூறுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். பக்கத்து மாநிலங்களிலே கரும்புக்கான ஆதார விலை என்ன என்பதைப் பார்க்கவேண்டும். கர்நாடகாவிலே ரூ.2,100 மட்டும்தான் தருகின்றார்கள். மகாராஷ்ட்ராவில் ரூ.1,800 தருகின்றார்கள், அதற்காக அங்கே போராடிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ரூ.2,650—ஐ வாங்கிக் கொடுத்திருக்கின்றார்கள் என்றால் இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அதைப் புரிந்துகொள்ளவேண்டும். விவசாயிகளுடைய உண்மையான அரசாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், தனியார் ஆலையிலிருந்து வரவேண்டிய பாக்கித் தொகை, கிட்டத்தட்ட 600 கோடி ரூபாயிலிருந்து 300 கோடி ரூபாய் என்ற அளவிற்கு குறைந்திருக்கின்றது. கூடியவிரைவில் அதையும் பெற்றுத் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு அறிவித்துள்ள ஏழைப் பெண்களுக்கான திருமண உதவித் தொகை பெற பதிவுத் திருமணம் செய்யவேண்டும் என்ற அரசின் அறிவிப்பு வரவேற்கத்தக்கது. அதேநேரத்தில் மணமக்கள் பதிவுத் துறை அலுவலகத்திற்கு திருமணத்தைப் பதிவு செய்யச் செல்லும்போது கூடுதல் செலவாகிறது. இதுபோன்ற பதிவுத் திருமணங்களை அரசே



2015 பிப்ரவரி 19] [திரு. கே. உலகநாதன்]

கட்டணம் இல்லாமல் பதிவு செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டில் பத்துக்கும் மேற்பட்ட இரயில் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்தியது பாராட்டுக்குரியது. இதனை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கின்றோம். அதேவேளையில் சென்னை—காரைக்குடி இரயில் பாதை நூறு ஆண்டு பழமையான பாதையாகும். அப்பாதை வழியாக மரியாதைக்குரிய பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், விவேகானந்தர் போன்றவர்கள் எல்லாம் சென்னை வந்துள்ளனர். மேற்கண்ட இரயில் பாதை சென்னை—திருவாரூர் வரை அகல இரயில் பாதையாக மாற்றப்பட்டுள்ளது. ஆனால், திருவாரூர்—திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை—காரைக்குடி, திருத்துறைப்பூண்டி—அகஸ்தியம்பள்ளி ஆகிய மீட்டர்கேஜ் பாதைகள் அகல இரயில் பாதைகளாக மாற்றப்படாமல் அப்படியே கிடப்பில் கிடக்கின்றன. அப்பொழுது பொதுமக்கள், வர்த்தகர்கள் பல போராட்டங்களை நடத்தியும் எந்தப் பணிகளும் நடக்காமல் உள்ளன.

பிற்பகல் 1—55

அதேபோல, மன்னார்குடி, கோட்டூர், திருத்துறைப்பூண்டி ஆகிய இடங்களில் புதிய இரயில் பாதைகளைத் தொடங்கவேண்டும். எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இப்பாதைகளை அகல இரயில் பாதைகளாக மாற்றிட மத்திய அரசை வலியுறுத்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு, உழைக்கின்ற மக்களை பாதிக்கின்ற வகையில் நேரடி மானியம் இல்லையென்பதை அறிவித்து செயல்படுத்தத் தொடங்கியுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், உரையை முடியுங்கள்.

**திரு. கே. உலகநாதன்:** இன்னும் ஒரே ஒரு நிமிடம். தமிழக மக்கள் இந்த அரசின்மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு விரோதமாக

[திரு. கே. உலகநாதன்] [2015 பிப்ரவரி 19

மத்திய அரசின் நேரடி மானியத்தை இரத்து செய்வதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அதேபோல, என்னுடைய திருத்துறைப்பூண்டி தொகுதியில் உள்ள முத்துப்பேட்டையை தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுகா அறிவிக்க அரசாணை வழங்கப்பட்டு வருவாய் கிராமங்களெல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இன்னும் அது புதிய தாலுகாவாக அறிவிக்கப்படாமல் உள்ளது. இந்த ஆண்டே அதை அறிவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவேரி டெல்டா மாவட்டத்தில் மீத்தேன் எடுக்கும் திட்டத்தை முழுமையாக இரத்து செய்திட தமிழக அரசு வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர் உதவித் தொகை 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்கியது பாராட்டுக்குரியது. தவறான தகவலைக் கொடுத்து உதவித் தொகை பெறுவதாகக் கூறி பல இடங்களில் உதவித் தொகை தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் முதியோர் உதவித் தொகையை நம்பியுள்ள பெரும்பான்மையினர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகையால் விசாரணையை விரைந்து முடித்து உடனடியாக உதவித் தொகை கிடைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமாய் அன்போடு கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்தில் உவந்தளித்த உரைக்கு நன்றி தெரிவிக்கிற தீர்மானத்தின்பேரில் என்னுடைய கருத்துகளைப் பதிவு செய்கிற வாய்ப்பை வழங்கிய தங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

ஆளுநர் உரை ஒரு வழக்கமான சம்பிரதாயம் என்றாலும்கூட, ஒரு நூலைப் பற்றி தெரிந்துகொள்கிற வகையில் அந்த நூலின் முன்னுரை எப்படி அமையுமோ, அதைப்போல, அரசியல்



2015 பிப்ரவரி 19][முனைவர் செ.கு. தமிழரசன்]

விமர்சகர்கள் ஓர் ஆட்சியின் செயல்பாடுகளை உணர்ந்து கொள்வதற்கு முன்னுரையைப்போல ஆளுநர் உரை அமையும் என்று விளக்கம் சொன்னார்கள்.

சீனத்திலே ஓர் அரசியல் விமர்சகன் சொன்னான். முதல்தர விமர்சனம் என்பது கொள்கைகளை விமர்சிப்பது. இரண்டாம்தர விமர்சனம் என்பது நிகழ்வுகளை, சூழ்நிலைகளை விமர்சிப்பது. மூன்றாம்தர விமர்சனம் என்பது தனி நபர்களை விமர்சிப்பது. நான்காம்தர விமர்சனம் என்பது விமர்சனத்திற்கே இலக்கணம் இல்லாமல் மனம் போன போக்கிலே அவர்கள் எதை எண்ணுகிறார்களோ, எதை விரும்புகிறார்களோ, எது வேண்டுமென்று கருதுகிறார்களோ அதையொட்டி விமர்சிப்பது. ஆக, விமர்சனம் என்பது கொள்கைகளின் அடிப்படையிலோ, கருத்துகளின் அடிப்படையிலோ இருக்கவேண்டுமே தவிர, அவர்கள் மனம் போன வகையிலே விமர்சிப்பது என்பது அரசியல் விமர்சனம் ஆகாது. இந்த ஆளுநர் உரையிலே என்ன இருக்கிறது? எது இருக்கிறது? எதைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றெல்லாம் பலர் பேசுகிறார்கள். காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் என்று சொல்வார்களே, அதைப்போல அவர்களுக்கு இந்த உரையிலே தெரிவது அப்படிப்பட்ட தன்மை படைத்ததாகத்தான் இருக்கிறதே தவிர, அவர்களுக்கு உண்மை நிலை விளங்கவில்லை. அதனுடைய உள்ளார்ந்த பொருள் விளங்கவில்லை என்றுதான் நாம் கருதவேண்டுமே தவிர, இதிலே ஒன்றுமில்லை என்று சொல்லிவிட முடியாது. அதற்கு முன்னாலே நான் என்னுடைய வேதனை ஒன்றை இங்கே வெளிப்படுத்தியாகவேண்டும்.

இந்தச் சட்டமன்றத்திலே இன்று அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சி கருத்துகளைச் சொல்வதற்கு மாறாக, தங்களுடைய கருத்துகளை இங்கே பதிவு செய்வதற்கு மாறாக, அரசிடமிருந்து விளக்கங்களைத் தெரிந்துகொள்வதற்கு மாறாக, ஏதோ ஒரு யுத்த களத்திலே வந்து மோதுவதைப்போல ஆர்ப்பரித்து, அவர்கள் வந்த அந்தக் காட்சி இருக்கிறதே அது ஜனநாயக மாண்பை, ஜனநாயக மரபுகளைக் கொச்சைப்படுத்துவதாக இருக்கிறது என்கிற அந்த வேதனையை நான் இங்கே வெளிப்படுத்தி, பதிவு செய்யவேண்டும்.

*பிற்பகல் 2—00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** சுதந்திர இந்தியாவில் வாக்குரிமை வழங்குவது குறித்த அரசியல் நிர்ணய சபை எப்படி வாக்குரிமை வழங்கலாம், எப்படி தேர்தல் அணுகுமுறைகளைப் பின்பற்றலாம் என்று விவாதித்தபோது, பலரும் அன்றைய சூழ்நிலையிலே அச்சம் எழுப்பினார்கள். "எப்படி பாமரர்களுக்கு வாக்குரிமையளிப்பது? படிப்பறிவு இல்லாதவர்களுக்கு எப்படி வாக்குரிமையளிப்பது? அரசியல் வரலாறுகளையெல்லாம் புரிந்துகொள்ள முடியாத ஏழையெளிய, அடித்தளத்து மக்களுக்கு எப்படி வாக்குரிமையளிப்பது? இந்த வாக்குகளை இவர்கள் தவறாகப் பயன்படுத்தினால் என்னவாகும்? அதுவா ஜனநாயகத்தைச் செழுமைப்படுத்தும்? அதற்கு ஒரு வரம்பும், இலக்கணமும் வேண்டாமா?" என்றெல்லாம் வினா எழுப்பினார்கள். அப்போது அரசியல் நிர்ணய சபையின் வரைவுக் குழுத் தலைவரான பாபாசாகிப் அம்பேத்கர் அவர்கள் சொன்னார்கள், "ஜனநாயகத்தின் பெருமை என்பதே பெரும்பான்மையை ஒப்புக்கொள்வதுதான். பெரும்பான்மை முடிவுக்கு கட்டுப்படுவதுதான். பெரும்பான்மை முடிவை ஏற்றுக்கொள்வதுதான். விமர்சிப்பது என்பது ஜனநாயகத்தின் உரிமையாக இருக்கலாம். ஆனால், நடைமுறை என்பது ஜனநாயகத்திலே பெரும்பான்மை உரிமையை, பெரும்பான்மை எண்ணத்தை, பெரும்பான்மை முடிவை ஏற்றுக்கொள்வது, கட்டுப்படுவது ஆகும்." இதை எதிர்க்கட்சிக்காரர்கள் புரிந்துகொள்ளவேண்டும். பெரும்பான்மைதான், பெரும்பான்மை உணர்வுதான், பெரும்பான்மை சிந்தனைதான் இந்தச் சட்டப் பேரவைக்கே சட்டமன்ற உறுப்பினர்களை அனுப்புகிறது. பெரும்பான்மை என்பது எவ்வளவு வலிவு மிக்கது, சக்தி மிக்கது. அதுதான் ஜனநாயகத்தின் பெருமை, அதுதான் ஜனநாயகத்தின் அச்சாணி.

ஆக, பெரும்பான்மை முடிவுகளுக்குக் கட்டுப்படுகிற சிந்தனை இல்லாதவர்கள் ஜனநாயகத்தையே சீர்குலைக்கிறவர்கள் என்பதை நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆளுநர் உரையிலே எது அடிப்படை தேவையோ, அந்த அடிப்படைத் தேவைகள் எல்லாம் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் போன்றவை சமூகத்தின் அடிப்படை உரிமைகள். ஏன் இதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன் என்றால், இது ஒரு நல்ல நூலுக்கான முன்னுரை என்று நான் சொல்லிவிடமாட்டேன். இது





ஒரு பெரும் காப்பியத் தொடர்பில், அந்தக் காப்பியத்தைத் தொடர்பாக இணைக்கிற ஒரு தொகுப்புரை.

கடந்த 4 ஆண்டு காலமாக தமிழகத்திலே வெகு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, அடித்தளத்து ஏழையெளிய பெருமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையிலான அரசு இயங்கி 4 ஆண்டுக் காலத்திலே, தமிழகத்தை இந்தியத் துணைக் கண்டத்திலே ஒரு தனித்துவம் மிக்க மாநிலமாக தலை நிமிர்கிற அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) சாதனைகள் படைக்கப்பட்டிருக்கின்றன. "இந்த, முன்னுரையிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது? புதுத் திட்டங்கள் இருக்கின்றனவா? புது அறிவிப்புகள் இருக்கின்றனவா?" என்று கேள்வி எழுப்புவதற்கு, இது ஏதோ இன்றைக்கு பொறுப்பேற்ற அரசு அல்ல. இது 4 ஆண்டுகளாக தொடர்ந்து கொண்டிருக்கிற, இயங்கிக் கொண்டிருக்கிற, செயல்பட்டுக்கொண்டிருக்கிற ஒரு வலிமையான மக்கள் அரசு. இந்த மக்கள் அரசு கடந்த மூன்று ஆண்டு காலத்திலே எவற்றையெல்லாம் இந்த நாட்டுக்குச் செய்திருக்கிறது; இந்த மக்களுக்குச் செய்திருக்கிறது; அர்ப்பணித்திருக்கிறது என்பதையெல்லாம் தவிர்த்துவிட்டு ஒரு புதிய செய்தியைச் சொல்லிவிட முடியாது.

அதைத்தான் இந்த ஆளுநர் உரையிலே ஆளுநர் குறிப்பிட்டு இருக்கிறார். 3 ஆண்டு கால அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நடைபெறுகின்ற இந்த அரசு என்னென்ன சாதனைகளைச் செய்திருக்கிறது? உண்ண உணவு தந்திருக்கிறது. உடுக்க உடை தந்திருக்கிறது. இருக்க இடம் தந்திருக்கிறது. சமூகக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு கல்வி தந்திருக்கிறது. சுகாதாரம் தந்திருக்கிறது. அதற்கும் மேலே வேலைவாய்ப்பை உருவாக்கியிருக்கிறது. இவற்றுக்கெல்லாம் மேலாக ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அத்தியாவசியத் தேவையான குடிநீரைத் தந்திருக்கிறது. மின்சாரத்தைத் தந்திருக்கிறது.

ஆக, எல்லா வகையிலும் எத்தகைய ஒரு மாறுபட்ட திட்டங்களைத் தமிழகத்திலே இந்த அரசு உருவாக்கியிருக்கிறது என்பதையெல்லாம் பல வகையிலே ஆளுநர் உரையிலே பட்டியலிட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2015 பிப்ரவரி 19

ஆக, இவை எதையுமே தெரிந்துகொள்ளாமல், இவை எதையுமே மேலெழுந்தவாரியாகக் கூடப் பார்க்க முடியாமல், இதிலே ஒன்றுமே இல்லை என்று சொன்னார்கள். மத்திய, மாநில உறவுகள் வளர்க்கப்படவில்லையா? மத்திய, மாநில உறவுகள் எப்படி இருக்கவேண்டும்? நீங்கள் இன்றைக்குப் புதிதாக திட்ட ஆணையத்திற்கு மாறாக ஒரு கொள்கைக் குழுவை உருவாக்கியிருக்கிறீர்கள். அந்தக் கொள்கைக் குழு எப்படி அமையவேண்டும் என்று நம்முடைய ஆளுநர் உரையிலே சொல்லப்படவில்லையா? மத்திய அரசோடு நம்முடைய உறவு எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு சேவை வரியா, சேவை வரியிலே எங்களுடைய எதிர்ப்பு உணர்வு இருக்கிறது. எங்களுக்கு அதிலே கசப்பான சிந்தனை இருக்கிறது என்பதையெல்லாம் இதிலே வலியுறுத்தவில்லையா? ஆக, மத்திய, மாநில உறவைப்பற்றி விமர்சிக்கவில்லையா? குறிப்பிடவில்லையா? அந்தக் கொள்கையை எடுத்துச் சொல்லவில்லையா? அதற்கும் மேலே பிற மாநிலங்களான ஆந்திரம், கர்நாடகம் மற்றும் கேரளா போன்ற மாநிலங்களோடு நமக்கு இருக்கும் பிரச்சினைகள் என்ன? காவேரி நதிநீர்ப் பிரச்சினை, முல்லைப் பெரியாறு பிரச்சினை, ஆந்திர மாநிலத்தில் அவர்கள் அணை கட்டுகிற பிரச்சினை, இவற்றையெல்லாம் வலியுறுத்தவில்லையா? ஆக, பிற மாநிலப் பிரச்சினைகள் வலியுறுத்தப்படவில்லையா? அதுமட்டுமல்லாமல், சர்வதேச அளவிலே, இலங்கைப் பிரச்சினை பற்றி நமது கருத்து என்ன? இலங்கைப் பிரச்சினைக்கு என்ன முடிவு? அதிலே மத்திய அரசு என்ன செய்திருக்கிறது? நம்முடைய எண்ணம் எப்படி இருந்திருக்கிறது? நமது தலைவருடைய எண்ணம் எப்படி வழிகாட்டியிருக்கிறது என்பது இல்லையா? கச்சத் தீவு பிரச்சினை இல்லையா? ஆக, எந்தப் பிரச்சினை இல்லை? தேசிய அளவிலான பிரச்சினை இல்லையா? உலகளாவிய சிந்தனை இல்லையா? பிற மாநிலங்களுடனான உறவில்லையா? மத்திய, மாநில உறவுகள் எப்படி அமைய வேண்டுமென்பதில்லையா? எது இல்லை? எது இந்த ஆளுநர் உரையிலே இல்லை? இல்லை, இல்லை என்று சொன்னால், எது இல்லை என்பதையெல்லாம் எடுத்துச்சொல்ல வேண்டும்.



2015 பிப்ரவரி 19][முனைவர் செ.கு. தமிழரசன்]

*பிற்பகல் 2–05*

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

நாவலர் ஒருமுறை இந்த அவையிலே சொன்னார். ஆழப் படிக்காதவர்கள் இதில் அச்சுப் பிழை இருக்கிறது; எழுத்துப் பிழை இருக்கிறது; தாள் சரியில்லையென்று சொன்னால்கூட நான் சகித்துக்கொள்வேன். கருத்தைப்பற்றி விவாதத்திற்கு வர மறுக்கிறார்களே என்று அவர்கள் சொன்னார்கள். அதைப்போல, உங்களுக்கு எதுவுமே தெரியவில்லையென்றால், இப்படி சொன்னால்கூட அதற்கு விளக்கம் சொல்லலாம். இதிலே எதுவுமே இல்லை, எதுவுமே இல்லையென்று சொன்னால், அது எப்படிப் பொருந்தும்? எடுத்து வைக்கிற வாதங்கள் வலுவுள்ளதாக இருக்கவேண்டாமா? ஒரேயொரு வரியிலே புது அறிவிப்புகள் இல்லை, புது அறிவிப்புகள் இல்லையென்று சொல்கிறவர்களுக்கு, ஒரே வரியிலே ஆளுநர் உரையின் இறுதியிலே, அந்த ஒரு வரியிலே முழுமையான அனைத்துப் பதிலும் இருக்கிறது. அது என்ன வரி என்றால், 2023 அந்த இலக்கை நோக்கி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர், (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள், Vision 2023 என்ற ஒரு திட்டத்தை தமிழ்நாட்டிற்கு அறிமுகப்படுத்தினார்கள். அந்த Vision 2023-ஐ நோக்கிச் செயல்படுவதுதான் எங்கள் எஞ்சிய காலத் திட்டம் என்று சொல்கிறார்களே, அந்த Vision 2023 என்கின்ற அந்த ஒன்றிலே அனைத்து அறிவிப்புகளும் இருக்கின்றன. அனைத்து அறிவிப்புகளும் அதிலே உள்ளடங்கியிருக்கின்றன. அதைப் படிக்கவேண்டாமா? அது ஒரு வரி. அது ஒரு வரியாகத்தான் உங்களுக்குத் தெரியும். ஆனால், அந்த ஒரு வரியிலே எவ்வளவு கருத்துச் செறிவும், எவ்வளவு திட்ட வலிவும் இருக்கிறது என்பதை படிப்பவர்கள்தானே உணர முடியும்.

Vision 2023 இல் ஒரு வரி. அந்தத் திட்டத்தைப் பற்றி அறிந்தவர்களுக்குத் தெரியும். 2023 இல் தமிழகத்தினுடைய தனிநபர் வருமானத்தைப் பத்து மடங்கு அதிகரிப்போம் என்று சொன்னார்களே, அதில் தமிழ்நாட்டினுடைய அனைத்து வளர்ச்சியுமே அடங்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு தனி மனிதனுடைய ஆண்டு வருமானத்தை, தனிநபர் வருமானத்தை பத்து மடங்கு அதிகரிப்பதுதான் எங்களுடைய இலட்சியம் என்று Vision 2023–லே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னார்கள். அந்த ஒரு வரியிலே ஒட்டுமொத்த தமிழகத்தினுடைய திட்டங்களும் அடங்கும். தனிநபர் வருமானம் இன்று அவ்வளவு

அதிகரித்திருக்கிறது என்று சொன்னால், அதற்குக் காரணம், Vision 2023 திட்டம்தானே? நேபாளத்திலிருந்து தொழிலாளர்கள் இங்கே வருகின்றார்கள்; மேற்கு வங்கத்திலிருந்து தொழிலாளர்கள் இங்கே வருகின்றார்கள்; பீகாரிலிருந்து தொழிலாளர்கள் இங்கே வருகின்றார்கள். வேறு மாநிலத் தொழிலாளர்கள்கூட தங்களுடைய வாழ்வாதாரத்திற்காக தமிழ்நாட்டுக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். ஒவ்வோர் ஆண்டும் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேறு மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்குக் குடிபெயர்ந்து வந்துகொண்டிருக்கிறார்கள் என்றால், தமிழகம் இப்படிப்பட்ட ஓர் உயர்வை, இப்படிப்பட்ட ஒரு சூழலை, இப்படிப்பட்ட ஒரு வளர்ச்சியை, இப்படிப்பட்ட ஒரு பாதுகாப்பை இங்கே உருவாக்கியிருக்கிறது. இவையெல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மாபெரும் சாதனைகள் அல்லவா? ஆகவேதான், புரட்சித் தலைவி அம்மா அவர்களை ஆளுநர் உரையிலே பாராட்டியிருக்கின்றார்கள். எப்படி அவரைப் பாராட்டலாம் என்றால், இந்தச் சாதனைகளுக்குச் சொந்தக்காரர் அவர்தானே? (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலே இந்தச் சாதனைகளையெல்லாம் சோதனைகளைக் கடந்து உருவாக்கியவர் அவர்தானே? (மேசையைத் தட்டும் ஒலி) அவரைப் பாராட்டாமல், எப்படி இந்த ஆளுநர் உரையிலே தவிர்த்திருக்க முடியும்? ஆகவேதான், ஆளுநர் இந்த உரையிலே அவர்களைப் பாராட்டியிருக்கிறார்கள்.

தமிழகத்திலே இன்றைக்கு என்ன நிலைமை? இந்தியாவிலே இன்றைக்குப் புதிதாகத் தோன்றிய புதிய மாநிலங்களோடு சேர்த்து 29 மாநிலங்கள் இருந்தாலும், இந்த 29 மாநிலங்களிலே உள்ள எந்தவொரு நோயாளியும், உடல் குறைந்தவன்கூட, தன்னால் தன்னுடைய குடும்பத்தை நடத்த முடியாதவன்கூட, எந்தவிதமான உதவிக்காகவும் யாரையும் எதிர்பார்க்கிற தன்மை இல்லாமல், அரசையே நம்பி தன்னுடைய வாழ்க்கையை அவன் அமைத்துக்கொள்ளலாம் என்கிற அளவிற்கு அத்துணை நலத் திட்டங்கள் இன்றைக்குத் தமிழகத்திலேதான் இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வளவு நலத் திட்டங்கள் இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கின்றன. முதியோருக்கு உதவித் தொகை, விலையில்லா அரிசி, விலையில்லா கறவை மாடு, விலையில்லா ஆடு, விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின் விசிறி மற்றும் விலையில்லா கம்ப்யூட்டர். இப்படி கருவிலேயிருந்து எருவாகிப் போகிற வரை அவன் வாழ்க்கைக்குத் துணை நிற்கிற





அத்தனை நலத் திட்டங்களையும் உருவாக்குவதிலே தமிழகம்தான் இந்தியாவின் தலைநகரமாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இவ்வளவு நலத் திட்டங்கள் தமிழகத்திலே எந்த எதிர்பார்ப்புமின்றி, எந்தத் துணையுமின்றி, யாருடைய ஆதரவுமின்றி, அரசின் மூலமாகவே தன்னுடைய வாழ்க்கையை அவன் நடத்திக்கொள்ள முடியும் என்கிற அளவிற்கு, அந்த நம்பிக்கையை உருவாக்குகின்ற அளவிற்கு, இன்றைக்குத் தமிழகத்திலே நலத் திட்டங்கள் இருக்கின்றன என்றால், இந்த நலத் திட்டங்களுக்கு வித்திட்ட, இந்த நலத் திட்டங்களுக்குக் காரணமாக இருந்த, இந்த நலத் திட்டங்களின் தாயான தமிழக முதலமைச்சராக விளங்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தாயை எப்படிப் பாராட்டாமல் இருக்க முடியும்? இதில் என்ன இல்லை? எதுவுமில்லை; எதுவுமேயில்லை என்று சொன்னால் இவையெல்லாம் கண்ணுக்குத் தெரியவில்லையா? சாலை வசதிகளுக்கு வாய்ப்பில்லையா? எது அடிப்படை வசதி? இந்தச் சாலை வசதி, போக்குவரத்து வசதி, அடிப்படை வசதிகளெல்லாம் இதில் விரிவாகச் சொல்லப்படவில்லையா? ஆக, இவையெல்லாம் வெறுமனே பார்க்கிற இந்த நாலாந்தர விமர்சகர்களுக்கு எப்போதுமே தெரியாது. அவர்கள் எண்ணம் முடக்கி வைப்பது, இந்த வளர்ச்சியை முடக்கி வைப்பது. முடக்கி வைக்க வேண்டுமென்ற ஒருவனுக்கு, அப்படி ஒரு முடக்குவாதத்திலே இருக்கிறவர்களுக்கு எப்படி இந்த முனைப்பான காரியங்கள், முனைப்பான திட்டங்கள், முனைப்பான செயல்களெல்லாம் கண்ணுக்குத் தெரியும். மணிக்கணக்கிலே இவற்றைப் பேசுவதற்கு, இவற்றைப் பாராட்டுவதற்கு, எடுத்துச் சொல்வதற்கு அதிக நேரம் தேவைப்படும். ஆனாலும், இந்தச் சந்தர்ப்பத்திலே ஓர் ஒடுக்கப்பட்ட சமூக அமைப்பினுடைய பிரதிநிதியாக ஒன்றிரண்டை மட்டும் நான் இந்த அவையிலே அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

*பிற்பகல் 2–10*

தேசிய அளவிலே ஒரு தாழ்த்தப்பட்ட மக்கள் ஆணையம் இருப்பதைப்போல, மாநில அளவிலே ஒரு தாழ்த்தப்பட்ட ஆணையம் அமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருக்கிறது. அதுகுறித்து அரசு பரிசீலிக்கவேண்டும். அதைப்போலவே, ஏழை, எளிய மக்களுக்கு weaker sections என்பவர்களுக்கு நாம் வழங்குகிற கடன் வசதிக்காக பல நலத்

திட்டங்களை உருவாக்கினாலும்கூட, குறைந்தபட்சம் அவர்கள் ஜாமீன் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஜாமீன் தருவதற்குக்கூட எந்த தேசிய வங்கிகளும் முன்வரப் போவதில்லை. ஆகவே, தாட்கோ என்கிற நிறுவனத்திற்கு, தாட்கோவுக்கு ஒரு தனி வங்கி, தாட்கோவே ஒரு தனி வங்கியாக, ரெப்கோ வங்கி இருப்பதைப்போல ஒரு தனி வங்கியாக உருவாக்கப்பட வேண்டும் என்கிற இன்னொரு கோரிக்கையையும் நான் முன்வைக்க விரும்புகிறேன்.

மூன்றாவது கோரிக்கையாக, கடந்த பல ஆண்டுகளாக, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு வழியாக வழங்கப்பட்டு வருகிற வேலைவாய்ப்பிலே பின்னடைவு உருவாகியிருக்கிறது. அந்தப் பின்னடைவுகளைக் கண்டறிய வேண்டும். சற்றேறக்குறைய இன்றைக்கு 50,000 அளவிற்கு அந்தப் பின்னடைவுகள் தேங்கியிருக்கலாம் என்று மேலெழுந்தவாரியான கணக்கு இருக்கிறது. அந்தக் கணக்கெடுப்பை நடத்தி, அந்தப் பின்னடைவுகளை ஒரு சிறப்புப் பணி நியமனம்மூலம் நியமிக்கவேண்டும், special recruitment உருவாக்கவேண்டும் என்ற கோரிக்கைகளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நகைச்சுவை. நாவலர் இந்த அவையிலே சொன்ன நகைச்சுவை. அதை நான் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். விமர்சிப்பது என்பது எப்படிப்பட்ட விமர்சனமாக இருக்கவேண்டுமென்று, நிதியமைச்சராக இருந்தபோது அவர் இந்த அவையிலே சொன்னது. அவருடைய நிதிநிலை அறிக்கையை வெளியிலிருந்து பலர் விமர்சித்தார்கள். அந்த விமர்சனங்களையெல்லாம் அவர் சொல்லிக்கொண்டே வந்தார். "ஒரு பெரியவர் சொன்னாராம், 'உப்புமில்லை சப்புமில்லை' என்று என்னுடைய நிதிநிலை அறிக்கையைச் சொன்னாராம். நான் அவரைக் கேட்கிறேன்; நான் படிப்பதற்குத்தானே நிதிநிலை அறிக்கையைத் தந்தேன்; நீங்கள் கடித்துப் பார்த்தால், அதற்கு நான் என்ன செய்வது?" (மேசையைத் தட்டும் ஒலி) இது அவை முன்னவராக இருந்த, நிதியமைச்சராக இருந்த நாவலர் இந்த அவையிலே குறிப்பிட்ட ஒரு நகைச்சுவை. நான் படிப்பதற்குத்தான் நிதிநிலை அறிக்கையைத் தந்தேன்; இதிலே உப்புமில்லை சப்புமில்லை என்று நீங்கள் வெளியிலிருந்து சொன்னால், உங்களை நான் படித்துப் பார்க்கத்தானே





சொன்னேன்; கடித்துப் பார்க்கவா சொன்னேன் என்று அவர் கேட்டார். அதைப்போன்ற சிந்தனையோடு, அப்படிப்பட்ட ஓர் உணர்வோடு ஆளுநர் அறிக்கையிலே எதுவுமேயில்லை; வழக்கம்போல் சொல்வது என்பது, வாடிக்கையான, முட்டுக்கட்டை போடுகிற, தமிழக மக்களுக்குக் கேடு விளைவிக்கிற ஒரு பண்பு. அவற்றைத் தவிர்த்து போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்கிருந்தாலும், அவர் வழியோடு நடந்துகொண்டிருக்கிற இந்த அரசு அவர் வழியிலே (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மேலும் பல சாதனைகளை (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய எண்ணங்களை நிறைவேற்றுகிற வகையிலே உருவாக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஜனநாயகத்தின் மிகப் பெரிய சான்றிதழ் மக்கள் தருவது. ஜனநாயகத்தின் மிகப் பெரிய சான்றிதழை போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டப் பேரவையிலும் பெற்றார்; நாடாளுமன்றத்திலும் பெற்றார்; உள்ளாட்சி அமைப்புகளிலும் பெற்றார்; ஒவ்வோர் இடைத் தேர்தலிலும் பெற்றார்; ஸ்ரீரங்கம் பொதுத் தேர்தலிலும், சட்டமன்ற இடைத் தேர்தலிலும் பெற்றார்; (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு ஓர் இமாலய வெற்றியைப் பெற்றிருக்கிறார். வெற்றி, வெற்றி, வெற்றி என்று மக்களிடம் வெற்றி அடைந்து கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வரும் பிப்ரவரி 24 ஆம் தேதி பிறந்த நாளிலே இந்த வெற்றி அவருடைய பிறந்த நாள் பரிசு மட்டுமல்ல; இதைவிட மிகப் பெரிய வெற்றிகளை (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தினுடைய ஒட்டு மொத்த மக்களும், இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் உலகளாவிய தமிழர்களும் அந்தப் பரிசை அவருக்கு வழங்கிக்கொண்டேயிருப்பார்கள் என்ற வாழ்த்துகளோடு அமைகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.

**திரு. ஆர்.என். கிட்டுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் காவல் தெய்வம், ஏழைகளின் இதய தெய்வம், நான் தினம்தோறும் வணங்குகிற எனது குடும்ப தெய்வம் மாண்புமிகு மக்களின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

[திரு. ஆர்.என். கிட்டுசாமி] [2015 பிப்ரவரி 19

*பிற்பகல் 2–15*

அம்மா, அன்புள்ளம் கொண்டதால் மக்களின் முதல்வர் ஆனீர்கள், இதுதான் கொடுப்பினை; இந்தியாவே புகழும் சத்தியத் தாய் சந்தியாவின் மகளாய்ப், பிறந்தீர்கள், இதுதான் சிறப்பினை; அசைக்க முடியாது எங்கள் அம்மா அவர்களின் புனித ஆட்சியினை; திருவரங்கத்தில் மக்கள் வழங்கினார்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை; முதலமைச்சராக வெகு விரைவிலே முடிசூடப் போகிறார்கள் எங்கள் அன்னை; இது எதிரிகளுக்குப் படிப்பினை; (மேசையைத் தட்டும் ஒலி) கடவுள்களிடம் இதுதான் எங்களுடைய பிரார்த்தனை; மீண்டும் இம்மாமன்றத்தில் ஒலிக்கட்டும் எங்கள் சிங்கநிகர் தலைவியின் கர்ஜனை! (மேசையைத் தட்டும் ஒலி) 67–வது பிறந்த நாள் காணும் மாண்புமிகு மக்கள் முதல்வர் அம்மா அவர்களை வணங்குகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேச வாய்ப்பளித்த கருணைக் கடல், காவேரியை மீட்டெடுத்த காவல் தெய்வம், மக்களின் முதல்வர் அம்மா அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மொடக்குறிச்சி தொகுதி மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்லரசுக்கு நற்சான்றிதழாக, உரைகல்லாக அமைந்துள்ளது மேதகு ஆளுநர் அவர்களின் உரை. எதிர்க்கட்சியினர் இதை தாங்கிக்கொள்ள முடியாமல் வெளிநடப்புச் செய்கிறார்கள். ஆளுநர் உரையில் என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளாமலேயே வெளிநடப்புச் செய்து, ஆளுநர் உரையில் ஒன்றும் இல்லையென்றும், சட்டம்–ஒழுங்கு தமிழகத்தில் கெட்டுவிட்டது என்றும் பத்திரிகைகளில் பேட்டியும் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். மக்களின் நலத் திட்டங்களை, அரசு செய்திருக்கின்ற சாதனைகளை தாங்கிக்கொள்ள முடியாமல் வெளிநடப்பு நாடகத்தை நடத்தியுள்ளார்கள். வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று பேசி வருகிறார்கள்.

கடந்த காலங்களில், மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நடந்ததெல்லாம் நாடகங்கள், கூத்துகள். ஆனால், மக்கள் முதல்வர் அம்மா அவர்களின் ஆட்சியில் மக்கள் நலத் திட்டங்கள் மக்களுக்கு முழுமையாகச் சென்றடைகின்றன.



2015 பிப்ரவரி 19] [திரு. ஆர்.என். கிட்டுசாமி]

சட்டம்–ஒழுங்கு முழுமையாகப் பாதுகாக்கப்படுகிறது. சட்டம்–ஒழுங்கைப்பற்றி இங்கே பேசுகிறார்கள். சட்டம்–ஒழுங்கைப்பற்றிப் பேசுவதற்கு இவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது? இவர்களின் ஆட்சியில் சட்டம்–ஒழுங்கு சந்தி சிரித்தது நாடறிந்த உண்மை. கட்டப் பஞ்சாயத்துகளும், கந்துவட்டிக் கொடுமைகளும், நில அபகரிப்புகளும் தாராளமாக நடைபெற்றன. ஆட்சி அதிகாரத்திலிருந்த அமைச்சர்களே அடுத்தவர் நிலங்களை அபகரித்த கொடுமையும் நடந்தது. இவர்களின் கட்சிக்காரர்களுக்கே இவர்களின் ஆட்சியில் பாதுகாப்பில்லை. தினகரன் அலுவலகத்திற்குத் தீ வைத்த கொடுமை சம்பவம்; முன்னாள் அமைச்சர் தா. கிருட்டிணன் கொல்லப்பட்ட சம்பவம்; காவல் துறை அதிகாரிகள் வெட்டிக் கொலை; வெடிகுண்டு வீச்சு; காவல் நிலையத்திலேயே துப்பாக்கிக் கொள்ளை; இவர்கள் சட்டம்–ஒழுங்கைப்பற்றிப் பேசலாமா? இவர்கள் சட்டமன்றத்திலேயே ஒழுங்கீனமாக நடப்பவர்களாயிற்றே!

பேரவைத் தலைவர் அவர்களே, மரம் நடவில்லை என்று இன்று காலையிலே பேசினார்கள். அப்படிப்பட்டவர்கள், அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, ‘மானாட, மயிலாட’ பார்த்துக்கொண்டு, ஐந்து ஆண்டுக் காலத்தைக் கடத்தினார்கள். இவர்களுக்கு இந்த ஆட்சியைப்பற்றிப் பேசுவதற்கு என்ன தகுதி இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே பேரவையிலே கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் ஆட்சியில் சட்டம்–ஒழுங்கு காப்பாற்றப்பட்டுள்ளது. கந்துவட்டிக் கொடுமை இல்லை; கட்டப் பஞ்சாயத்து இல்லை; நில அபகரிப்பு இல்லை; கள்ள லாட்டரி இல்லை. இவையெல்லாம் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு, சட்டம்–ஒழுங்கு கட்டுப்பாட்டில் உள்ளது. தமிழகத்தில் காவல் துறைக்கு மரியாதையும் கிடைத்துள்ளது. சிறப்பாகப் பராமரிக்கப்படும் சட்டம்–ஒழுங்கு ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமையும் என்றும், இந்த அரசு எப்போதும் பாகுபாடற்ற முறையில் சட்டத்தை நிலைநிறுத்தி, மாநிலத்தின் பொது அமைதியையும், மத நல்லிணக்கத்தையும் பேணுவதை உறுதி செய்துள்ளது என்றும் மேதகு ஆளுநர் அவர்கள் நற்சான்றிதழ் வழங்கியுள்ளார்கள்.

தமிழ் மொழியை வளர்க்கவும், தமிழ் மொழிப் பயன்பாட்டை ஊக்கப்படுத்தவும் தமிழ் பல்கலைக்கழகத்திற்கு 42.23 கோடி ரூபாய்

நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. ஆந்திராவிலுள்ள திராவிட பல்கலைக்கழகம், கேரளாவிலுள்ள பன்னாட்டு திராவிட மொழியியல் பள்ளி ஆகியவற்றிற்கு தாராளமாக நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், மதுரையிலுள்ள உலகத் தமிழ் அரங்கம் மற்றும் தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு 43.98 கோடி ரூபாய் செலவில் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழ் சான்றோர்களையும், மொழி ஆர்வலர்களையும் பெருமைப்படுத்த புதிய விருதுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், தமிழ், தமிழ் மொழி என்று பேசினார்களே தவிர, தமிழுக்கு என்ன செய்தார்கள்? கோவையில் செம்மொழி மாநாடு என்ற பெயரில் தன் குடும்ப உறுப்பினர்களை அமர வைத்து, துதி பாடியும், களியாட்டம் நடத்தியும் காலத்தைக் கடத்தினார்கள்.

இலங்கைப் பிரச்சினையில் வீர வசனம் பேசிய தி.மு.க. தலைவர் உண்ணாவிரத நாடகத்தை நடத்தி, ஒரு மணி நேரத்தில் உண்ணாவிரதத்தை முடித்து, இலங்கைத் தமிழர்களின் சாவுக்குக் காரணமாக இருந்தவர், கச்சத் தீவைக் காவு கொடுத்தவர்.

பிற்பகல் 2—20

தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் கெடுத்தவர் இவர். தமிழக மீனவர்களின் உரிமைக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து, பாதுகாப்பவர் மக்களின் முதல்வர் அம்மா அவர்கள். இலங்கைச் சிறையிலே வாடிய தமிழக மீனவர்களைச் சிறையிலிருந்து விடுவிக்கவும், அவர்களை வழக்கிலிருந்து விடுவிக்கவும், நிதியுதவி கொடுத்ததோடு மட்டுமல்லாமல், மீனவர்களின் குடும்பங்களுக்கும் நிதியுதவி செய்தவர் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்கள்.

கச்சத் தீவை மீட்டு, இந்தியாவின் உரிமையை நிலைநாட்டியும், பாரம்பரிய மீன் பிடிப்புப் பகுதியில் மீன் பிடிக்கும் உரிமையை நிலைநிறுத்தவும், மீனவர்களுக்காக சட்டப் போராட்டம் நடத்திக்கொண்டிருப்பவர் மாண்புமிகு மக்கள் முதல்வர் அம்மா அவர்கள்.

கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை கைவிடப்பட்டது. காவேரிப் பிரச்சினை கானல் நீரானது. ஆனால், மக்கள் முதல்வர் அம்மா அவர்கள் சட்டத்தின் துணைகொண்டு, உச்ச நீதிமன்றம் வரை சென்று முல்லைப் பெரியாறு அணையைக் காத்ததோடு மட்டுமல்லாமல், காவேரியின் உரிமையை மீட்டுத் தந்து தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காத்தவர்.





தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பம் மிகச் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலம் எங்கும் பொதுச் சேவை மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. தகவல் தொழில்நுட்பத் துறை மூலமாக 2,500—க்கும் மேற்பட்ட மையங்கள் செயல்பட்டு வருகின்றன. வருவாய்த் துறையின்மூலம் வழங்கப்பட்டுவரும் சான்றிதழ்கள், வரிகள் மற்றும் சேவைக் கட்டணங்கள் செலுத்துதல், பல்வேறு அரசுத் திட்டங்களின்கீழ் பயன்களைப் பெறுவதற்கான படிவங்களை அளித்தல் உள்ளிட்ட பல சேவைகளை இம்மையங்களில் மக்கள் எளிதாகப் பெற்று வருகிறார்கள். இந்த ஆண்டு இறுதிக்குள் மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி அலுவலகங்களில் இம்மையங்கள் செயல்படும் என்று அறிவித்துள்ளது ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகும்.

தாறுமாறாக வசூல் செய்யும் தனியார் கேபிள் நிறுவனங்களுக்கு இடையில் அரசு கேபிள் நிறுவனத்தைத் தொடங்கி மிகக் குறைந்த கட்டணத்திலே அனைத்துத் தனியார் சேனல்களையும் மக்கள் பார்த்து பயன்பெறும்வகையில் வழிவகுத்தவர் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

நம் நாட்டின் முதுகெலும்பு விவசாயம். அந்த விவசாயத்தைக் காப்பாற்ற பல்வேறு உத்திகள், புதிய இரகங்கள், பல்வேறு சலுகைகள். இதன் பயனாக 2013—2014 ஆம் ஆண்டில் நமது மாநிலத்தின் வரலாற்றில் 110.02 இலட்சம் மெட்ரிக் டன் தானிய உற்பத்தி என்ற உயரிய இடத்தை எட்டியுள்ளது. 2013—2014 ஆம் ஆண்டில் 6.14 இலட்சம் மெட்ரிக் டன் என்ற சாதனை அளவிற்கு பயறுகள் உற்பத்தி செய்ததற்கான மத்திய அரசின் ‘கிருஷி கர்மான்’ விருது நம் மாநிலத்திற்குக் கிடைத்துள்ளது.

சிறு, குறு விவசாயிகள் நிலையான கூடுதல் வருவாய் பெறவும், சாதாரண, சாமானிய அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்தை

[திரு. ஆர்.என். கிட்டுசாமி] [2015 பிப்ரவரி 19

உயர்த்தவும், விலையில்லா கறவைப் பசுக்கள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் வழங்கும் முன்னோடித் திட்டத்தின்கீழ் இதுவரை 47,735 கறவைப் பசுக்களும், 21.91 இலட்சம் வெள்ளாடுகளும், செம்மறி ஆடுகளும் கிராமப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் கால்நடைத் துறை என்ற துறை ஒன்று இருந்தது. கிராமங்களில் கால்நடை மருத்துவமனை இருக்கும், ஆனால், மருந்துகள் இருக்காது. மருத்துவர்கள் இருப்பார்கள்; ஆனால், உட்கார நாற்காலி இருக்காது. கட்டடம் இருக்கும்; ஆனால் உள்ளே கட்டுக் கட்டுவதற்கு ஆட்கள் நிற்க முடியாது. அந்த அளவிற்குக் கட்டடங்கள் பழுதடைந்து இருந்தன. மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் கால்நடைத் துறை சிறப்புவாய்ந்த துறையாக மாறியிருக்கிறது. அனைத்து கால்நடை மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் புதிய பொலிவோடு, புதிய கட்டடங்களில் மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றன.

பொது விநியோகத் திட்டத்தின்மூலம் தமிழகத்திலுள்ள 1 கோடியே 84 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் 20 கிலோ விலையில்லா அரிசி வழங்கிய அன்னலட்சுமி நம் மக்கள் முதல்வர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) குறைந்த விலையில் பருப்பு, சமையல் எண்ணெய், சர்க்கரை, கோதுமை மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றைத் தொடர்ந்து வழங்குவதோடு, பண்ணைப் பசுமை காய்கறிக் கடைகள், அம்மா மருந்தகங்கள், அம்மா உணவகங்கள், அம்மா குடிநீர் மற்றும் அம்மா உப்பு ஆகியவற்றை மக்களுக்குக் கொடுத்தவர் நம் அம்மா அவர்கள்.

வெளிச் சந்தையில் சிமெண்ட் விலை உயர்வைக் கட்டுப்படுத்த, சாதாரண, சாமானிய மக்களுக்காக அம்மா சிமெண்ட் திட்டத்தைக் கொண்டுவந்து மூட்டை ஒன்றை 190 ரூபாய் என்ற சலுகை விலையிலே கொடுத்தவர் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நமது மாநில மக்களின் நலன் மட்டுமல்லாமல், வெளி மாநில மக்கள் மீதும் அன்பு கொண்டு, இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட ஜம்மு-காஷ்மீர் மக்களுக்காக மனிதாபிமான



2015 பிப்ரவரி 19] [திரு. ஆர்.என். கிட்டுசாமி]

அடிப்படையிலே 5 கோடி ரூபாய் நிவாரணமாக வழங்கியவர் நம் அம்மா அவர்கள். அதேபோல, விசாகப்பட்டினத்திலே புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீட்புப் பணிகள், நிவாரண உதவிகளுக்காக ஆந்திர அரசிற்கு 5 கோடி ரூபாயை அள்ளிக் கொடுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்த மனிதாபிமான செயலை மேதகு ஆளுநர் அவர்கள் தனது உரையில் மனதாரப் பாராட்டியுள்ளார்கள்.

கிராமப்புற ஏழையெளிய மக்களுக்கு சுற்றுச்சூழலுக்கு ஏற்றவகையிலே சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டத்தை அறிவித்தவர் நம் அம்மா அவர்கள். இந்தத் திட்டத்தின்கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் 4,680 கோடி ரூபாய் செலவில் 2.4 இலட்சம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

பிற்பகல் 2–25

தமிழ்நாட்டு மக்களுக்கு சீரான குடிநீர் கொடுக்கும் வகையில், ஒரு மாநகராட்சிக்கும், 18 நகராட்சிகளுக்கும், 84 பேரூராட்சிகளுக்கும், 13,068 ஊரகக் குடியிருப்புகளுக்கும் பயனளிக்கும் வகையில் 4,890 கோடி ரூபாய் செலவில் 14 பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் அமைக்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகின்றன.

மீஞ்சூர் மற்றும் நெம்மேலியில் நாளொன்றுக்கு தலா 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டங்கள் முழுமையாகச் செயல்பட்டு, சென்னை மாநகரத்தின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்து வருகின்றன. நெம்மேலி மற்றும் பேரூரில் முறையே நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் மற்றும் 400 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட இரண்டு அலகுகளை அமைக்க மக்கள் முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள தேர்வாய்கண்டிகையில் புதிய நீர்த்தேக்கத்தை 330 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்து, அதனை 93.77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பூண்டி நீர்த்தேக்கத்தோடு இணைப்பதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இது சென்னை மாநகர மக்களின் எதிர்காலத் தேவையைப் பூர்த்தி செய்ய வழிவகை செய்யும்.

[திரு. ஆர்.என். கிட்டுசாமி] [2015 பிப்ரவரி 19

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழகம் இருளிலே மூழ்கியது. இருண்ட தமிழகத்தை மீண்டும் ஒளி பெறச் செய்தவர் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களின் தொடர் முயற்சியால் மேட்டூர், வடசென்னை மற்றும் வல்லூரில் உள்ள அனல் மின் உற்பத்தித் திட்டங்கள் முடிக்கப்பட்டு, மின் உற்பத்தி 2,500 மெகா வாட் அளவுக்கு உயர்ந்துள்ளது. மாநிலத்தின் மின் உற்பத்தித் திறன் கடந்த 4 ஆண்டுகளில் 3,358 மெகா வாட் அளவிற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

வல்லூரில், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் தேசிய அனல் மின் உற்பத்திக் கழகம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் 500 மெகா வாட் திறன் கொண்ட மூன்றாவது அலகு விரைவில் தொடங்கப்பட உள்ளது. 660 மெகா வாட் திறன் கொண்ட எண்ணூர் விரிவாக்கத் திட்டம் மற்றும் ஒவ்வொன்றும் 660 மெகா வாட் திறன்கூடிய இரண்டு அலகுகள் கொண்ட எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டம் ஆகியவற்றிற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. மின் விநியோகத்தின் தரத்தை உயர்த்த, அம்மா அவர்களின் அரசு எடுத்த பெரும் முயற்சிகளில் ஒன்றாக மாநிலத்தில் மின் கடத்தும் கட்டமைப்பை வலுப்படுத்த ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதி நிறுவனத்திடமிருந்து 3,572 கோடி ரூபாய் நிதி உதவி பெற்று செயல்படுத்தப்படும் திட்டமாக அந்தத் திட்டம் அமைந்துள்ளது. இது மாண்புமிகு மக்கள் முதல்வர் அம்மா அவர்களின் தொடர் முயற்சியால் எடுக்கப்பட்ட சீரிய நடவடிக்கை ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வகுக்கப்பட்ட அரசின் தொழில் கொள்கை, 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை 2,58,382 கோடி ரூபாய் அளவிற்கு கூடுதல் முதலீடுகளை ஈர்த்தது; இந்தியாவில் தமிழகம் இரண்டாவது இடத்தைப் பெற்றது என்ற வரலாற்றுச் சாதனையை இன்றைக்கு படைத்திருக்கிறது. 44,402 கோடி ரூபாய் அளவிற்கு வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து, இந்திய மாநிலங்களில் தமிழகம் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. இது தமிழகத்தின் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக, தமிழகம்தான் தொழில் துவங்க சரியான இடம் என்ற நம்பிக்கையைப் பெற்றுள்ளது.



2015 பிப்ரவரி 19] [திரு. ஆர்.என். கிட்டுசாமி]

தமிழகத்திலுள்ள அனைத்து மக்களும் தரமான கல்வி பெறுவதை உறுதி செய்ய கடந்த நான்கு ஆண்டுகளில் 182 புதிய தொடக்கப் பள்ளிகளைத் தொடங்கியும், 1,317 நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளைத் தரம் உயர்த்தியும், (மேசையைத் தட்டும் ஒலி) இணையவழி வகுப்புகள், கணினிவழி வகுப்புகள், பள்ளிகளில் தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்பம் போன்ற புதுமையான பல திட்டங்களை அறிமுகப்படுத்தியும், கல்வியின் தரத்தை உயர்த்தி, தரமான கல்வி கற்பிக்கப்படுவதை உறுதி செய்யவும், 76,338 கூடுதல் ஆசிரியர் பணியிடங்களுக்கு அம்மா அவர்களின் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதுவரை 72,597 ஆசிரியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள். மாணவ, மாணவிகளின் படிப்பிற்காக பெற்றோர்களுக்கு எந்தவிதமான செலவும் இல்லாமல், இலவசக் கல்வியை உறுதிப்படுத்தும் வகையில், கல்வியில் இடைநிற்றலைத் தடுக்க சிறப்பு ஊக்கத் தொகைகள், அனைத்து மாணவ–மாணவிகளுக்கும் விலையில்லா பாடப் புத்தகங்கள், விலையில்லா நோட்டுப் புத்தகங்கள், விலையில்லா 4 சீருடைத் தொகுப்புகள், விலையில்லா காலணிகள், விலையில்லா புத்தகப் பைகள், விலையில்லா பேருந்து பயண சலுகை அட்டைகள், விலையில்லா மிதிவண்டிகள், விலையில்லா மடிக்கணினிகள் போன்ற ஏராளமான திட்டங்களை வாரி வழங்கி, கல்விக்குப் பெருமை சேர்த்தவர் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்ற திட்டங்கள் எந்த மாநிலத்திலும் இல்லை. மேற்கண்ட திட்டங்களுக்காக 2011–2012 ஆம் ஆண்டிலிருந்து 2014–2015 ஆம் ஆண்டு வரை மொத்தம் 8,748.89 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 2–30

தமிழக வரலாற்றில் முதல்முறையாக 10 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் மாநில அளவிலே முதல் மூன்று இடங்களை அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பெற்றுள்ளார்கள். இது மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் திட்டத்திற்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும். கிராமப்புற மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதிகளில் வாழும் ஏழைகளின் பிள்ளைகள் உயர் கல்வி பெற சமவாய்ப்புப் பெறுவதை உறுதி செய்ய கடந்த 4 ஆண்டுகளில் 38 புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு கல்லூரி மொடக்குறிச்சி

[திரு. ஆர்.என். கிட்டுசாமி] [2015 பிப்ரவரி 19

தொகுதியில் தொடங்கப்பட்டுள்ளது. அதேபோல, 11 புதிய பல்தொழில்நுட்பவியல் கல்லூரிகள், 4 புதிய பொறியியல் கல்லூரிகள் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடங்கியுள்ளது. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 796 புதிய பாடப்பிரிவுகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இதனால் 10,204 மாணவர்கள் பயன்பெற்று வருகின்றார்கள். மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் முயற்சியின் காரணமாக உயர் கல்வி சேர்ப்பு விகிதம் தேசிய அளவிலே 29 சதவீதமாக உள்ளபோதிலும், தமிழ்நாட்டிலே அது 42 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களை நோயிலிருந்து காப்பாற்ற விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் கொண்டு வந்தவர், மக்களின் முதல்வர் அம்மா அவர்கள். மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட காப்பீட்டுத் திட்டம் தன் குடும்ப மக்களுக்காகக் கொண்டுவரப்பட்ட திட்டம். அதன் பயனை அந்தக் குடும்பம் மட்டுமே அனுபவித்தது. மக்களின் முதல்வர் அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தால் மக்கள் மிகச் சிறந்த பயனை அடைந்துள்ளார்கள். இத்திட்டம் மக்களால் மிகச் சிறந்த திட்டம் என்று போற்றப்படுகிறது. (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம். ஏழை எளிய மக்களின் வசதிக்காக கடந்த 4 ஆண்டுகளில் 172 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. 122 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதிகள், சிறப்பு மருத்துவர்கள் மற்றும் நவீன கருவிகளோடு கூடிய மையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும் 42 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இவ்வாறு மேதகு ஆளுநர் அவர்கள், பல்வேறு அம்சங்கள் நிறைந்த சீரிய திட்டங்கள் அமல்படுத்தப்பட்டிருப்பதை மனதார வரவேற்று, உரை நிகழ்த்தியிருக்கின்றார்கள். மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு, மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை 100 சதவீதம் நிறைவேற்றியுள்ளதை இந்தப் பேரவையிலே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

தமிழ்நாட்டு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த திட்டங்களால் பயன்பெற்ற மக்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கு நற்சான்று கொடுக்கும்



2015 பிப்ரவரி 19] [திரு. ஆர்.என். கிட்டுசாமி]

வகையிலே நடைபெற்ற மக்களவைத் தேர்தலிலே 39 இடங்களுக்கு 37 இடங்களைக் கொடுத்து மிகப் பெரிய வெற்றியைக் கொடுத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, ஸ்ரீரங்கத்தில் நடைபெற்ற இடைத் தேர்தலில் வரலாற்று வெற்றியை இன்றைக்கு மக்கள் வாரி வழங்கியிருக்கிறார்கள். இனி வருகின்ற காலங்களிலே எதிர்க்கட்சிகளே இல்லை, இனிமேல் இருப்பதெல்லாம் உதிரிக் கட்சிகள்தான் என்கின்ற நிலையை உருவாக்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட மக்களுக்கு இந்த நேரத்தில் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்து, ஆளுநர் உரைமீது எனக்குப் பேச வாய்ப்பளித்த மக்களின் முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து இடம் அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள் ** சம்பந்தமாக ஆதாரம் இல்லாமல் குற்றஞ்சாட்டிப் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (20–2–2015) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

10. 2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

11. 2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் நாற்பத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2015 பிப்ரவரி 19

*12. 2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் இருபதாவது ஆண்டறிக்கை.* [*1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ், ஆங்கிலம்)*

*13. 2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் முப்பத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை.* [*1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ், ஆங்கிலம்)*

*14. 2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கிராபைட் நிறுவனத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை.* [*1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ், ஆங்கிலம்)*

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*ஏதுமில்லை.*